778

செல்வன் செந்தமிழ்ச் செல்வம்

OFFICE OF THE REGISTRAR OF
20 DEC 1954

நான்காம் படிவம்
பொதுப் பகுதி

ஜெகசெல்வன் கம்பெனி.
கர்கோவில்-3

TB
631(9)
N54.
146485

செல்வன்

செந்தமிழ்ச் செல்வம்

முதற்புத்தகம்—பொதுப் பகுதி

(நான்காம் படிவத்திற்குரியது)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 DEC 1954

தொகுப்பாசிரியர் :
வித்துவான் ஈ. பண்டார நம்பியார்

பதிப்பாசிரியர் :
வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை

ஜெகசெல்வன் கம்பெனி
நாகர்கோவில்

பதிப்புரிமை] 1954 [விலை ரூ. 1

முதற்பதிப்பு—பிப்பிரவரி, 1953
திருத்தப் பதிப்பு—அக்டோபர், 1954

TB 034.(9) N54

முன்னுரை

'செல்வன் செந்தமிழ்ச் செல்வம்' என்னும் பெயர் புனைந்துள்ள இந்நூல், அரசியலார் அண்மையில் வெளியிட்ட புதிய பாடத்திட்டத்திற்கு ஏற்ப அதன் சீரிய நோக்கம் சிறிதும் வழுவாது வெளி வருகின்றது.

மாணவர்கள் முன்னேற்றத்தையே முக்கிய நோக்கமாகக் கொண்டு கலையுணர்வுடன் செய்யுட்களும் உரை நடைப் பாடங்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அவை மாணவர்களுக்கு நாட்டுப் பற்றும், மொழிப் பற்றும் விளைப்பனவாயும், அறிவு விளக்கத்திற்கு ஏற்றனவாயும் அமைந்துள்ளன.

செய்யுட்பகுதியில் ஆசிரியர் குறிப்பும், குறிப்புரையும், வினாக்களும் அளிக்கப்பட்டுள்ளன. உரை நடைப் பகுதியில் ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் அருஞ்சொற்பொருளும் வினாக்களும் கொடுக்கப்பட்டுள்ளன. இவை மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படும்.

இந்நூலுக்குக் கவிதைகளும், கட்டுரைகளும் தந்துதவிய அறிஞர்களுக்கு என் உள்ளம் நிறைந்த நன்றி உரியதாகுக!

இச்'செந்தமிழ்ச் செல்வ'த்தைத் தமிழகம் ஏற்றருளி மாணவர் உலகம் மாண்புறத் தமிழ்த் தாய் அருள் புரிவாளாக!

தொகுப்பாசிரியர்

சென்னை-600 008.
146485

Kabeer Printing Works, Madras (2702)

பொருள் அடக்கம்

எண் பக்கம்

செய்யுள்

I. வாழ்த்து :

1. தேவாரம் ... 1
2. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் ... 2
3. தேம்பாவணி ... 3
4. திருவருட்பா ... 3
5. திருவிளையாடற்புராணம் ... 4

II. அறவுரை :

1. திருக்குறள் ... 5
2. பழமொழி ... 18
3. அறநெறிச்சாரம் ... 19
4. நான்மணிக்கடிகை ... 21

III. தொடர்நிலைச் செய்யுள் :

1. ஆசிய ஜோதி ... 23
2. இரட்சணிய யாத்திரிகம் ... 27
3. குசேலோபாக்கியானம் ... 31
4. நளவெண்பா ... 37

IV. சிறு நூல்கள் :

1. திருவேங்கடத்தந்தாதி ... 43
2. மதுரைக்கலம்பகம் ... 43
3. கலைசைச் சிலேடை வெண்பா ... 44
4. நால்வர் நான்மணி மாலை ... 45

V. பல்சுவை

1. புறநானூறு ... 47
2. உறுதுயரம் ஒழிந்திடாது. ... 47
3. பெய்யாத மேகத்திடம் பேசியது ... 48
4. வேளாளர் சிறப்பு ... 48
5. உழைக்க வேண்டும் ... 49
6. தமிழன் ... 51

எண் பக்கம்

உரை நடை

1. தலை நிமிர் தமிழா! ... 53
—சுவாமி சுத்தானந்த பாரதியார்
2. பிரதாப முதலியார் பால லீலை ... 54
—ச. வேதநாயகம் பிள்ளை
3. தமிழ்த் தெய்வம் ... 57
—வித்துவான் ஈ. பண்டார நம்பியார்
4. சர்க்கரை ... 62
R. K. விசுவநாதன் அவர்கள், M. A.
5. கலா ரஸனை ... 69
—தொ. மு. பாஸ்கரத்தொண்டைமான் அவர்கள், M.A.
6. நாகனுரும் வளவனும் ... 81
—வித்துவான் ஈ. பண்டார நம்பியார்
7. எக்ஸ்–ரே ... 85
—N. குழந்தைவேலன் அவர்கள், B.A.
8. ஐக்கிய நாடுகளின் சங்கம் ... 89
—C. J. கமலம் அவர்கள், B.A., L.T.
9. அமெரிக்கப் பிரயாணம் ... 94
—டாக்டர் ரா. க. சண்முகம் செட்டியார் அவர்கள், M.A., D. Litt.
10. அன்னைக்கு ... 100
—டாக்டர் மு. வரதராசனுர் அவர்கள், M.O.L., Ph.D.
11. அமரன் ... 102
—தி. அ. சொக்கலிங்கம் அவர்கள், B.A. (Hons.)

நான்காம் படிவம்—பொது

செய்யுள்

I. வாழ்த்து

1. தேவாரம்

[சைவசமய குரவர் நால்வருள் திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும், சுந்தரரும் பாடிய பாடல்களின் தொகுதிக்குத் தேவாரம் என்பது பெயர். தேவாரம் என்பது, தே+வாரம் எனப் பிரிந்து, 'தெய்வத்தைப் பற்றிய இசைப்பாட்டு' எனப் பொருள்படும். இனி, தே+ஆரம் எனப் பிரித்துக் 'கடவுளுக்கு ஆரம் போல்வது' எனப் பொருள் கொண்டு, 'சிவபெருமாளுகிய கடவுளுக்குச் சாத்தப்படும் பூமாலை போன்ற பாமாலை' என உரைப்பினும் அமையும். இது ஏழு-திருமுறைகளாகப் பகுக்கப்பட்டுள்ளது.

இங்குத் தரப்பட்டுள்ள பாடல் திருநாவுக்கரசரால் திருப்பாதிரிப்புலியூர் என்னும் இடத்தில் பாடப்பட்டது. திருநாவுக்கரசர் சமண மதத்தைச் சார்ந்து பின் சைவரானுர். இவர் காலம் கி. பி. 7-ஆம் நூற்ருண்டு என்பர்.]

ஈன்ருளு மாயெனக் கெந்தையு
    மாயுடன் தோன்றினராய்
மூன்ரு யுலகம் படைத்துகந்
    தான்மனத் துள்ளிருக்க
ஏன்ருன் இமையவர்க் கன்பன்
    திருப்பா திரிப்பூலியூர்த்
தோன்ருத் துணையா யிருந்தனன்
    தன்னடி யோங்களுக்கே.

குறிப்புரை :

ஈன்றுளுமாய் - பெற்ற தாயுமாகி, எந்தையுமாய் - என் தந்தையுமாகி, ஏன்ருன் - சம்மதித்துள்ளான், திருப்பாதிரிப்புலியூர் - நடு நாட்டில் கெடில நதியின் தென்கரையிலுள்ள ஒரூர்.

விஞக்கள் :

1. தேவாரம்—பெயர்க் காரணம் யாது?
2. நாவுக்கரசர் இறைவன் கருணைத்திறத்தை எவ்வாறு போற்று-கின்ருர்?
3. இப்பாடலை அருளிய சந்தர்ப்பம் யாது?

2. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்

[இது பெரியாழ்வார் முதலிய ஆழ்வார் பன்னிருவர் அருளிச்-செய்த நாலாயிரம் பாடல்களைக் கொண்ட ஒரு நூல்; முதலாயிரம், பெரிய திருமொழி, இயற்பா, திருவாய்மொழி என்னும் நான்கு பிரிவுகளை உடையது. இங்குத் தரப்பட்டுள்ள பாடல் முதலாயிரத்தில் ‘பெருமாள் திருமொழி’ என்னும் பகுதியில் உள்ளது. இதனைப் பாடியவர் குலசேகராழ்வார். இவர் சேரநாட்டரசர்; எட்டாம் நூற்-ருண்டினர் என்பர்.]

அங்கணெடு மதிள்புடைசூழ் அயோத்தி யென்னும்
அணிநகரத் துலகனைத்தும் விளங்கும் சோதி
வெங்கதிரோன் குலத்திற்கோர் விளக்காய்த் தோன்றி
விண்முழுதும் உயக்கொண்ட வீரன் தன்னைச்
செங்கணெடுங் கருமுகிலை இராமன் தன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந் தன்னுள்
எங்கள்தனி முதல்வனைஎம் பெருமான் தன்னை
என்றுகொலோ கண்குளிரக் காணும் நாளே!

குறிப்புரை :

அம் - அழகிய, புடை - பக்கம், அணி - அழகு, செங்கதிரோன் - சூரியன், முகில் - மேகம், தில்லை - சிதம்பரம்.

விஞக்கள் :

1. பெருமாள் திருமொழி—பெயர்க் காரணம் யாது?
2. குலசேகராழ்வார் யாது கூறிக் கவலைப்படுகின்ருர்?
3. இப்பாடலில் திருமாலின் எந்த அவதாரச் சிறப்புக் கூறப்படு-கின்றது?

3. தேம்பாவணி

['தேம்பாவணி' என்பது தேம்பா+அணி எனப் பிரிந்து, 'வாடாத மாலை' எனப் பொருள்படும். இது ஒரு சிறந்த கிறித்தவத் தமிழ்க் காப்பியம். இதில் சூதேய நாட்டில் பிறந்து புகழ் பெற்ற சூசை-மாமுனிவர் வரலாறு கூறப்படுகிறது. இந்நூலாசிரியர் வீரமா முனிவர் என்னும் கிறித்தவப் பாதிரியார். இவர் இத்தாலி நாட்டினர். இவர் இயற்பெயர் பெஸ்கி. இவர் தமிழில் பல நூல்களை இயற்றியுள்ளார்; காலம், 18-ஆம் நூற்றுண்டு.]

அறக்கடல் நீயே! அருட்கடல் நீயே!
அருங்கரு ணுகரன் நீயே!
திறக்கடல் நீயே! திருக்கடல் நீயே!
திருந்துளம் ஒளிபட ஞான
நிறக்கடல் நீயே! நிகர்கடந் துலகில்
நிலையும்நீ! உயிரும்நீ! நிலைநான்
பெறக்கடன் நீயே! தாயும்நீ! எனக்குப்
பிதாவும்நீ! அனைத்தும்நீ யன்றோ?

குறிப்புரை:

கருணுகரன் - கருணைக்கு இருப்பிடமானவன், திறம் - திறமை, திரு - செல்வம், உளம் ஒளி பட - உள்ளம் ஞானப் பிரகாசத்தை அடைய, திருந்து - தெளிவான, ஞான நிறம் - ஞானப் பிரகாசம்.

வினுக்கள்:

1. தேம்பாவணி—பெயர்க் காரணம் யாது?
2. இந்நூலாசிரியர் யார்?
3. இந்நூலில் யாருடைய வரலாறு கூறப்படுகின்றது?
4. வீரமா முனிவர் கடவுளின் கருணைத் திறத்தை எவ்வாறு வியந்து போற்றுகின்றுர்?

4. திருவருட்பா

['திருவருட்பா' என்பது, திரு+அருள்+பா எனப் பிரிந்து, 'கடவுளின் திருவருளினுல் தோன்றிய பாடல்' எனப் பொருள் படும். இந்நூலைப் பாடியவர் இராமலிங்க சுவாமிகள். இவர் கி. பி. 1823ல் சிதம்பரத்தை அடுத்த மருதூரில் அவதரித்தார்; சமரசசன்மார்க்க நோக்கமுடையவர். மனு முறை கண்ட வாசகம், ஜீவகாருணிய ஒழுக்கம் முதலியன இவரியற்றிய வேறு நூல்கள். இவர் பாடல்கள் படிப்பவரைப் பரவசப்படுத்தும் பத்திச்சுவை நிரம்பியவை.]

அருளா!நான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும் ;
அணுத்துணையும் சினம்காமம் அடையாமை வேண்டும்;
மருளாய உலகமெலாம் மருள் நீங்கி ஞான
மன்றிடத்தே வள்ளல்!உனை வாழ்த்தியிடல் வேண்டும் ;
இருளாமை உறல்வேண்டும் ; எனையடுத்தார் சுகம்வாய்ந்
திடல்வேண்டும்; எவ்வுயிரும் இன்படைதல் வேண்டும்;
பொருளாம்ஓர் திருவடிவில் உடையாயும் நானும்
புணர்ந்துகலந் தொன்றாகிப் பொருந்துதல்வேண் டுவனே

குறிப்புரை :

அருளா - அருள் வடிவான இறைவனே, அணுத்துணையும் - அணு அளவும், சினம் - கோபம், மருள் - அறியாமை.

வினாக்கள் :

1. திருவருட்பா—பெயர்க் காரணம் யாது ?
2. ஆசிரியர் இறைவனிடம் வேண்டுவன யாவை ?
3. இராமலிங்கர் இறைவனை எவ்வாறு விளிக்கின்றார் ? அவ்வாறு விளிக்கக் காரணம் என்ன ?

5. திருவிளையாடற்புராணம்

[இது பாண்டி நாட்டில் மதுரையம்பதியில் எழுந்தருளியுள்ள சோம சுந்தரக் கடவுள் செய்தருளிய அறுபத்து நான்கு திருவிளையாடல்களைக் கூறும் நூல். தமிழில் இத்திருவிளையாடலைக் கூறும் நூல்கள் நான்கு உண்டு. இங்குப் பாடமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பாடல் செல்லி நகரப் பெரும்பற்றப்புலியூர் நம்பி இயற்றிய நூலில் உள்ளது. ஆசிரியர் தம்மைக் காக்குமாறு கலை மகளை வேண்டுகின்றார்.]

ஆடகன்நா நின்றுறையும் அன்னமே ! நின்னுடைய
பாடகமும் சீறடியும் பற்றினேன் ;—தேடரிய
அற்புதமே ! அம்மே ! அணங்கே ! மணநாறும்
கற்பகமே ! நாயேனைக் கா.

குறிப்புரை :

ஆடகன் - பிரமன், பாடகம் - பெண்கள் அணியும் ஒரு வகைக் காலணி, அணங்கே - தெய்வப் பெண்ணே, கா - காப்பாற்றுவாயாக.

வினாக்கள் :

1. கவிஞர் கலை மகளை எப்படியெல்லாம் விளிக்கின்றார் ?
2. கலை மகள் உறைவிடம் எது ?
3. ஆசிரியர் கலை மகளிடம் வேண்டுவது என்ன ?

II. அறவுரை

1. திருக்குறள்

[மேன்மை பொருந்திய குறள் வெண்பாக்களினலாகிய நூலுக்குத் திருக்குறள் என்பது பெயர். இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பால்களையும், ஏழு இயல்களையும், நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களையுமுடையது. அதிகாரம் ஒவ்வொன்றும் பப்பத்துக் குறட்பாக்களையுடையது. ஆகவே, இந்நூல் 1330 குறட்பாக்களால் ஆக்கப்பட்டிருக்கிறது. இது கடைச்சங்க காலத்தில் தோன்றிய பதினெண்கீழ்க்கணக்கைச் சார்ந்தது; தமிழ் மறை என்றும், பொது மறை என்றும் போற்றப்படுவது. இதன் ஆசிரியர் திருவள்ளுவர். இவர் பிறப்பிடம் திருமயிலை என்பர்; மதுரை என்று கூறுவாருமுளர். இவர் காலம் கடைச்சங்க காலம். இவர் 'எம்மதமும் சம்மதம்' என்ற கொள்கையுடையவர். இவர் நூல் உலக மொழிகள் பலவற்றில் மொழி பெயர்க்கப்பட்டு, எல்லோராலும் போற்றப்படுகின்றது. 'வள்ளுவன் தன்னை உலகினுக்கேதந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்பது பாரதியார் வாக்கு.]

கடவுள் வாழ்த்து

கற்றதனல் ஆய பயன்என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்? 1

வான் சிறப்பு

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை. 2

அறன் வலியுறுத்தல்

அழுக்காறு, அவாவெகுளி இன்னச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற(து) அறம். 3

அன்புடைமை

அன்பீனும் ஆர்வம் உடைமை; அதுஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு. 4

விருந்தோம்பல்

செல்விருந்(து) ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு. 5

இனியவை கூறல்

அகனமர்ந்(து) ஈதலின் நன்றே, முகனமர்ந்(து)
இன்சொலன் ஆகப் பெறின். 6

செய்ந்நன்றியறிதல்

பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது. 7

நடுவு நிலைமை

கெடுவாக வையா(து) உலகம் நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு. 8

அடக்கம் உடைமை

தீயினால் சுட்டபுண் உள்ளாறும்; ஆறாதே
நாவினால் சுட்ட வடு. 9

ஒழுக்கம் உடைமை

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்; தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும். 10

பொறை உடைமை

ஒறுத்தாரை ஒன்றாக வையாரே; வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து. 11

தீவினை அச்சம்

தீயவை செய்தார் கெடுதல், நிழல்தன்னை
வீயா(து) அடியுறைந் தற்று. 12

ஒப்புரவு அறிதல்

தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு. 13

ஈகை

சாதலின் இன்னாத தில்லை; இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை. 14

புகழ்

ஒன்றா உலகத்(து) உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன்(று) இல். 15

அருள் உடைமை

வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்
மெலியார்மேல் செல்லும் இடத்து. 16

தவம்

சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு. 17

கூடா ஒழுக்கம்

கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங்(கு) அன்ன
வினைபடு பாலாற் கொளல். 18

வாய்மை

வாய்மை எனப்படுவ தியாதெனின், யாதொன்றும்
தீமை இலாத சொலல். 19

வெகுளாமை

செல்லிடத்துக் காப்பான் சினம்காப்பான் ; அல்லிடத்துக்
காக்கினென், காவாக்கால் என் ? 20

இன்னா செய்யாமை

தன்னுயிர்க் கின்னாமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல் ! 21

நிலையாமை

நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும். 22

துறவு

யாதனின் யாதனின் நீங்கியான், நோதல்
அதனின் அதனின் இலன். 23

அவாவறுத்தல்

அஞ்சுவ தோரும் அறனே ; ஒருவனை
வஞ்சிப்ப தோரும் அவா. 24

இறை மாட்சி

இன்சொலால் ஈத்தளிக்க வல்லாற்குத் தன்சொலால்
தான்கண் டனைத்திவ் வுலகு. 25

கல்வி

உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
கடையரே கல்லா தவர். 26

கல்லாமை

உளரென்னும் மாத்திரையர் அல்லால், பயவாக்
களரனையர் கல்லா தவர். 27

கேள்வி

நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய
வாயின ராத லரிது. 28

அறிவுடைமை

எதிரதாக் காக்கும் அறிவினார்க்(கு) இல்லை
அதிர வருவதோர் நோய். 29

குற்றங்கடிதல்

செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்
பெருக்கும் பெருமித நீர்த்து. 30

பெரியாரைத் துணைக்கோடல்

முதலிலார்க்(கு) ஊதியம் இல்லை ; மதலையாம்
சார்பிலார்க்(கு) இல்லை நிலை. 31

சிற்றினஞ்சேராமை

மனநலம் மன்னுயிர்க்(கு) ஆக்கம் ; இனநலம்
எல்லாப் புகழும் தரும். 32

தெரிந்து செயல் வகை

ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும். 33

வலியறிதல்

ஆகா(று) அளவிட்டி தாயினும் கேடில்லை
போகா(று) அகலாக் கடை. 34

காலம் அறிதல்

ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேரும் தகைத்து. 35

இடன் அறிதல்

ஆற்றாரும் ஆற்றி அடுப இடனறிந்து
போற்றார்கண் போற்றிச் செயின். 36

தெரிந்து தெளிதல்

குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்
நாணுடையான் கட்டே தெளிவு. 37

தெரிந்து வினையாடல்

அறிந்தாற்றிச் செய்கிற்பாற்(கு) அல்லால் வினைதான்
சிறந்தான்என்(று) ஏவற்பாற்(று) அன்று. 38

செங்கோன்மை

குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று ; வேந்தன் தொழில். 39

கொடுங்கோன்மை

வேலொடு நின்ருன் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்ருன் இரவு. 40

வெருவந்த செய்யாமை

அருஞ்செவ்வி இன்ஞ முகத்தான் பெருஞ்செல்வம்
பேஎய்கண்(டு) அன்ன(து) உடைத்து. 41

கண்ணேட்டம்

மண்ணெ(டு) இயைந்த மரத்தனையர் கண்ணெ(டு)
இயைந்துகண் ஓடா தவர். 42

ஒற்ருடல்

கடாஅ உருவொடு கண்ணஞ்சா தியாண்டும்
உகாஅமை வல்லதே ஒற்று. 43

ஊக்கம் உடைமை

உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து
வள்ளியம் என்னும் செருக்கு. 44

ஆள்வினையுடைமை

பொறியின்மை யார்க்கும் பழியன்(று) ; அறிவறிந்(து)
ஆள்வினை இன்மை பழி. 45

இடுக்கண் அழியாமை

மடுத்தவாய் எல்லாம் பகடன்னன் உற்ற
இடுக்கண் இடர்ப்பா(டு) உடைத்து. 46

அமைச்சு

செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்(து)
இயற்கை அறிந்து செயல். 47

சொல் வன்மை

கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல். 48

வினைத்தூய்மை

எற்றென்(று) இரங்குவ செய்யற்க ; செய்வானேல்,
மற்றன்ன செய்யாமை நன்று. 49

வினைத்திட்பம்

கடைக்கொட்கச் செய்தக்க(து) ஆண்மை ; இடைக்கொட்கின்,
எற்றா விழுமம் தரும். 50

வினை செயல் வகை

வினையால் வினையாக்கிக் கோடல், நனைகவுள்
யானையால் யானையாத் தற்று. 51

தூது

கடனறிந்து காலம் கருதி இடனறிந்(து)
எண்ணி உரைப்பான் தலை. 52

குறிப்பறிதல்

முகத்தின் முதுக்குறைந்த(து) உண்டோ ? உவப்பினும்
காயினும் தான்முந் துறும். 53

அவையஞ்சாமை

பகையகத்துச் சாவார் எளியர் ; அரியர்
அவையகத்(து) அஞ்சா தவர். 54

நாடு

பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு. 55

அரண்

சிறுகாப்பின் பேரிடத்த(து) ஆகி உறுபகை
ஊக்கம் அழிப்ப(து) அரண். 56

பொருள் செயல் வகை

அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள். 57

படை மாட்சி

ஒலித்தக்கால் என்னும் உவரி ? எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும். 58

படைச்செருக்கு

கைவேல் களிற்றெடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும். 59

நட்பு

நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு. 60

நட்பு ஆராய்தல்

ஊதியம் என்ப(து) ஒருவற்குப் பேதையார்
கேண்மை ஒரீஇ விடல். 61

கூடா நட்பு

தொழுதகை யுள்ளும் படையொடுங்கும், ஒன்னுர்
அழுதகண் நீரும் அனைத்து. 62

பேதைமை

நாணுமை, நாடாமை, நாரின்மை, யாதொன்றும்
பேணுமை பேதை தொழில். 63

புல்லறிவாண்மை

ஏவவும் செய்கலான், தான்தேருன், அவ்வுயிர்
போஒம் அளவுமோர் நோய். 64

இகல்

இகலிற்(கு) எதிர்சாய்தல் ஆக்கம் ; அதனை
மிகலூக்கின் ஊக்குமாம் கேடு. 65

பகை மாட்சி

அஞ்சும், அறியான், அமைவிலன், ஈகலான்
தஞ்சம் எளியன் பகைக்கு. 66

பெரியாரைப் பிழையாமை

எரியால் சுடப்படினும் உய்வுண்டாம்; உய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார். 67

மருந்து

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்(கு) அருந்திய(து)
அற்றது போற்றி உணின். 68

குடிமை

சலம்பற்றிச் சால்பில செய்யார்'மா சற்ற
குலம்பற்றி வாழ்தும்'என் பார். 69

மானம்

பெருக்கத்து வேண்டும் பணிதல்; சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு. 70

பெருமை

பணியுமாம் என்றும் பெருமை; சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து. 71

சான்றாண்மை

இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு? 72

பண்புடைமை

உறுப்பொத்தல் மக்களொப்(பு) அன்றால்; வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு. 73

நன்றியில் செல்வம்

கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்(கு) அடுக்கிய
கோடியுண் டாயினும் இல். 74

நாணுடைமை

ஊணுடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல;
நாணுடைமை மாந்தர் சிறப்பு. 75

குடி செயல் வகை

குடிசெய்வார்க்(கு) இல்லை பருவம்; மடிசெய்து
மானம் கருதக் கெடும். 76

உழவு

சுழன்றும்ஏர்ப் பின்ன(து) உலகம் ; அதனுல்,
உழந்தும் உழவே தலை. 77

நல்குரவு

நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் ; நிரப்பினுள்
யாதொன்றும் கண்பா(டு) அரிது. 78

இரவு

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின், பரந்து
கெடுக உலகியற்றி யான். 79

கயமை

சொல்லப் பயன்படுவர் சான்றோர் ; கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ். 80

குறிப்புரை :

1. வாலறிவன் - மெய்யுணர்வினையுடையவன் (இறைவன்), கொல் - அசை.

2. துப்பார்க்கு - உண்பார்க்கு, துப்பு ஆய - நல்லதாகிய, துப்பு - உணவு.

3. அழுக்காறு - பொருமை, அவா - பேராசை, வெகுளி - கோபம், இன்னுச்சொல் - கடுஞ்சொல், இழுக்கு - குற்றம்.

4. 'அன்பு ஆர்வமுடைமை ஈனும் ; அது நண்பு என்னும் நாடாச் சிறப்பு ஈனும்,' என்று மாற்றிப் பொருள் கொள்க. ஆர்வம் - விருப்பம், நாடா - அளவிட முடியாத.

5. செல்விருந்து - வந்தவிருந்து, ஓம்பி-உபசரித்து, வானத்தவர்க்கு நல்விருந்து - மறுபிறப்பில் தேவனுய் வானில் உள்ளார்க்கு நல்ல விருந்தினுவான்.

6. அகன் அமர்ந்து - மனம் மகிழ்ந்து, முகன் அமர்ந்து - முகம் மகிழ்ந்து, அகன், முகன் - கடைப்போலிகள்.

7. பயன் - பிரயோஜனம், தூக்கார் - ஆராயாதவராய், நயன் - நன்மை.

8. நடுவு ஆக - நடுவு நிலைமையோடு, நன்றி - அறம், தாழ்வு - கேட்டை, உலகம் - இடவாகுபெயர்.

9. உள் - மனத்தில். ஆறிவிடுவதால் தீயினுல் சுட்டதனைப் 'புண்' என்றும், ஆருதிருத்தலால் நாவினுல் சுட்டதனை 'வடு' என்றும் கூறினர். இது வேற்றுமை அணி.

10. வித்தாகும் - காரணமாகும், இடும்பை - துன்பம்.

11. ஒறுத்தாரை - தண்டித்தவர்களை, ஒன்ருக - ஒரு பொருளாக, வையார் - நினைக்கமாட்டார்கள், பொதிந்து வைப்பர் - நன்ருகப் போற்றுவர்.

12. வீயாது - விட்டு நீங்காமல், உறைந்தற்று - தங்குவதற்கு ஒப்பாகும்.

13. தாள் - முயற்சி, வேளாண்மை - உதவி.

14. சாதலின் - இறத்தலைப்போல, இன்னாதது - துன்பம் தருவது, இயையாக்கடை - இயலாத போது.

15. ஒன்று - தனக்கு ஒப்புமை இல்லாது, பொன்றுது - அழியாமல்.

16. மெலியவர்களை வலியவர்கள் எதிர்க்கும்போது, தாங்கள் தங்களை-விட வலியவர்முன் அகப்பட்டால் எப்படி இருக்கும் என்பதை எண்ணி-னால், எல்லா உயிர்களிடத்தும் அருள் ஏற்படும் என்பதாம்.

17. நோற்கிற்பவர்க்கு - தவம் செய்பவர்க்கு, ஒளி விடும் - ஞானம் மிகும்.

18. கணை - அம்பு, வினைபடுபாலால் - அவர்கள் செய்கைக் கூறுபாடுகளால்.

19. வாய்மை - உண்மை, தீமை இலாத சொலல் - தீங்கு சிறிதும் பயவாத சொற்களைச் சொல்லுதல்.

20. செல் இடம் - தன் கோபம் பலிக்கும் இடம், அல்லிடம் - கோபம் பலியாத இடம்.

21. இன்னாமை - துன்பம், மன் உயிர்க்கு - நிலைபேறுடைய பிற உயிர்களுக்கு.

22. நாச்செற்று - நாவையடக்கி, மேல் சென்று - விரைந்து.

23. யாதனின் - எந்தப் பொருளினின்று, நீங்கியான் - ஆசையற்றவன், நோதல் - துன்பம் அடைதல்.

24. 'ஒருவனை வஞ்சிப்பது அவா ; (ஆதலின்) அஞ்சுவது அறன்,' என மாற்றிப் பொருள் கொள்ளுக. அஞ்சுவது அறன் - அவாவை அஞ்-சிக் காப்பதே அறமாகும்.

25. தான் கண்ட அனைத்து - தான் எண்ணியபடி நடக்கும் தன்மை உடையதாகும், ஈத்து - ஈதலைச் செய்து.

26. உடையார் முன் - செல்வர்கள் முன்னிலையில், ஏக்கற்றும் - பணிந்தும், 'கடையர்' என்றதனால், அதன் மறுதலைச் சொல்லான 'தலையாயினர்' என்ற சொல்லை வருவித்து உரைக்க.

27. மாத்திரையர் - தன்மையுடையவர், பயவா - தமக்கும் பிறர்க்கும் பயன்படாத (ஒன்றும் விளையாத).

28. நுணங்கிய - நுட்பமான, வணங்கிய வாயினர் - பணிவான பேச்சை உடையவர்.

29. எதிரதாக் காக்கும் - எதிர்காலத்தில் நடப்பதை முன்னமே அறிந்து காக்க வல்ல, அதிர - நடுங்க, நோய் - துன்பம்.

30. பெருக்கம் - செல்வம், பெருமித நீர்த்து - சிறந்த தன்மை வாய்ந்தது.

31. முதல் இலார்க்கு-முதற்பொருளில்லாத வணிகர்க்கு, ஊதியம் - இலாபம், மதலையாம் சார்பு – தம்மைத் தாங்குவதாம் துணை.

32. மன நலம் - மனத்தூய்மை, மன்னுயிர்க்கு - நிலை பெற்ற உயிர்கட்கு.

33. போற்றினும் - காப்பாற்றினாலும், வருத்தம் - முயற்சி, பொத்துப்படும் - அழிந்து போகும்.

34. ஆகு ஆறு - செல்வம் வரும் வழி, இட்டிது - சிறியது.

35. தகர் - ஆட்டுக்கடா, பேரும் - பின் வாங்குகின்ற.

36. அடுப - வெல்வர், போற்ருர்கள் - பகைவர்கள்.

37. வடுப்பரியும் - பழிக்கு அஞ்சும், நாணுடையான்கட்டே - நாணுடையவனிடமே.

38. ஏவல் பாற்று - ஏவுந்தன்மையுடையது.

39. கடிதல் - தண்டித்தல், வடுவன்று - பழியன்று.

40. வேலொடு நின்ருன் - வேல்கொண்டு நின்ற கள்வன், இரவு - பொருள் வசூலித்தல்.

41. அருஞ்செவ்வி - காட்சிக்கு அருமை.

42. கண்ணேடாதவர் - கருணை இல்லாதவர்.

43. கடா - ஐயத்திற்கு இடமில்லாத, உகாமை - மனத்திலுள்ளவற்றை வெளிப்படுத்தாமை.

44. உள்ளம் - ஊக்கம்.

45. ஆள்வினை இன்மை - முயற்சி இல்லாமை, பொறி - ஊழ்.

46. மடுத்த - தடைப்படும், பகடு - காளைமாடு, இடுக்கண் - துன்பம், இடர்ப்பாடு உடைத்து - துன்பத்தை உடையது.

47. அறிந்தக் கடைத்தும் - அறிந்த போதிலும்.

48. பிணிக்கும் - கட்டும், அவாய் - விரும்பி, கேளார் - பகைவர், வேட்ப - விரும்பும்படி.

49. எற்று - எத்தன்மையானது, அன்ன - அப்படிப்பட்ட.

50. கடைக்கொட்க - முடிவில் வெளிப்படும்படி, இடைக்கொட்கின் - இடையில் தெரிந்தால், எற்ரு - நீங்காத.

51. நனைகவுள் - மதநீரால் நனைந்த தாடை, யாத்தற்று - பிணித்தற்கு ஒப்பாகும்.

52. கடன் - முறைமை, தலை - முதல்வன் ஆவன்.

53. காயினும் - வெறுத்தாலும், முந்துறும் - முற்பட்டு நிற்கும், முதுக்குறைந்தது - அறிவு மிக்கது.

54. போர்முகத்துச் சென்று போர் புரிதல் எளிது என்பதும், கற்ருேர் சபையில் சென்று பேசுதல் அரிது என்பதும் கூறப்பட்டுள்ளன.

55. குழு - கூட்டம், கொல் குறும்பு - கொல்லும் தன்மை வாய்ந்த குறும்பர்கள்.

56. சிறு காப்பு - எளிய பாதுகாப்பு.

57. ஈனும் - கொடுக்கும். ‘ நல்ல வழியில் ஈட்டிய செல்வம் அறம் இன்பம் இரண்டையும் தரும்,’ என்பது கருத்து.

58. உவரி - கடல், உயிர்ப்ப - மூச்சு விட.

59. போக்கி - எறிந்து, பறியா - பறித்து வீசி.

60. பயில்தொறும் - பழகும் போதெல்லாம், தொடர்பு - நட்பு.

61. ஊதியம் - இலாபம், ஒரீஇவிடல் - நீக்கிவிடுதல்.

62. ஒன்னர் - பகைவர், படை - ஆயுதம்.

63. நாடாமை - தேடாதிருப்பது, நார் - அன்பு, பேணமை - காப்பாற்ருதிருத்தல்.

64. ஏவவும் - (அறிவுடையார் இவ்வாறு செய் என்று) கட்டளையிடவும், தான் தேறுன் - தானுகவும் இவை செய்யத்தக்கனவென்று அறியான்.

65. இகலிற்கு - (மனத்தில் தோன்றும்) மாறுபட்ட கருத்திற்கு, எதிர் சாய்தல் - உட்படாதிருத்தல், ஆக்கம் - செல்வம், மிகல் ஊக்கின் - மிகுதி யாக முயன்ருல்.

66. அமைவு இலன் - மற்றவருடன் சேர்ந்து வாழாதவன்.

67. உய்வுண்டாம் - பிழைத்தல் கூடும். ‘ பெரியார் சினத்திற்காளா-ஞேர் பிழைக்க முடியாது,’ என்பது கருத்து.

68. அருந்தியது - முதலில் சாப்பிட்ட உணவு, அற்றது - ஜீரண மானதை.

69. குலம் - குடிப்பெருமை, சலம் பற்றி - வஞ்சக எண்ணங்கொண்டு.

70. பெருக்கத்து - நிறைந்த செல்வம் உள்ளவிடத்து, சிறிய சுருக் கத்து - குறைந்த வறுமை உள்ளவிடத்து.

71. தன்னை வியந்து - தன்னைப் புகழ்ந்துகொண்டு.

72. என்ன பயத்தது - என்ன பயனை உடையது ?

73. பண்பு - நற்குணம். ‘ குணத்தினுல் நன்மக்களோடு ஒத்திருத்தல் வேண்டும்,’ என்பதாம்.

74. துய்ப்பது - அனுபவிப்பது.

75. எச்சம் - மற்ற எல்லாம்.

76. பருவம் - காலம், மடி - சோம்பல்.

77. சுழன்றும் - பல வேறு தொழில்களில் ஈடுபட்டு அலைந்தும், உழந்தும் - வருந்தியும்.

78. துஞ்சல் - உறங்குதல், நிரப்பினுள் - வறுமையில், கண்பாடு - உறங்குதல்.

79. உலகு இயற்றியான் - உலகைப் படைத்த இறைவன், பரந்து - அலைந்து.

80. கொல்ல - கசக்கிப்பிழிய, கீழ் - கீழோர் (கயவர்)

வினுக்கள்

1. திருக்குறளின் பெருமை யாது ?
2. கல்வியின் பயன் யாது ?
3. அறமாவது யாது ?
4. ‘ நல்விருந்து வானத்தவர்க்கு ’—யார் ?
5. ‘ ஈதலின் நன்று ’—எது ?
6. ‘ கடலிற்பெரிது ’—எது ? ஏன் ?
7. என்றும் இடும்பை தருவது எது ?
8. தீயவை செய்தார் கெடுவதற்கு வள்ளுவர் கூறும் உவமானம் யாது ?
9. சாதல் இனிதாவது எப்பொழுது ?
10. உலகில் பொன்ருது நிற்பது எது ?
11. மெலியார்மேல் செல்லுமிடத்து நினைக்க வேண்டுவது யாது ?
12. வாய்மைக்கு வள்ளுவர் கூறும் இலக்கணம் யாது ?

13. களரனையர்—யார் ?

14. வணங்கிய வாயினர் ஆதல் அரிது—யாருக்கு ?

15. 'முதலிலார்க்கு ஊதியம் இல்லை,' என்ற உவமையால் விளங்கும் உண்மை யாது ?

16. எல்லாப் புகழும் தருவது எது ?

17. எப்பொழுது செலவு அதிகரித்தாலும் கேடில்லை ?

18. வேந்தன் தொழில் எது ?

19. மண்ணொடு இயைந்த மரத்தனையர்—யார் ?

20. ஒருவனுக்குப் பழியாவது யாது ?

21. 'நாடு' என்பதற்குத் திருவள்ளுவர் கூறும் இலக்கணம் யாது ?

22. பண்புடையாளர் தொடர்பு எதற்கு ஒப்பாகும் ?

23. யாக்கைக்கு எப்பொழுது மருந்து வேண்டா ?

24. பணிதல், உயர்வு—இவை எப்பொழுது வேண்டும் ?

25. சால்பு எப்பொழுது பயனுடையதாகும் ?

26. 'உழவே தலை' என்பதற்குத் திருவள்ளுவர் கூறும் காரணம் யாது ?

2. பழமொழி

['பழமொழி' என்பது பழமை+மொழி எனப்பிரிந்து 'பழைய காலம் தொட்டுப் பழகி வரும் மொழி' எனப் பொருள்படும். இந்நூலில் ஒவ்வொரு பாவின் இறுதியிலும் ஒவ்வொரு பழமொழி பொருந்தியுள்ள-மையால், இந்நூல் 'பழமொழி' எனப் பெயர் பெற்றது. இந்நூல் நானூறு பாக்களையுடையது. ஆதலின், இதனைப் 'பழமொழி நானூறு' என்றுங் கூறுவர். இதுவும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இதன் ஆசிரியர் **முன்றுறையரையனார்** என்னும் அரசர். இவர் சமண சமயத்தினர்; கி. பி. 6 அல்லது 7-ஆம் நூற்றாண்டினர் என்பர்.]

கல்வியின் சிறப்பு

ஆற்றவும் கற்றார் அறிவுடையார்; அஃதுடையார்
நாற்றிசையும் செல்லாத நாடில்லை; அந்நாடு
வேற்றுநா டாகா; தமவேயாம்; ஆயினால்,
ஆற்றுணா வேண்டுவ தில். 1

குலவித்தை

'உரைமுடிவு காணான், இளமையோன்,' என்ற
நரைமுது மக்கள் உவப்ப—நரைமுடித்துச்
சொல்லால் முறைசெய்தான் சோழன்; **குலவிச்சை
கல்லாமல் பாகம் படும்.** 2

சிறியார்க்குச் செய்யும் சிறப்பு

பெரியோர்க்குச் செய்யும் சிறப்பினைப் பேணிச்
சிறியோர்க்குச் செய்து விடுதல்—பொறிவண்டு
பூமேல் இசைமுரலும் ஊர ! அதுவன்றே
நாய்மேல் தவிசிடும் ஆறு ? 3

ஒழுக்கம்

கெடுவல் எனப்பட்ட கண்ணும் தனக்கோர்
வடுவல்ல செய்தலே வேண்டும்—நெடுவரை
முற்றுநீர் ஆழி வரையகத்(து) ஈண்டிய
கற்றேயும் ; தேயாது சொல். 4

பேதை தன் வாயால் கெடுவான்

பொல்லாத சொல்லி மறைந்தொழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கும் ;—நல்லாய் !
மணலுள் முழுகி மறைந்து கிடக்கும்
நுணலும்தன் வாயால் கெடும். 5

குறிப்புரை :

1. ஆற்றவும் - மிகவும், தமவே - தம்முடைய நாடுகளே, ஆறு + உணு = ஆற்றுணு - கட்டுச்சோறு.

2. நரை முது மக்கள் - நரைத்த கிழவர்கள், நரை முடித்து - நரை முடியைத் தலையில் தரித்து, முறை செய்தான் - நீதி வழங்கினுன், சோழன்- கரிகாற்பெருவளத்தான், குலவிச்சை - குலத்துக்குரிய வித்தைகள், பாகம்படும் - செம்பாகமாய் அமையும்.

3. பேணி - விரும்பி, பொறி வண்டு - புள்ளிகளையுடைய வண்டு, முரலும் - ஒலிக்கும், தவிசு - ஆசனம்.

4. நெடுவரை - பெரிய மலையாகிய சக்கரவாளகிரி, கற்றேயும் - கல் தேயும் - மலைகள் தேய்வடையும், வடு - பழி, ஆழி - கடல். ‘வில்லம்பில் சொல்லம்பே மேலதிகம்,’ என்பது இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

5. பேதை - மூடன், நல்லாய் - பெண்ணே (மகடூஉ முன்னிலை), நுணல் - தவளை.

வினுக்கள் :

1. ஆற்றுணு வேண்டுவதில்—யாருக்கு ? ஏன் ?

2. நரை முடித்து முறை செய்த சோழன் யார் ? அவன் வரலாற்றால் அறியப்படும் உண்மை யாது ?

3. ‘ நாய்மேல் தவிசிடுமாறு ’—எது ?

4. ‘ கல்தேயும் ; சொல் தேயாது ’—ஆதலால், நாம் செய்ய வேண்டுவது யாது ?

5. ‘பேதை தன் வாயால் கெடுவான்,’ என்பதை ஆசிரியர் எவ்வுவமையால் விளக்குகின்றார் ?

3. அறநெறிச்சாரம்

['அறநெறிச்சாரம்' என்பது, அறம்+நெறி+சாரம் எனப் பிரிந்து, 'தரும வழிகளுள் சாரமாய்ச் சிறந்தவற்றைக் கூறும் நூல்' எனப் பொருள்படும். இந்நூலாசிரியர் முனைப்பாடியார் என்பவர். இவர் பெயரால் இவர் திருமுனைப்பாடி நாட்டினராய் இருக்கலாம் என்று ஊகிக்கின்றனர். இவர் தீபங்குடியைச் சார்ந்தவர் என்று கூறுவாருமுளர். இவர் காலம், சுமார் 500 ஆண்டுகட்கு முன்னது என்பர்.]

தந்நலமற்ற பெரியோர் தாயினையொப்பர்

காலொடு கையமுக்கிப் பிள்ளையை வாய்நெரித்துப்
பாலொடு நெய்பெய்யும் தாயனையர்—சால
அடக்கத்தை வேண்டி அறன்வலிது நாளும்
கொடுத்துமேற் கொண்டொழுகு வார். 1

பழிப்பில்லாத வாழ்க்கைக்குரியன

தானத்தின் மிக்க தருமமும், தக்கார்க்கு
ஞானத்தின் மிக்க உசாத்துணையும்,—மானம்
அழியா வொழுக்கத்தின் மிக்கதூஉ மில்லை
பழியாமல் வாழுந் திறம். 2

உயர்குணங்கள் மூன்று

தூயவாய்ச் சொல்லாடல் வன்மையும், துன்பங்கள்
ஆய பொழுதாற்று மாற்றலும்,—காய்விடத்து
வேற்றுமை கொண்டாடா மெய்ம்மையு மிம்மூன்றும்
சாற்றுங்காற் சாலத் தலை. 3

தீய மக்களினும் விலங்குகள் மிக நல்லன

இக்காலத் திவ்வுடம்பு செல்லும் வகையினல்
பொச்சாவாப் போற்றித்தா நோற்பாரை—மெச்சா(து)
அலந்துதம் வாய்வந்த கூறு மவரின்
விலங்குகள் நல்ல மிக. 4

அறிஞர் கடமை

வயிறு நிறைக்குமேல் வாவின்மிக் கூறிச்
செயிரிடைப்பா டெய்துமாஞ் சீவன்—வயிறுமோர்
பெற்றியா லார்த்திப் பெரும்பயன் கொள்வதே
கற்றறிந்த மாந்தர் கடன். 5

குறிப்புரை

1. வாய் நெரித்து - வாயைப் பிளந்து, நெய் - ஆமணக்கு நெய், சால - மிக, வலிது கொடுத்து - வற்புறுத்திக் கூறி, மேற்கொண்டு ஒழுகுவார் - அடக்கியாளும் பெரியோர்.

2. தக்கார்க்கு - பெரியோர்க்கு, உசாத்துணையும் - ஆராயுந்துணைவனும், அழியா - ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம், மிக்கதூஉம் - இன்னிசையளபெடை.

3. தூயவாய் - குற்றமில்லாதனவாய், காய்விடத்து - வெறுக்கின்ற இடத்து, சாலத்தலை - மிகவுயர்ந்தனவாகும்.

4. செல்லும் வகையின் - அழியும் தன்மை உடையதாய் இருத்தலை அறிந்து, பொச்சாவா - மறவாமல், நோற்பாரை - தவம் முயல்கின்றவரை, அலந்து - நொந்து.

5. சீவன் - உயிர், செயிரிடைப் பாடு எய்தும் - தீவினைகளிடையே கேட்டினை அடையும், ஆர்த்தி - உண்பித்து, வாவின் - (அவாவின்) தலைக்குறை.

வினாக்கள் :

1. 'தாயனையர்'—யார்?
2. பழிப்பற்ற வாழ்க்கைக்குரியன யாவை?
3. 'இம்மூன்றும் சாலத் தலை'—மூன்று எவை?
4. கற்றறிந்த மாந்தர் கடன் யாது?
5. 'விலங்குகள் நல்ல மிக.'—கருத்து யாது? விளக்குக.

4. நான்மணிக்கடிகை

['நான்மணிக்கடிகை' என்பது நான்கு+மணி+கடிகை எனப் பிரிந்து, 'நான்கு இரத்தினத் துண்டுகள்' என்று பொருள்படும். இந்நூலுள் வரும் ஒவ்வொரு செய்யுளும் நான்கு இரத்தினத் துண்டுகள் போன்ற நான்கு சிறந்த கருத்துக்களைக் கொண்டுள்ளமையால், இந்நூல் 'நான்மணிக்கடிகை' என்னும் பெயர் பெற்றது. இதன் ஆசிரியர் விளம்பி நாகனார். இவர் 1800 ஆண்டுகளுக்கு முற்பட்டவர் என்னலாம்.]

நல்லோர் பிறக்குமிடம்

கள்ளி வயிற்றின் அகில்பிறக்கும்; மான்வயிற்றின்
ஒள்ளரி தாரம் பிறக்கும்; பெருங்கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கும்; அறிவார்யார்
நல்லாள் பிறக்கும் குடி? 1

பெற்ற தாயின் பெருமை

கண்ணிற் சிறந்த உறுப்பில்லை; கொண்டானின்
துன்னிய கேளிர் பிறரில்லை; மக்களின்
ஒண்மையவாய்ச் சான்ற பொருளில்லை; ஈன்றாளொ(டு)
எண்ணக் கடவுளு மில். 2

கூற்றம்

கல்லா வொருவர்க்குத் தம்வாயின் சொற்கூற்றம் ;
மெல்லிலை வாழைக்குத் தானீன்ற காய்கூற்றம் ;
அல்லவை செய்வார்க் கறங்கூற்றம் ; கூற்றமே
இல்லிருந்து தீங்கொழுகு வாள். 3

குற்றம்

இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம் ;
வளமிலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம் ;
கிளைஞரில் போழ்தில் சினங்குற்றம் ; குற்றம்
தமரல்லார் கையகத் தூண். 4

தீது

எல்லா விடத்துங் கொலைதீது ; மக்களைக்
கல்லா வளர விடல்தீது ;—நல்லார்
நலந்தீது நாணற்று நிற்பின் ; குலந்தீது
கொள்கை யழிந்த விடத்து. 5

குறிப்புரை :

1. அகில் - அகிற்கட்டை, அரிதாரம் - மஞ்சள் நிறமுள்ள ஒருவகைப் பொருள், நல்லாள் - நற்குணமுடையவள்.

2. துன்னிய - நெருங்கிய, கேளிர் - சுற்றத்தரர், ஒண்மை - பிரகாசம், சான்ற - மிகுந்த.

3. அல்லவை - பாவச் செயல்கள், அறம் - தருமம், இல்லிருந்து - குடும்பத்திலிருந்துகொண்டு.

4. வள்ளன்மை - ஈகைக் குணம், கிளைஞர் - உறவினர், தமர் அல்லார் - உறவினர் அல்லாதார், கையகத்து ஊண் - கையால் உண்ணுதல்.

5. நல்லார் - பெண்கள், நாண் - வெட்கம், நலம் - அழகு.

வினுக்கள் :

1. நான்மணிக்கடிகை—பெயர்க்காரணம் யாது ?
2. அகில், அரிதாரம், முத்து—இவை எங்கே பிறக்கும் ?
3. சிறந்த உறுப்பு, துன்னிய கேளிர், சான்ற பொருள்—இவை எவை ?
4. குற்றம் எனத் தகுவன யாவை ?
5. குற்றங்களாவன எவை ?
6. விளம்பி நாகனுர் தீயனவென்று கடிவன யாவை ?

III. தொடர்நிலைச் செய்யுள்

1. ஆசிய ஜோதி

[இஃது ஆசியாக் கண்டத்தின் பேரொளியாய் விளங்கிய **புத்தர்** பெருமான் வாழ்க்கை வரலாற்றைக் கூறும் நூல் ஆதலின், 'ஆசிய ஜோதி' என்னும் பெயர் பெற்றது. இந்நூல் 'எட்வின் ஆர்நால்டு' என்பவரால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட ஆசியஜோதி (The Light of Asia) என்னும் நூலைத் தழுவிக் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களால் தமிழில் எழுதப்பட்டுள்ளது. கவிமணியவர்கள் இக்காலத்துள்ள தமிழ்க் கவிஞர்களுள் தலைசிறந்து விளங்கியவர்; நாகர் கோவிலை அடுத்துள்ள புத்தேரியில் வசித்து அண்மையில் மறைந்தவர்.

அருள் உரிமை

['அருளை உரிமையாகப் பெற்றிருத்தல்' என்பது 'அருள் உரிமை' என்பதன் பொருள். சித்தார்த்தர் தம் நண்பனை தேவதத்தன் அம்பு எய்து வீழ்த்திய புருவின்மீது தமது அருள் உரிமையை நிலைநாட்டி, அதைக் காப்பாற்றிய வரலாறு இப்பகுதியில் கூறப்பட்டுள்ளது. இதனைக் கவி மணியின் அமுதவாக்கில் கற்று மகிழ்வோம் :]

(அன்னப்பறவை அம்பு பட்டு வீழ்தல்)

உலக முழுதும் ஒருகுடை யின்கீழ்
ஆளும் அண்ணல் அரண்மனை யருகில்
மலர்ந்த மலர்கள் மணமிக வீசப்
பொறிவண் டாடும் பூம்பொழில் மீது
வடதிசை இமய மாமலை அமர்ந்த
வாழிடம் நோக்கி, வளரும் அன்பால்
உருகிய உள்ளம் ஒழுகிய தென்னப்
பாடியே அன்னப் பறவைகள் வான
வீதி வழியே விரைந்து சென்றன ;
செல்வது கண்டு, தேவ தத்தன்
அரசிளங் குமரற் கண்டிய உறவினன்
வில்லினை வளைத்து வெய்யதோர் பாணம்
எய்து நின்றனன் ; எய்தஅப் பாணம்
முதல்முத லாக முன்னர்ச் சென்ற
அன்னப் பறவையின் அகன்சிறை யதனில்
படவே, ரத்தம் பாயப் பறவையும்
தளர்ந்து சுருண்டு தரையில் விழுந்தது.

(சித்தார்த்தரின் அருள்)

விழுந்தஅப் பறவை, மேனி முழுதும்
ஒழுகி ஓடும் உதிரம் புரளத்
துள்ளித் துள்ளித் துடிப்பது கண்டு
சிந்தை கனிந்து, திருமா மன்னரின்
செல்வக் குமரன் சித்தார்த் தன்போய்,
மலர்ந்து விரியா வாழைக் குருத்தினும்
தண்ணிய கரங்களால் தாங்கி எடுத்து
மடியில் வைத்து மார்போ டணைத்துத்
தழுவித் தழுவித் தளர்ச்சி நீக்கினன்.
அப்பால்,
இடக்கையிற் பறவையை ஏந்தி, அம்பினை
வலக்கை யதனுல் வாங்கி, வடிந்த
உதிரம் மாற்றி, உறுத்திய புண்ணில்
தேனும் தளிரும் சேர்த்துப் பிசைந்து
பூசியே வருத்தம் போக்கினன் ஆங்கே.

[அப்போது தேவதத்தன் சேவகன் ஒருவன் அங்குவந்து பறவையைத் தன்னிடம் கொடுக்குமாறு சித்தார்த்தரிடம் வேண்டினுன்.]

(சித்தார்த்தர் மறுமொழி)

" எய்த அம்பினுல்—பறவை
இறந்து வீழ்ந்திடுமேல்
எய்த வர்க்காகும்—உரிமை ;
யாதும் ஐயமில்லை. 1

" நீண்ட சிறகினிலே—விசைதான்
நின்றி ருப்பதல்லால்
மாண்ட தில்லைஅன்னம்—உயிர்த்து
வாழு கின்றதப்பா ! 2

" சந்தே கம்வேண்டா—அதனைத்
தரமுடி யாதப்பா !
எந்த உயிரையுங்—காப்ப(து)
என்கடமை யப்பா ! 3

(பின்பு தேவதத்தன் நேரில் வந்து)

“ மடிய நேர்ந்தாலும்—உயிர்த்து
வாழ நேர்ந்தாலும்
படியில் வீழ்ந்திடுமேல்—பறவை
பாணம் எய்தவர்க்காம்.” 4

(சித்தார்த்தரின் மறுமாற்றம்)

“ இல்லை இல்லைஐயா !—பறவை
என்ப றவைஐயா !
வல்லடி வழக்கு—நீயும்
வளர்க்க வேண்டாவையா ! 5

“ தொல்லு லகமெல்லாம்—அருளால்
சொந்த மாக்கவந்தேன்
வெல்லும் பொருள்களில்—முதலில்
வென்ற பொருளிதாம். 6

“ எம்ம னிதருமே—உளத்தில்
இரக்க முற்றிடயான்
செம்மை நெறியினை—நன்கு
தெரிந்து கூறிடுவேன். 7

“ துன்பம் அண்டாமல்—அதனைத்
துரத்தி ஓட்டிடுவேன் ;
இன்பம் இவ்வுலகில்—நிலைக்க
என்றும் வென்றிடுவேன். 8

“ மனிதர் மட்டுமல்ல—உலகில்
வாழும் எவ்வுயிரும்
இனிய வாழ்வடையும்—வழியை
இனிது காட்டிடுவேன். 9

“ என்னு ரைகளை நீ—மறுக்கின்
இன்றே இப்பொழுதே
மன்னும் நீதிமன்றம்—ஏறி
வழக்கு ரைப்போமையா !” 10

(நீதி மன்றத்தில் புரோகிதன் ஒருவன் தோன்றிப்
பின் வருமாறு பேசினான் :)

“ உயிரைக் கொன்றிடவே—முயலும்
ஒருவ னுக்கந்த
உயிரின் மேலேதும்—உரிமை
உண்டோ ? கூறுமையா ! 11

“ உயிரைக் காப்பவனே—என்றும்
உயிர்க்கு டையவனும்.
அயர்வு வேண்டாவையா—இதுவே
அறநூல் விதியையா !” 12

என்று நீதி எடுத்துரை செய்து
மன்றி லிருந்து மாய மாக
மறைந்து போயினன் ; மறையும்அந் நேரம்
பையர வொன்று பதுங்கி அவ்வழி
ஊர்ந்து செல்வதை ஒருவன் கண்டனன் ;
சிற்சில காலை தேவரும் இந்த
வடிவந் தாங்கி வருவதுண் டென்பரால்,
யாதோ உண்மை ! யாவரே அறிவார் ?

குறிப்புரை :

அண்ணல் - மேலோராகிய சித்தார்த்தர், பொறி - புள்ளி, பொழில் - சோலை, அமர்தல் - விரும்பி உறைதல், அகன் - விரிந்த, சிறை - சிறகு, அப்பால் - பிறகு, உயிர்த்து - மூச்சு வாங்கி, வல்லடி வழக்கு - நியாய மின்றிப் பலத்தை அடிப்படையாகக் கொண்டு வழக்காடல், மன்று - சபை.

வினாக்கள் :

1. ஆசிய ஜோதியைத் தமிழில் தந்தவர் யார் ? அவர் வரலாறு யாது?
2. தேவதத்தன் எய்து வீழ்த்திய அன்னப்பறவையைச் சித்தார்த்தர் எந்நிலையில் கண்ணுற்றார் ?
3. பறவையின் தளர்ச்சியைச் சித்தார்த்தர் எவ்விதம் நீக்கினார் ?
4. அவர் பறவையின் புண்ணை எவ்வாறு ஆற்றினார் ?
5. பறவை தனக்கே உரியது என்பதற்குத் தேவதத்தன் கூறிய நியாயம் என்ன ?
6. அதற்குச் சித்தார்த்தர் கூறியது யாது ?
7. நீதி மன்றத்தில் புரோகிதர் கூறிய முடிவென்ன ?
8. புரோகிதர் மறைந்த போது நிகழ்ந்ததென்ன ?
9. அதைப் பற்றிக் கவிஞர் கூறியதென்ன ?

2. இரட்சணிய யாத்திரிகம்

[இஃது, இரட்சிப்பு அடையவேண்டிய ஜீவாத்துமாவினுடைய மோட்ச யாத்திரையைக் கூறும் நூல்; ஜான் பனியன் என்னும் ஆங்கில ஆசிரியர் இயற்றிய 'பரதேசியின் மோட்சப் பிரயாணம்' (The Pilgrim's Progress) என்னும் உரை நடை நூலை ஆதாரமாகக் கொண்டு H. A. கிருஷ்ணப்பிள்ளை என்பவரால் இயற்றப் பெற்றது. இந்நூல் தமிழ்ச்சுவை செறிந்து விளங்குவது. இதன் ஆசிரியர் திருநெல்வேலிப் பாளையங்கோட்டையில் வாழ்ந்து வந்தவர்; கிறிஸ்தவ மதத்தினர். இவர் காலம் கி. பி. 1827 முதல் 1900 வரை.]

தீய மகன் நல்லொழுக்கம் பெற்றது

சொத்துரிமை வழங்கல்

ஒருவனன் புடைய தந்தைக்(கு)
ஓரிரு புதல்வர் உள்ளார்;
இருவரில் இளையான், 'ஐய!
என்னொரு பாகம் எற்குத்
தருக,'என்(று) இரந்து கேட்பத்
தந்தைதன் உரிமை யாவும்
நிருவிகற் பாகப் பங்கிட்(டு)
உதவினன் நேர்மை யாக. 1

பெற்ற பொருளை இழத்தல்

கைப்பொருள் கண்டான்; தந்தை
கரைந்தசொற் பொருளைக் காணான்
மெய்ப்பொருள் அறியான்; உள்ளம்
விழைந்தசிற் றின்ப மாயப்
பொய்ப்பொருள் நச்சி ஓடிப்
புறம்புபோய்த் தந்தை ஈந்த
அப்பொருள் இழந்தான்; அந்தோ!
அகதியா யினன்சின் னளில். 2

வறுமையால் வாடுதல்

அங்கொரு குடும்பி தன்னை
அடுத்(து)அவன் பன்றி மேய்த்துத்
திங்களோர் இரண்டு மூன்று
செல்லஅத் தேசம் எங்கும்

வெங்கொடும் பஞ்சம் நேர்ந்து
வெதுப்பிடும் பசிக்(கு)ஆற் ருனாய்
நுங்கினுன் பன்றிக்(கு) ஊட்டும்
நொறுங்குகுற் றுமித்த விட்டை. 3

குற்றுமித் தவிடும் கிட்டாக்
கொடும்பஞ்சம் அதிக ரிக்கச்
சற்றுளம் தெளிந்தா னுகிச்
சஞ்சலித்(து) அழு(து)‘ என் தந்தைக்(கு)
உற்றஊ ழியர்அ னேகர்
உண்டுதேக் கெறிய, யான்ஓர்
துற்(று)உண(வு) இன்றி ஆவி
சோர்குவல் ; இதென் துர்ப் புத்தி. 4

‘புகலொன்றும் இல்லேன்,’ என்னுப்
புந்தியில் பிழையை உன்னி
மிகஉளம் உடைந்து நைந்தான்
மெய்ம்மனஸ் தாபங் கொண்டான் ;
‘தகவுடைத் தாதை பக்கல்
சார்குவ னேல்,தான் பெற்ற
மகவெனப் பரிவன் அல்லால்
மறுத்திடான்,’ எனத்தே றுற்ருன். 5

தந்தையின் வரவேற்பு

ஒல்லையே எழுந்தான், தந்தை
உத்தம குணமுன் ஈர்க்க
அல்லல்செய் பசிபின் உந்த
அடுத்தனன் ; அறிந்து, தந்தை
வல்லைவந்(து) அணைத்து முத்தி
மகிழ்ந்தனன் ; மகவா சைக்(கு)ஓர்
எல்லையும் உளதோ மைந்தன்
எத்தனை பிழைசெய் தாலும் ? 6

மகனுக்கு மன்னிப்பு

'எந்தையே! எந்தை யே!'என்(று)
ஏங்கிநெட் டுயிர்த்துக் கண்ணீர்
சிந்திநொந்(து), 'உமக்கு முன்னும்
தெய்வத்துக் கெதிரு மாகப்
புந்தியற்(று) அளவில் பாவம்
புரிந்தனன்; இனியான் உந்தம்
மைந்தன்என்(று) உரைக்கத் தானும்
அபாத்திரன்; மதியொன்(று) இல்லேன். 7

'ஐய!மன் னிக்கச் சித்த
மாயின்மற்(று) அளிய னேன்யான்
உய்யுமா(று) அருளி, நும்பால்
ஊழியத்(து) ஒருவ னுக்கி,
வையகத்(து) இருத்து(க)' என்னு
வாய்திறந்(து) அரற்றி நிற்ப,
'நையல்,'என்(று) அருளிற் கூட்டிச்
சென்றனன் அகத்துள் நண்பால். 8

மகன் வருகைக்குத் தந்தை மகிழ்தல்

'மகன்இவன் மரித்தான்; இன்னே
மறுத்துயிர் பெற்ருனுகத்
தகவுடை விருந்(து) எமர்க்குச்
சமைக்க,'எனப் பணிந்து மைத்தற்(கு)
உகவையின் வஸ்தி ராதி
உடுத்(து)அருங் கலமும் பூட்டிப்
புகரறு மகிழ்கொண் டாடி
இருந்தனன் புதல்வ னேடும். 9

மூத்த மகனுக்குத் தந்தையின் அறிவுரை

ஆயிடைச் சேட்டன் வந்தான்;
அகக்களி யாட்டுக் கண்டான்;
'மேய(து)என்?' எனவி னுவி
அறிந்தனன்; வெகுண்டு நின்றுன்;

நேயமார் தந்தை நேர்ந்து,
‘ நின்னொரு கனிட்டன் மாண்டு
போயவன் பிழைத்து வந்த
புதுமையின் களியி(து)’ என்ருன். 10

‘ மைந்த! நீ என்னோ(டு) உள்ளாய் ;
வாழ்(வு)எனக்(கு) உள்ள யாவுஞ்
சொந்தம்மற்(று) உனக்கே அன்றோ ?
சோதரன் மதியற்(று) ஏகி
நொந்துவந்(து) அணைந்தான் மீண்டும் ;
நுண்மதி யுடைய நீஉன்
சிந்தனை திருகல் நன்றோ ?
சேர்ந்துடன் களித்தி,’ என்ருன். 11

குறிப்புரை

1. இரந்து - கெஞ்சி, நிருவிகற்பாக - வேறுபாடின்றி.

2. விழைந்த - விரும்பிய, நச்சி - விரும்பி, ஈந்த - கொடுத்த, அகதி - ஆதரவற்றவன்.

3. திங்கள் - மாதம், வெதுப்பும் - வருத்தும், நுங்கினன் - விழுங்கினன்.

4. உளம் - மனம், துற்று உணவு - ஒரு வாய் உணவு.

5. புந்தி - புத்தி, உள்ளி - நினைத்து, நைந்தான் - வருந்தினன், தாதை - தந்தை.

6. ஒல்லை - விரைவில், அல்லல் - துன்பம், உந்த - தள்ள, வல்லை - விரைவாக.

7. எந்தை - என் தந்தை, அபாத்திரன் - தகுதியற்றவன்.

8. சித்தம் - மனம், அளி - கருணை, நையல் - வருந்தாதே.

9. தகவுடை - தகுதியுடைய, உகவை - விருப்பம், புகரறு - குற்றமற்ற.

10. சேட்டன் - மூத்தவன், கனிட்டன் - இளையவன், களி - மகிழ்ச்சி.

11. ஏகி - சென்று, திருகல் - கோபித்தல்.

வினாக்கள் :

1. தந்தை சொற்கேளாத் தனயன் பட்ட துன்பநிலை யாது ?

2. தன் பிழையை உணர்ந்த புதல்வன் எவ்வாறு தேறினன் ?

3. இளையவன் தந்தையை அடுத்தமைக்கு ஆசிரியர் கூறும் காரணங்கள் யாவை ?

4. ‘மகவாசைக்கோர் எல்லையுமுளதோ ?’ என்று கவிஞர் கூறக் காரணம் என்ன ?

5. இளையவன் தந்தையிடம் எவ்வாறு மன்னிப்புக் கேட்டான் ?
6. தந்தை தன் புதல்வனை எவ்வாறு உபசரித்தான் ?
7. மூத்தவன் வெகுண்டது ஏன் ?
8. தந்தை மூத்தவனுக்கு எவ்வாறு அறிவுரை வழங்கினான் ?

3. குசேலோபாக்கியானம்

[குசேலோபாக்கியானம் என்பது, குசேல+உபாக்கியானம் எனப் பிரிந்து, ' குசேலரைப் பற்றிய கிளைக் கதை ' எனப் பொருள்படும். குசேலர் என்பது, கு+சேலர் எனப் பிரிந்து, ' பொலிவில்லாத ஆடையையுடையவர் ' என்று பொருள்படும். இவ்வரலாறு பாகவதத்தில் ஒரு கிளைக் கதையாய் அமைந்துள்ளது. இந்நூலாசிரியர் வல்லூர் தேவராசப்பிள்ளை என்பவர். இவர் காலம் 50 ஆண்டுகட்கு முன்னது. இவர் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் மாணவர் என்பர்.]

குசேலர் திருமணம்

திறலியை தவத்திவ் வாறு
　　திகழ்ந்திடும் குசேலன் என்பான்
உறலியை யத்த வத்திற்(கு)
　　உதவிசெய் பாக்கு நாளும்
அறலியை கதுப்பி னுளோர்
　　அணங்கினை வதுவை செய்தான்
மறலிய மன்னர் சென்னி
　　மணிமுடி இடறும் தாளோய்! 1

சுசீலையின் மாண்பு

மாசிலாக் குலத்து வந்தாள் ;
　　வருவிருந் துவப்ப ஊட்டும்
நேசமிக் குடையாள் ; கொண்கன்
　　நினைப்பறிந் தொழுகு நீராள் ;
தேசுறு வாய்மை உள்ளாள் ;
　　சினந்திடல் என்றும் இல்லாள் ;
பேசுதிண் கற்பு வாய்ந்தாள் ;
　　பெற்றதே கொண்டு வப்பாள். 2

மக்கட்பேறு

மலையிட்ட செல்வத் தார்கள்
மகிழவோர் மகவும் தாரான்
அலையிட்ட முட்டாள் செய்ய
அம்புயத் துறைவோன் ; ஓரேழ்
தலையிட்ட இருபான் மைந்தர்த்
தந்தனன் ; பெருமை அன்றோ ?
சிலையிட்ட தழும்பு வாய்ந்த
தெரியல்அம் தடந்தோள் வேந்தே ! 3

குசேலர் வாழ்க்கை

இருநிலத் தியாவர் கண்ணும்
ஏற்பதை இகழ்ச்சி என்ன
ஒருவிய உளத்தான், காட்டில்
உதிர்ந்துகொள் வாரு மின்றி
அருகிய நீவா ரப்புல்
தானியம் ஆராய்ந் தாராய்ந்(து)
உருவவொண் ணகத்தாற் கிள்ளி
எடுத்துடன் சேரக் கொண்டு 4

வந்துதன் மனைக்கைந் நீட்ட
வாங்கிமற் றவற்றைக் குற்றி
அந்தமெல் லியல்பா கஞ்செய்(து)
அதிதிக்கோர் பாகம் வைத்துத்
தந்ததன் பங்க யின்று
தவலரும் உவகை பூத்து
மந்திர மறைகட் கெட்டா
மலரடி நினைந்தி ருப்பான். 5

சுசீலை குழந்தைகளுக்குக் கஞ்சி வார்த்தலும், அவர்கள் சண்டையிடுதலும்

ஒருமகவுக் களித்திடும்போ தொருமகவு
கைநீட்டும் ; உந்தி மேல்வீழ்ந்(து)
இருமகவும் கைநீட்டும் ; மும்மகவும்
கைநீட்டும் ; என்செய் வாளால் !

பொருமிஒரு மகவழும்;கண் பிசைந்தழும்மற்
றொருமகவு ; புரண்டு வீழாப்
பெருநிலத்திற் கிடந்தழுமற் றொருமக(வு);எங்
ஙனம்சகிப்பாள் ? பெரிதும் பாவம் ! 6

கஞ்சிக்குக் கரைந்தழுதல்

‘ அந்தோ!என் வயிற்றெழுந்த பசியடங்கிற்
றில்லை !’என அழுமால் ஓர்சேய்;
‘ சிந்தாத கஞ்சிவார்க் கிலையெனக்கன்
னாய்!’எனப்பொய் செப்பும் ஓர்சேய் ;
முந்தார்வத் தொருசேய்மி சையப்புகும்போ(து)
இனியொருசேய் முடுகி ஈர்ப்ப,
நந்தாமற் றச்சேயும் எதிரீர்ப்பச்
சிந்துதற்கு நயக்கும் ஓர்சேய். 7

தாய் குழந்தைகளைத் தேற்றுதல்

இவ்வண்ணம் கலாம்விளைக்கும் மைந்தர்களை
நனிநோக்கி இரங்கி ஏங்கிச்
செவ்வண்ணக் கரதலத்தால் அணைத்துமடித்
தலத்திருத்திச் சிறப்புச் செய்தும்,
மைவண்ணக் கண்ணீரைத் துடைத்தும்,முகம்
வெரிந்புறந்தை வந்தும், ஆம்பல்
அவ்வண்ண வாய்முத்தம் கொண்டும்நயந்(து)
ஓர்விதத்தில் ஆற்றல் செய்வாள். 8

குழந்தைகளின் ஐயம்

‘ அடுத்தமனைச் சிறுனொருவன், “இன்றுநும(து)
அகங்கறிஎன் அட்டார்?” என்று
தொடுத்துவினவினனால்;அச்சொற்பொருள்யா(து)
அதுதான்எச் சுவைத்தன் னாய்!நீ
எடுத்துரை,’என் றிடுமகவுக்(கு) ‘ உரைக்கிலது
செய்யெனிலென் செய்வாம் ?’ என்று,
‘ மடுத்தவஃ தறிந்திலேன்,’ எனமற்றொன்(று)
உரைத்ததனை மறக்கச் செய்வாள். 9

சுசீலா தேவியின் துயரம்

வேறுமனைச் சிறானயின்ற பக்கணங்கண்(டு)
ஓடிவந்து விழிநீர் வாரச்
சீறுதலி லாதஅனை முகம்பார்த்(து)'இன்
னான்இன்ன தின்றான் ; என்வாய்
ஊறுதலால் இப்பொழுதே செய்தளித்தி,'
எனவுடுத்த உடைதொட் டீர்க்கும்
தேறுதலில் சிறுமகவை எடுத்துமார்
பிடையணைத்துச் சிந்தை நோவாள். 10

குழந்தைகள் அணிகலன் வேண்டுமெனல்

'குண்டலம்மோ திரம்கடகம் சுட்டிஅயல்
மனையார்தம் குழவிக் கிட்டார் ;
புண்டரிகக் கண்அன்னாய் ! எனக்குநீ
இடாதிருக்கும் பொறாமை என்னே ?
கண்டெடுத்திப் போதி'டெனக் கரைமதலைக்(கு)
இல்லாதான் கடன்தந் தானுக்(கு)
எண்டபச்சொல் வார்த்தையென, ' நாளைக்கு
நாளைக்'கென் றியம்பிச் சோர்வாள். 11

வறுமையின் கொடுமை

சிறியசித மணிப்பூணே அன்றிவே(று)
ஒருபூண்அச் சேய்கட் கில்லை ;
வறியமர நாருரியே உடையன்றி
மற்றுடைகள் மருவல் இல்லை ;
வெறியபொழில் தழைத்தஇலை உண்கலமல்
லாதுகலம் வேறொன் றில்லை ;
குறியமனை வயின்புகுமோர் எறும்பினுக்கும்
ஆங்குணவு கொடுத்தற் கில்லை. 12

சுசீலையின் பொறுமை

இவ்வாறு மிடியென்னும் பெருங்கடலுள்
அழுந்தியுந்தற் கினிமை சான்ற
செவ்வாய்மை அந்தணனை வெறுத்துரையாள் ;
அலர்மொழிகள் சிறிதுஞ் செப்பாள் ;

துவ்வாமை மைந்தர்கள்பால் மறந்துமியற்
றுள்;அவள்தன் சுகுணம் என்னே !
'எவ்வாறித் துயர்க்கடல்நீந் துவம்!'எனுமோர்
எண்ணமுளத் தென்றும் உண்டால். 13

கண்ணனிடம் சென்று பொருள் பெற்று வருமாறு சுசீலை வேண்டுதல்

'யாதவர் குலத்தில் தோன்றிய அரசர்
யாவர்க்கும் அதிபனும் இணையில்
மாதவ னுடன்நீ பல்கலைக் கடலை
வாய்மடுத் தனையென வகுப்பார் ;
ஆதலின், அப்பீ தாம்பரன் மருங்கில்
அணைந்தவன் பாற்பெருஞ் செல்வம்
தீதறக் கொண்டு கொடுத்துநம் சிறுவர்
செல்லல்நோய் தவிர்க்குதல் வேண்டும்.' 14

குசேலர், 'கண்ணனுக்குக் கையுறை கொண்டு செல்ல வேண்டும்,' எனல்

'எழுக டற்கொரு புன்னுனிப் பனித்துளி
என்னுவ கையைச்செய்யும் ?
கொழும லைத்துணைத் தேவுக்கம் மலைத்துணை
கொண்டுபோற் றிடலுண்டோ ?
செழும திக்குச்சின் னூலிழை பறித்திட்டுச்
சிந்தித்த துறல்போல
முழுமு தற்குமே தாவது கையுறை
கொண்டுமுன் னுறல்வேண்டும்.' 15

சுசீலை அவல் சேகரித்தல்

என்றுரைத்த கொழுநனுரை கேட்டுமகிழ்ந்(து)
'இதற்கென்னோ செயல்!'என் றெண்ணி,
அன்றுமுதல் உபவாசம் தானிருந்து,
மாமுனிவன் அரிதில் தேடி
நன்றளிக்கும் நெல்லினில்தன் ஒருபாகம்
வேறெடுத்து நலக்கச் சேர்த்துத்
துன்றியஅந் நெல்லையொரு தினத்தறலில்
நனைத்துவறுத் தெடுத்துத் தூய்தா 16

கறையிட்டு நனிகாண உலக்கைகொடு
மிக்கிடித்துக் கரிசு போக்கி,
நிறையிட்ட அவலாக்கிக் குசேலமுனி
கந்தையினில் நேடி ஓர்பால்
மறையிட்ட ஒழுங்குடையாள் முடித்துக்கொ
டுத்தினிப்போய் வருக என்றாள்;
சிறையிட்ட பவம்நீங்கும் வழிகண்டோன்
வழிதேடிச் செல்லல் உற்றான். 17

குறிப்புரை :

1. திறல் இயை - ஆற்றல் அமைந்த, உறல் இயை - பொருத்தம் அமைந்த, செய்பாக்கு - செய்ய (பாக்கு என்பது வினையெச்ச விகுதி), அறல் இயை - கருமணலை ஒத்த, கதுப்பு - கூந்தல், வதுவை - திருமணம், தாளோய் - பாதங்களை உடையவனே.

[இவ்வரலாறு சுகர் என்னும் முனிவர் பரீட்சித்து என்னும் அரசனுக்-குக் கூறுவதாக அமைந்துள்ளது.]

2. கொண்கன் - கணவன், நீராள் - தன்மை உடையவள், தேசுறு - புகழ் மிகுந்த.

3. மலையிட்ட - மலை போன்ற, அலையிட்ட - நீரில் தோன்றிய, அலை - சினையாகு பெயர், முட்டாள் - முள் + தாள் = முள்ளையுடையதண்டு, செய்ய அம்புயம் - செந்தாமரை, அம்புயத்து உறைவோன் - பிரமன், ஓர் ஏழ் தலையிட்ட இருபான் மைந்தர் - இருபத்தேழு புதல்வர்.

4. இருநிலத்து - பெரிய பூமியில், ஒருவிய - நீங்கிய, அருகிய - சிறிதாகிய, நீவாரம் - காட்டு நெல்.

5. மெல்லியல் - மென்மையான தன்மையுடையவள் (சுசீலா தேவி), அதிதி - விருந்தாளி, அயின்று - உண்டு, தவல் அரும் - கெடுதல் இல்லாத.

6. மகவு - பிள்ளை, உந்தி - நெட்டித்தள்ளி, பொருமி - விம்மி.

7. சேய் - பிள்ளை, மிசைய - உண்ண, முடுகி ஈர்க்க - விரைந்து இழுக்க, நந்தா - பின்னடையாத, நயக்கும் - விரும்பும்.

8. கலாம் - கலகம், நனி - மிகவும், வெரிந் - முதுகு, தைவந்து - தடவி, அவ்வண்ணம் - அழகிய நிறம்.

9. அட்டார் - சமைத்தார், தொடுத்து - தொடர்ந்து.

10. பக்கணம் - தின்பண்டம், வார - வடிய.

11. சுட்டி - நெற்றியில் அணியும் ஒருவகை ஆபரணம், புண்டரிகம் - தாமரை, எண் தப - அளவு கெட.

12. சிதமணி - பாசி மணி, வெறிய - நறுமணமுள்ள, பொழில் - சோலை, கலம் - பாத்திரம்.

13. மிடி - வறுமை, அலர் - பழி தூற்றல், தூவாமை - பட்டினி.

14. அதிபன் - அரசன், மாதவன் - கண்ணபிரான், வாய்மடுத்தனை - குடித்தாய், பீதாம்பரன் - பொன்னுடையுடையவன், மருங்கு - பக்கம், செல்லல் நோய் - துன்பப்பிணி.

15. தே - தெய்வம், மதி - சந்திரன், முழுமுதல் - முழுமுதற்கடவுளான கண்ணன், கையுறை - காணிக்கை.

16. உபவாசம் - விரதம், மாமுனிவன் - குசேலன், துன்றிய-மிகுந்த, நலக்க - நன்மையுண்டாக.

17. கறை - உரல், கரிசு - உமி, கந்தை - கிழிந்த துணி, பவம் - பிறவி.

வினாக்கள் :

1. குசேலோபாக்கியானம்—பெயர்க் காரணம் யாது ?
2. சுசீலா தேவியைக் கவிஞர் எவ்வாறு பாராட்டுகின்றார் ?
3. குசேலர் எவ்வாறு வாழ்க்கை நடத்தினார் ?
4. குசேலரின் வறுமை நிலை யாது ? (15 வரிகளில் எழுதுக.)
5. சுசீலா தேவி எவ்வாறு அவல் சேகரித்தாள் ?
6. 'சிறையிட்ட பவம் நீங்கும் வழி கண்டோன்' யார் ? பொருளை விளக்குக.
7. குசேலர், கண்ணன் என்பவர்களைக் குறிக்கும் தொடர்களை எடுத்தெழுதுக.

4. நளவெண்பா

சுயம்வர காண்டம்

[நளனுடைய வரலாற்றைக் கூறும் வெண்பாக்களினாலாகிய நூல் 'நளவெண்பா' எனப்பட்டது. இதன் ஆசிரியர் புகழேந்திப் புலவர். இவர் செங்கற்பட்டுக்கு அருகிலுள்ள பொன் விளைந்த களத்தூரில் பிறந்தவர் ; முரணை நகரை ஆண்ட சந்திரன் சுவர்க்கி என்னும் வள்ளலால் ஆதரிக்கப்பட்டவர் ; 'வெண்பாவிற் புகழேந்தி,' என்று புலவர்களால் புகழப்பட்டவர். இவர் காலம் கி. பி. 9-ஆம் நூற்றாண்டு என்பர். 12-ஆம் நூற்றாண்டு என்று கூறுவாருமுளர். இவர் காலத்தில் கம்பர், ஒட்டக்கூத்தர், ஔவையார் முதலிய புலவரும் வாழ்ந்தனர் என்பர். நளனது வரலாற்றைக் கூறும் வேறு நூல் நைடதம் என்பது.

நிடதநாட்டுச் சிறப்பு

காமர் கயல்புரளக் காவி முகைநெகிழத்
தாமரையின் செந்தேன் தளையவிழப்—பூமடந்தை
தன்னாட்டம் போலும் தகைமைத்தே சாகரஞ்சூழ்
நன்னாட்டின் முன்னாட்டு நாடு. 1

மாவிந்த நகரச் சிறப்பு

மாமனுநூல் வாழ வருசந் திரன்சுவர்க்கி
தாமரையாள் வைகுந் தடந்தோளான்—காமருபூந்
தாரான் முரணை நகர் தானென்று சாற்றலாம்
பாராளும் வேந்தன் பதி. 2

நளனது செங்கோலாட்சி

சீத மதிக்குடைக்கீழ்ச் செம்மை யறங்கிடப்பத்
தாதவிழ்பூந் தாரான் தனிக்காத்தான்—மாதர்
அரு(கு)ஊட்டும் பைங்கிளியும் ஆடற் பருந்தும்
ஒருகூட்டில் வாழ வுலகு. 3

நளன் சோலைக்குச் செல்லுதல்

வாங்குவளைக் கையார் வதன மதிபூத்த
பூங்குவளைக் காட்டிடையே போயினான்—தேங்குவளைத்
தேனாடி வண்டு சிறகுலர்த்தும் நீர்நாடன்
பூநாடிச் சோலை புக. 4

நளன்முன் அன்னம் தோன்றுதல்

நீணிறத்தால் சோலை நிறம்பெயர, நீடியதன்
தாணிறத்தால் பொய்கைத் தலஞ்சிவப்ப,-மாணிறத்தான்
முன்னப்புள் தோன்றும் முளரித் தலைவைகும்
அன்னப்புள் தோன்றிற்றே ஆங்கு. 5

பெண்கள் அன்னத்தைப் பிடித்தல்

நாடிமட வன்னத்தை நல்ல மயிற்குழாம்
ஓடி வளைக்கின்ற தொப்பவே—நீடியநற்
பைங்கூந்தல் வல்லியர்கள் பற்றிக் கொடுபோந்து
தங்கோவின் முன்வைத்தார் தாழ்ந்து. 6

அன்னம் கலங்குதல்

அன்னந் தனைப்பிடித்தங்(கு) ஆயிழையார் கொண்டுபோய்
மன்னன் திருமுன்னர் வைத்தலுமே—அன்னம்
மலங்கிற்றே தன்னுடைய வான்கிளையைத் தேடிக்
கலங்கிற்றே மன்னவனைக் கண்டு. 7

அரசன் ஆறுதல் கூறுதல்

'அஞ்சல் மடவனமே! உன்றன் அணிநடையும்
வஞ்சி யனையார் மணிநடையும்—விஞ்சியது
காணப் பிடித்ததுகாண்,' என்றான் களிவண்டு
மாணப் பிடித்ததார் மன். 8

அன்னம் தமயந்தியின் சிறப்புக் கூறுதல்

'நாற்குணமும் நாற்படையா வைம்புலனு நல்லமைச்சா
ஆர்க்குஞ் சிலம்பே அணிமுரசா—வேற்படையும்
வாளுமே கண்ணா வதன மதிக்குடைக்கீழ்
ஆளுமே பெண்மை அரசு.' 9

அன்னம் தமயந்தியை அடைதல்

மன்னன் விடுத்த வடிவில் திகழ்கின்ற
அன்னம்போய்க் கன்னி யருகணைய,—நன்னுதலும்
தன்னுடல் விட்டுத் தனியிடஞ்சேர்ந் தாங்கதனை
'என்னுடல்? சொல்,'என்றாள் 'ஈங்கு.' 10

அன்னம் தமயந்திக்கு நளனை அறிமுகம் செய்துவைத்தல்

'செம்மனத்தான், தண்ணளியான், செங்கோலான், மங்கையர்கள்
தம்மனத்தை வாங்கும் தடந்தோளான்,—மெய்ம்மை
நளனென்பான், மேனிலத்தும் நானிலத்தும் மிக்கான்,
உளனென்பான் வேந்தன் உனக்கு. 11

'அறங்கிடந்த நெஞ்சும் அருளொழுகு கண்ணும்
மறங்கிடந்த திண்தோள் வலியும்—திறங்கிடந்த
செங்கண்மால் அல்லனேல் தேர்வேந்தர் ஒப்பரோ
அங்கண்மா ஞாலத் தவற்கு?' 12

தமயந்தியின் வேண்டுகோள்

'வாவி யுறையும் மடவனமே! என்னுடைய
ஆவி உவந்தளித்தாய் ஆதியால்—காவினிடைத்
தேர்வேந்தற் கென்னிலைமை சென்றுரைத்தி,' என்றுரைத்தாள்
பார்வேந்தன் பாவை பதைத்து. 13

வீமன் முரசறைவித்தல்

'மங்கை சுயம்வர நாள் ஏழென்று வார்முரசம்
எங்கும் அறை(க)'என்(று) இயம்பினான் ;—பைங்கமுகின்
கூந்தல்மேல் கைங்கைக் கொழுந்தோடும் நன்னுடன்
வேந்தர்மேல் தூதோட விட்டு. 14

அரசர்கள் சுயம்வரத்திற்காகக் கூடுதல்

புள்ளுறையுஞ் சோலைகளும் பூங்கமல வாவிகளும்
உள்ளும் புறமும் இனி(து)உறைந்தார்—தெள்ளரிக்கண்
பூமகளைப் பொன்னைப் பொருவேல் விதர்ப்பன்தன்
கோமகளைத் தம்மனத்தே கொண்டு. 15

தமயந்தி மண மண்டபத்தை அடைதல்

மன்னர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை போய்ப்புக்காள்–மின்னிறத்துச்
செய்யதாள் வெள்ளைச் சிறையன்னஞ் செங்கமலப்
பொய்கைவாய்ப் போவதே போன்று. 16

தமயந்தியின் சஞ்சலம்

காவலரைத் தன்சேடி காட்டக்கண்(டு) ஈரிருவர்
தேவர் நளனுருவாச் சென்றிருந்தார் ;—பூவரைந்த
மாசிலாப் பூங்குழலாள் மற்றவரைக் காணுநின்(று)
ஊசலா டுற்றாள் உளம். 17

தமயந்தி நளனை அறிதல்

கண்ணிமைத்த லால்,அடிகள் காசினியில் தோய்தலால்,
வண்ண மலர்மாலை வாடுதலால்,—எண்ணி
நறுந்தா மரைவிரும்பும் நன்னுதலே யன்னாள்
அறிந்தாள் நளன்தன்னை ஆங்கு. 18

தமயந்தி நளனுக்கு மணமாலை சூட்டல்

விண்ணரசர் எல்லாரும் வெள்கி மனஞ்சுளிக்கக்
கண்ணகல் ஞாலங் களிகூர—மண்ணரசர்
வன்மாலை தம்மனத்தே சூட வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினாள் பொன். 19

குறிப்புரை :

1. காமர் - அழகு, கயல் - கெண்டை மீன், காவி - நீலமலர், சாகரம்-கடல்.

2. தாமரையாள் - இலக்குமி தேவி, வைகும் - வசிக்கும், முராணை - சந்திரன் சுவர்க்கியின் தலை நகர்.

3. சீதம் - குளர்ச்சி, தாது - மகரந்தப் பொடி, தார் - மாலை, ஆடல் - கொல்லுந்தன்மையுள்ள.

4. வதனமதி - முகமாகிய சந்திரன், குவளை - நீலமலர்.

5. பொய்கை - தடாகம், அப்புள் - தண்ணீரில், புள் - பறவை,

6. வல்லியர்கள் - பெண்கள், கோ - அரசன்.

7. இழை - ஆபரணம், மலங்கிற்று - மனம் வருந்தியது, வான் - சிறந்த.

8. மடம் - இளமை, வஞ்சி - பூங்கொடி, விஞ்சியது - சிறந்தது, மாண - சிறப்படைய, தார் - மாலை.

9. படை - ஆயுதம், ஆர்க்கும் - ஒலிக்கும்.

10. வடிவில் - அழகால், நுதல் - நெற்றி, நன்னுதல் - அழகிய நெற்றியையுடைய தமயந்தி, நாடல் - தேடுதல்.

11. அளி - கருணை, மேனிலம் - தேவருலகம்.

12. மறம் - வீரம், திறன் - வலிமை, செங்கண்மால் - திருமால்.

13. வாவி - குளம், ஆவி - உயிர், உவந்து - மகிழ்ந்து, ஆதி - ஆவாய்.

14. மங்கை - தமயந்தி, சுயம்வரம் - தானே கணவனைத் தேர்ந்-தெடுத்தல், கமுகு - பாக்கு மரம்.

15. புள் - பறவை, கமலம் - தாமரை, அரி - இரேகை, தெள்ளரிக் கண் - தெளிந்த செவ்வரி படர்ந்த கண், பூமகள் - திருமகளைப் போன்ற தமயந்தி.

16. பொன்னின் - இலக்குமி போன்ற, சிறை - சிறகு, புக்காள் - புகுந்தாள், செய்ய தாள் - சிவந்த பாதம்.

17. சேடி - தோழி, ஈரிருவர் - நால்வர் (தேவர்), பூ வரைந்த - மலர்களை அணிந்த, மாசு - குற்றம்.

18. காசினி - பூமி, வண்ணம் - அழகு. தேவர்களுடைய கண் இமையாது ; கால் நிலத்தில் படியாது ; மாலை வாடாது.

19. விண்ணரசர் - தேவர்கள், வெள்கி - நாணமடைந்து, வயம் - வெற்றி, பொன் - திருமகள் போன்ற தமயந்தி.

வினாக்கள் :

1. நளவெண்பா—பெயர்க்காரணம் யாது ?
2. நிடத நாட்டுச் சிறப்பு எவ்வாறு கூறப்படுகிறது ?
3. பாராளும் வேந்தன் பதி எது ?
4. புகழேந்திப் புலவர் நன்றி மறவாதவர் என்பது எதனால் விளங்குகிறது ?
5. நளனது செங்கோலாட்சிச் சிறப்பு யாது ?
6. சோலை நிறம் பெயர்ந்தது ஏன் ?
7. அன்னத்திற்கு நளன் எவ்வாறு ஆறுதல் கூறினன் ?
8. அன்னம் தமயந்தியை எவ்வாறு சிறப்பித்தது ?
9. அன்னம் தமயந்திக்கு நளனை எவ்வாறு அறிமுகம் செய்து வைத்தது ?
10. தமயந்தி மண மண்டபத்தை அடைந்தமையைக் கவிஞர் எவ்வாறு வருணிக்கிறார் ?
11. தமயந்தி உண்மை நளனை எவ்வாறு கண்டறிந்தாள் ?

IV. சிறு நூல்கள்

1. திருவேங்கடத்தந்தாதி

['திருவேங்கடத்தினது சம்பந்தமான அந்தாதி' என்பது பொருள். திருவேங்கடம் என்பது திருப்பதியைக் குறிக்கும். அந்தாதி என்பது ஒரு செய்யுளின் அந்தத்தை அடுத்த செய்யுளின் ஆதியாக அமைத்துப் பாடப்படும் ஒரு வகைப் பிரபந்தம். இதன் ஆசிரியர் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் என்பவர். இவருக்கு அழகிய மணவாளதாசர் என்ற பெயருமுண்டு. இவர் காலம் இற்றைக்கு 700 ஆண்டுகளுக்கு முன்னது என்பர்.]

திருவேங் கடத்து நிலைபெற்று நின்றன சிற்றன்னையால்
தருவேங் கடத்துத் தரைமே னடந்தன தாழ்பிறப்பின்
உருவேங் கடத்துக் குளத்தே யிருந்தன உற்றழைக்க
வருவேங் கடத்தும்பி யஞ்சலென் றோடின மால்கழலே. 1

கடமா மலையின் மருப்பொசித் தாய்க்குக் கவிநடத்தத்
தடமா மலைவற்ற வாளிதொட் டாய்க்கென் றனிநெஞ்சமே
வடமா மலையுந் திருப்பாற் கடலும்வை குந்தமும்போல்
இடமா மலைவற்று நின்றுங் கிடந்து மிருப்பதற்கே. 2

குறிப்புரை :

1. சிற்றன்னை - சிறிய தாய் (கைகேசி), தரு - மரம், வேம் - வெந்த, கடம் - பாலை வனம், தத்து - ஆபத்து, கடம் - மதம், தும்பி - யானை.

2. கடமா - யானை, மருப்பு - தந்தம், கவி - வானரசேனை, தடம் ஆம் அலை-பெரிய கடல், வடமா மலை - திருப்பதி, அலைவற்று - அசைவில்லாமல்.

வினாக்கள் :

1. திருவேங்கடத்தந்தாதி ஆசிரியரைப் பற்றிய குறிப்பு யாது?
2. அந்தாதியாவது யாது?
3. 'மால் கழல்' எவ்வாறு சிறப்பிக்கப்படுகிறது?
4. திருமால் நின்றுங்கிடந்தும் இருப்பதற்கு உரிய இடங்கள் எவை?

2. மதுரைக் கலம்பகம்

['மதுரையைப் பற்றிய கலம்பகம்' என்பது இதன் பொருள். கலம்பகம் என்பது புயவகுப்பு, தவம், மறம், குறம் முதலிய பதினெட்டு உறுப்புக்களையுடையதாகப் பல வகைப் பாக்களால் பாடப்படுவதொரு பிரபந்தம். இதன் ஆசிரியர் குமர குருபர சுவாமிகள். இவர் திருநெல்வேலியைச் சேர்ந்த ஸ்ரீவைகுண்டத்தில் பிறந்தவர்; ஐந்து வயது வரை

ஊமையாய் இருந்து, பின்னர் முருகன் அருளால் பேசும் தன்மை பெற்றுர்; கந்தர் கலி வெண்பா முதலிய பல நூல்களை இயற்றியுள்ளார் ; 300 ஆண்டுகளுக்கு முற்பட்டவர்.]

தொடுத்த ணிந்தது மம்புத ரங்கமே ;
சுமந்தி ருந்தது மம்புத ரங்கமே ;
எடுத்து நின்றது மாயவ ராகமே ;
எயி(று)இ றுத்தது மாயவ ராகமே ;
அடுப்ப(து) அந்தணர் பன்னக ராசியே ;
அணிவ துஞ்சில பன்னக ராசியே ;
கொடுப்ப தையர் கடம்பவ னத்தையே ;
கொள்வ தையர் கடம்பவ னத்தையே.

குறிப்புரை :

அம் புதர் அங்கம் - அழகிய தேவருடைய எலும்பு, அம்பு தரங்கம் - அலைகளையுடைய கங்கை நீர், மாயவர் ஆகம் - திருமாலாகிய திரிவிக்கிரம மூர்த்தியின் உடம்பு, எயிறு - தந்தம், வராகம் - பன்றி, ஆசி அந்தணர் பல் நகர் - ஆசீர்வாதம் செய்யும் அந்தணரின் பல நகரங்கள், பன்னகம் - பாம்பு, ராசி - கூட்டம், ஐயர்கள்தம் பவனம் - தேவர்களுடைய உலகம், கடம்பவனம் - மதுரை.

வினுக்கள் :

1. கலம்பகத்தின் இலக்கணம் என்ன ?
2. குமரகுருபரர் வர்லாற்றுச் சுருக்கம் யாது ?
3. அம்புதரங்கம்—இரு பொருள் எவை ?
4. இறைவன் பெருமை எவ்வாறு கூறப்பட்டுள்ளது ?

3. கலைசைச் சிலேடை வெண்பா

[‘ கலைசை என்னும் ஊரைப்பற்றிச் சிலேடை வெண்பாக்களால் சிறிப்பித்துக் கூறும் நூல்’ என்பது இதன் பொருள். கலைசை, தொட்டிக்கலை என்னும் ஊரின் மரூஉப் பெயர். சிலேடை - பல பொருள் படுவது. இந்நூலாசிரியர் தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர் என்பவர். இவர் காலம் சுமார் 140 ஆண்டுகளுக்கு முன்னது என்பர்.]

ஆவலுடன் பாவலரும் ஆறுகால் வண்டினமும்
காவலரைச் சூழும் கலைசையே—மேவும்
அரிவையம்பா கத்தான் அரண்ஒருமூன் றெய்தோன்
அரிவையம்பா கத்தான் அகம்.

குறிப்புரை :

பாவலர் - கவிஞர், காவலர் - அரசர், கா அலர் - சோலையிலுள்ள மலர்கள், அரி - திருமால், வை - கூர்மை, அம்பு - பாணம், அரிவை - உமா தேவி, அம் - அழகிய, பாகத்தான் - இடப்பாகத்தில் வைத்துள்ள சிவபெருமான்.

வினுக்கள் :

1. ‘ சிலேடை ’ என்பது யாது?
2. ‘ காவலர் ’—இரு பொருள் யாவை?
3. அரண் ஒரு மூன்று எவை ?
4. அரிவையம்பாகத்தான்—சிலேடைப் பொருள் யாது ?

4. நால்வர் நான்மணி மாலை

[நான்கு விதமான மணிகளால் ஆக்கப்படும் மாலையைப்போல வெண்பா, கலித்துறை, விருத்தம், ஆசிரியப்பா என்னும் நான்கு வகையான நாற்பது செய்யுட்களால் அந்தாதித் தொடை அமையப்பாடுவது நான்மணி மாலை எனப்படும். இங்கு, சைவ சமய குரவர் நால்வருள் சம்பந்தரை வெண்பாவாலும், அப்பரைக் கலித்துறையாலும், சுந்தரரை விருத்தத்தாலும், மாணிக்கவாசகரை ஆசிரியப்பாவாலும் புகழ்ந்து பாடிய நான்மணி மாலை, ‘ நால்வர் நான்மணி மாலை ’ எனப்பட்டது. இதன் ஆசிரியர், துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் என்பவர். இவர் காலம், 19-ஆம் நூற்றுண்டு.]

சம்பந்தர்

வல்லார் பிறப்பறுப்பர் வண்மை நலங்கல்வி
நல்லா தரவின்ப ஞானங்கள்—எல்லாம்
திருஞான சம்பந்தன் சேவடியே என்னும்
ஒருஞான சம்பந்தம் உற்று. 1

நாவுக்கரசர்

உற்ருன் அலன்தவம் தீயினின் ருனலன் ஊண்புனலால்
அற்ருன் அலனுகர் வும்திரு நாவுக் கரசெனுமோர்
சொற்ரு னெழுதியும் கூறியு மேயென்றும் துன்பில்பதம்
பெற்ரு னெருநம்பி அப்பூதி யென்னும் பெருந்தகையே. 2

சுந்தரர்

பெருமிழலைக் குறும்பரெனும் பரம யோகி
பெரிதுவந்துன் திருவடித்தா மரையைப் போற்றி
விரைமலர்தூய் வந்தனைசெய் கின்றான் என்றால்
விளங்கிழையார் இருவரொடு முயங்க லாமோ ?
உரைமதிநின் றனைவெறுப்ப(து) என்கொல்? நின்னை
உடையானுக்(கு) அடுத்தசெயல் உனக்கு மாயின்
சுரர்முனிவர் பரவலுறும் பெருஞ்சீர்த் தொண்டத்
தொகைசெய்தோய்! அறமுதனால் வகைசெய் தோயே! 3

மாணிக்கவாசகர்

செய்ய வார்சடைத் தெய்வ சிகாமணி
பாதம் போற்றும் **வாதவூர் அன்ப** !
பாவெனப் படுவதுன் பாட்டுப்
பூவெனப் படுவது பொறிவாழ் பூவே. 4

குறிப்புரை :

1. பிறப்பறுப்பர் - பிறவிப்பிணியை நீக்குவர், வண்மை - செல்வம், நலம் - புண்ணியம், ஆதரவு - அன்பு, ஞானசம்பந்தம் - ஞானத்தின் தொடர்பு.

2. ஊண் - உணவு, துன்பு இல் பதம் - துன்பம் இல்லாத பதவி (வீடு), நம்பி - ஆடவரில் சிறந்தவன். திருநாவுக்கரசர் திருநாமத்தைக் கூறி அப்பூதி அடிகள் வீடு பேறு எய்தினர் என்பதாம்.

3. குறும்பர் - குறும்பநாயனார், விரை - மணம், தூய் - தூவி, விளங்கிழையார் - விளங்குகின்ற ஆபரணத்தை அணிந்தவர்களான பரவை நாச்சியாரும் சங்கிலியாரும், முயங்கல் - தழுவல், உடையான் - சிவ பெருமான், சுரர் - தேவர், பரவல் - துதித்தல்.

4. வார் - நீண்ட, பொறி - இலக்குமி.

வினாக்கள் :

1. நான்மணி மாலையின் இலக்கணம் என்ன ?
2. ‘ நால்வர் ’ என்பவர் யாவர் ?
3. பிறப்பறுக்கும் வல்லமை உடையவர் யாவர் ?
4. அப்பூதியடிகள் வீடுபேறடைந்தது எவ்வாறு ?
5. பாவெனப்படுவது யாது ?
6. திருத்தொண்டத் தொகையை அருளியவர் யார் ?

V. பல்சுவை

1. புறநானூறு

[புறநானூறு என்பது, கடைச்சங்க காலத்தில் தோன்றிய எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று; புறப்பொருளைப் பற்றிய நானூறு செய்யுட்களையுடையது; ஆதலின், இப்பெயர் பெற்றது. இங்குத் தரப்பட்டுள்ள பாடலைப் பாடியவன் ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன் என்னும் வேந்தன். இவன் காலம், கி. பி. 2-ஆம் நூற்றாண்டு.

கல்வியின் சிறப்பு

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே;
பிறப்போர் அன்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயும்மனந் திரியும்;
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
'மூத்தோன் வருக!' என்னு தவருள்
அறிவுடை யோனு றரசும் செல்லும்;
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்,
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே.

குறிப்புரை :

உற்றுழி - துன்பம் உண்டானவிடத்து, உறுபொருள் - மிக்க பொருள், பிற்றை நிலை - பின்னே நின்று வழிபாடு செய்யும் நிலைமை, முனியாது - வெறுக்காமல், திரியும் - வேறுபடுவாள், நால் பால் - நான்கு குலம்.

வினாக்கள் :

1. புறநானூறு - பெயர்க்காரணம் யாது ?
2. எவ்வாறு கற்றல் நன்று ?
3. கற்றோர் பெருமை எவ்வாறு கூறப்பட்டுள்ளது ?

2. உறுதுயரம் ஒழிந்திடாது

[கீழ் வரும் பாடல், காந்தியடிகள் மறைந்த செய்தி கேட்டவுடன் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் கண்ணீர் வடித்துச் சொல்லியது.]

திடம்படைத்த கல்நெஞ்சம் திடுக்கிட்டு
நடுநடுங்கிச் சிதறிப் போக
மடம்படைத்த மாபாவி வஞ்சனையால்
காந்திமகான் மடியச் சுட்டான்!
உடம்பனைத்தும் வாயாக அழுதாலும்
உறுதுயரம் ஒழிந்தி டாதால்!
இடம்படைத்த உலகாளும் இறையே! நீ
எங்கொழிந்தாய் இந்நாள் ஐயா!

3. பெய்யாத மேகத்திடம் பேசியது

[கீழ் வரும் பாடலைப் பாடியவர் வேதநாயகம் பிள்ளை என்பவர்; தரங்கம்பாடி, மாயூரம் முதலிய இடங்களில் முனிசீப்பாய் உத்தியோகம் பார்த்து வந்தவர். இவர் நீதி நூல், பிரதாப முதலியார் சரித்திரம் முதலிய நூல்களை எழுதியுள்ளார். இவர் காலம், 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி.]

செல்லென்றுன் நாமத்தைச் செப்பினதே அல்லாமல்
செல்லென் றுனை நாங்கள் செப்பினமா?—அல்லென்று
மெய்யா உவமிக்க விண்மீது தோன்றியநீ
பெய்யாமற் போனதென்ன? பேசு.

குறிப்புரை :

செல் - மேகம் (செல்வாய்), நாமம் - பெயர், அல் - இருள், விண் - ஆகாயம்.

வினாக்கள் :

1. பாடலின் பொருள் யாது?
2. ஆசிரியரைப் பற்றிய வரலாற்றுக் குறிப்பு யாது?

4. வேளாளர் சிறப்பு

[இது கம்பர் பாடிய ஏரெழுபது என்னும் நூலில் உள்ளது. இந்நூல் வேளாண்மையின் சிறப்பை 70 பாக்களில் கூறுவது. கம்பர் இராமாயணம் பாடிக் கவிச்சக்கரவர்த்தி என்னும் பட்டம் பெற்ற பெரும்புலவர்.]

உழுங்குலத்தார் உயர்வு

தொழுங்குலத்தில் பிறந்தாலென் ?
சுடர்முடிமன் னவராகி
எழுங்குலத்தில் பிறந்தாலென் ?
இவர்க்குப்பின் வணிகரெனும்
செழுங்குலத்தில் பிறந்தாலென் ?
சிறப்புடையர் ஆனாலென் ?
உழுங்குலத்தில் பிறந்தாரே
உலகுய்யப் பிறந்தாரே. 1

கருணைப் பெருக்காளர்

அழுங்குழவிக் கன்புடைய
தாயேபோல் அனைத்துயிர்க்கும்
எழுங்கருணைப் பெருக்காளர்
எளியரோ யாம்புகழ,
உழுங்கொழுவிற் கருவீறி
உலகமுதற் கருவாகச்
செழுங்கமலத் தயனிவரைச்
செய்துலகஞ் செய்வானேல் ? 2

குறிப்புரை :

1. தொழுங்குலம் - பிறரால் தொழப்படும் அந்தணர் குலம், சுடர் - ஒளி, உழுங்குலம் - வேளாளர் குலம்.

2. குழவி - குழந்தை, எழும் - உண்டாகின்ற, வீறி - மேம்பட்டு, முதல் கரு - கருப்பம், அயன் - பிரமன்.

வினாக்கள் :

1. உலகுய்யப் பிறந்தவர் யார் ? அவ்வாறு கூறுவானேன் ?
2. கம்பர் உழவர்களை எவ்வாறெல்லாம் சிறப்பிக்கின்றார் ?
3. 'எளியரோ யாம் புகழ ?' என்று கம்பர் கூறியது ஏன் ?

5. உழைக்க வேண்டும்

[இதனைப் பாடியவர் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்கள். இதில் பெற்ற சுதந்தரத்தைப் பேணுவதற்குரிய வழிகளைக் கவிமணியவர்கள் எடுத்துக் கூறுகின்றார்கள். அவர்கள் வழி நின்று உழைக்க வேண்டுவது நமது முதற்கடமை.]

மன்னும் சுதந்தரத்தை—நாட்டில்
மக்கள் அடைந்தவுடன்
பொன்னை மழையாக—வானம்
பொழிந்து கொட்டிடுமோ ? 1

பாலை சோலையாகிக்—கனிகள்
பழுத்து திர்ந்திடுமோ ?
சேலை சேலையாகப்—பருத்திச்
செடிகள் காய்த்திடுமோ ? 2

ஆக்கம் வேண்டுமெனில்—நன்மை
அடைய வேண்டுமெனில்
ஊக்கம் வேண்டுமப்பா !—ஓயா
துழைக்க வேண்டுமப்பா ! 3

உண்ணு முணவுக்கும்—இடுப்பில்
உடுக்கும் ஆடைக்கும்
மண்ணில் அந்நியரை—நம்பி
வாழ்தல் வாழ்வாமோ ? 4

நெற்றி யின்வியர்வை—நிதமும்
நிலத்தில் வீழ்ந்திடிலே
சற்றும் வாடாமல்—சுதந்தரம்
தழைத்து வருமப்பா ! 5

சாதிச் சண்டைஎலாம்—ஒய்ந்து
தணிய வேண்டுமப்பா !
நீதி நாடெங்கும்—நிலைத்து
நிற்க வேண்டுமப்பா ! 6

உலக மக்களெலாம்—அன்போ
டொருதாய் மக்களைப்போல்
கலக மின்றிவாழும்—காலம்
காண வேண்டுமப்பா ! 7

நெற்றி வியர்வை நிலத்தில் விழவுழைப்போம்
பெற்ற சுதந்தரத்தைப் பேணுவோம்—சுற்றமெனப்
பன்னாட்டு மக்களையும் பாராட்டிப் பாரதமா
நன்னாட்டில் வாழுவோம் நாம். 8

குறிப்புரை :

மன்னும் - பொருந்திய, வானம் - ஆகாயம், பாலை - பாலை வனம், ஆக்கம் - செல்வம், மா - பெரிய.

வினாக்கள் :

1. சுதந்தரம் பெற்றவுடன் எத்தகைய நன்மைகளை நாம் எதிர்பார்க்கலாகாது ?

2. நன்மை வேண்டுமெனில் நாம் செய்ய வேண்டுவது யாது ?

3. கவி மணி எது வாழ்வாகாது என்கிறார் ?

4. சுதந்தரம் தழைத்து வருவதற்குக் கவி மணி கூறும் உபாயம் யாது ?

5. கவி மணி எத்தகைய காலத்தைக் காண வேண்டுமென்கிறார் ?

6. கவி மணி எவ்வாறு உழைக்க வேண்டும் என்கிறார் ?

6. தமிழன்

[தமிழ் மறுமலர்ச்சிக் கவிஞர்களுள் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை அவர்களும் ஒருவராவர். இவர் நம் அரசவைப் புலவராய் விளங்கியவர். இவர் கவிதைகள் தமிழ் மக்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டுள்ளன.]

1. தமிழன் என்றோர் இனமுண்டு ;
தனியே அவற்கொரு குணமுண்டு ;
அமிழ்தம் அவனுடை மொழியாகும் ;
அன்பே அவனுடை வழியாகும். (தமிழன்)

2. அறிவின் கடலைக் கடைந்தவனும்
அமிர்தத் திருக்குறள் அடைந்தவனும்
பொறியின் ஆசையைக் குறைத்திடவே
பொருந்திய நூல்கள் உரைத்திடுவான். (தமிழன்)

3\. கவிதைச் சுவைகளை வடித்தெடுத்தான்
கம்பன் பாட்டெனப் பெயர்கொடுத்தான் ;
புவியில் இன்பம் பகர்ந்தவெலாம்
புண்ணிய முறையில் நுகர்ந்திடுவான். (தமிழன்)

4\. கலைகள் யாவினும் வல்லவனும் ;
கற்றவர் எவர்க்கும் நல்லவனும் ;
நிலைகொள் ளும்பல அடையாளம்
நின்றன இன்னும் உடையோனும். (தமிழன்)

5\. சிற்பம் சித்திரம் சங்கீதம்
சிறந்தவர் அவனினும் எங்கே?சொல் ;
வெற்பின் கருங்கல் களிமண்போல்
வேலைத் திறத்தால் ஒளிபண்ணும். (தமிழன்)

6\. உழவும் தொழிலும் இசைபாடும் ;
உண்மை ; சரித்திரம் அசைபோடும்.
இழவில் அழுதிடும் பெண்கூட
இசையோ டழுவது கண்கூடு. (தமிழன்)

7\. யாழும் குழலும் நாதசுரம்
யாவுள தண்ணுமைப் பேதமெலாம்
வாழும் கருவிகள் வகைபலவும்
வகுத்தது தமிழெனல் மிகையலவாம். (தமிழன்)

8\. மானம் பெரிதென உயிர்விடுவான் ;
மற்றவர்க் குதவிடத் துயர்படுவான் ;
தானம் வாங்கிடக் கூசிடுவான் ;
'தருவது மேல்,'எனப் பேசிடுவான். (தமிழன்)

குறிப்புரை :

பொறி - ஐம்பொறி ; மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன. புவி - உலகம், வெற்பு - மலை, தண்ணுமை - மத்தளம், துயர் - துன்பம்.

வினாக்கள் :

1. தமிழன் பெருமைகள் யாவை ?
2. தமிழன் கலைத்திறத்தைக் கவிஞர் எவ்வாறு பாராட்டுகிறார் ?
3. தமிழன் இலட்சியங்கள் யாவை ?

146485

உரை நடை

1. தலை நிமிர் தமிழா!

[சுவாமி சுத்தானந்த பாரதியார் அவர்கள்]

இந்தியரானாலும் சரி, கிறிஸ்தவரானாலும் சரி, இஸ்லாமியரானாலும் சரி, தமிழ் நாட்டில் பிறந்து தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவரெல்லாரும் தமிழரே; ஒரு குலத் தமிழ் மைந்தரே. இந்த ஒற்றுமை உணர்வு பெருக, நாம் முன்னேறுவோம். இவ்வுணர்ச்சி குறுகக் குறுக, நாம் வீழ்ச்சியடைவோம். **இந்து** யார்? எங்கும் கடவுளைக் கண்டு எல்லா உயிர்களையும் இறைவன் திருமேனியாக மதித்து நன்மை செய்வோனே இந்து. **இஸ்லாமியன்** யார்? கடவுளுறுதி கொண்டு மனித சமுதாயத்தை ஒரு குல சகோதர சகோதரிகளாகக் காண்பவனே இஸ்லாமியன். **கிறிஸ்தவன்** யார்? அன்பும் பொறுமையும் கொண்டு, இன்னற்சிலுவை தாங்கியும் தன்னலமின்றிப் பொது நலம் புரிவோனே கிறிஸ்தவன். **பௌத்தன்** யார்? எல்லா உயிர்த் துடிப்பையும் தன்னுள்ளத் துடிப்பில் கண்டு ஆருயிர்களுக்கு அறப்பணி புரிவோனே பௌத்தன். **தமிழ் முனிவர், பாரத ரிஷிகள், ஏசுநாதர், முகம்மது நபி நாயகம், புத்தர்** அனைவரும் என்ன உபதேசம் செய்தனர்? "மனச் சாட்சிக்கு உண்மையாக நடந்துகொள்; சுத்தம் பேணு; எல்லா உயிர்களுக்கும் அன்பாயிரு; முடிந்தமட்டும் பிறர்க்குதவு; பொய், கொலை, களவு, சூதுகளைச் செய்யாதே; உணர்ந்து, ஆசையாணவங்களை நீத்து, எல்லாரும் நலம் பெற நினை?" என்றுதானே உபதேசித்தனர்? இக்கொள்கையில் யாருக்காவது வேற்றுமையிருக்குமா? இக்கொள்கையைக் கடைப்பிடிக்காமல், வீண் வேடத்திலும் பூச்சிலும் அழுத்தங்கொண்டு, பிறரை வெறுப்பவன் உண்மையாளனா? எந்தச் சமயமாவது பிறரை இழிவு செய்யச் சொல்லுமா? எந்தத் தீர்க்கதரிசியாராவது அச்சம், பகை, சூது,

வஞ்சம், பொறுமைகளை உபதேசித்தாரா ? உலகில் வந்த தீர்க்கதரிசிகளெல்லாரும் நல்லதுதான் சொன்னார்கள் ; மாந்தரெல்லாம் ஒற்றுமையாய், அன்பாய் வாழத்தான் வழி காட்டினார்கள். வேற்றுமைப் பித்தம் பிடித்து உலகிற் கலகஞ் செய்வதெல்லாம் மனித மனத்திற் புகுந்த சைத்தான் வேலையே தவிர, வேறல்ல. அந்த மனமாயச் சைத்தானை இன்றோடு விரட்டுங்கள்.

தமிழர்களே, நீங்கள் எந்தச் சாதி சமயங்களைச் சேர்ந்தவர்களாயினுஞ் சரி; 'நாம் தமிழர் ; நமது தாய் மொழி தமிழ் ; நமது நாடு தமிழ் நாடு,' என்பதைக் கனவிலும் மறவாதீர்கள். உலகைச் சுற்றிப் பாருங்கள். ஒவ்வொரு நாடும் எவ்வாறு முன்னேறிக்கொண்டிருக்கிறது பாருங்கள் ! ஒவ்வொரு நாட்டினரும் தத்தம் தாய் மொழியை எவ்வாறு முன்னேற்றிக்கொண்டிருக்கின்றனர் பாருங்கள் ! வங்கத்தையும் இந்தியையும் நோக்குங்கள் ! நேற்றெழுந்த இந்தி மொழி, இன்று இந்திய மொழியாகப் போகின்றது ! இந்தப் பாரத நாட்டில் மட்டுமன்றி, **பர்மா, திபெத்து, மலேயா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா** முதலிய நாடுகளிலும் ஒரு காலத்தில் வழங்கிய முன் மொழியான நமது **தமிழ்**, எந்நிலையிலிருக்கிறதென்று பாருங்கள் ! சோம்பல், வேற்றுமை, பொறுமை இவையே ஒரு நாட்டை வீழ்த்தும் பகைகள். காலத்திற்கேற்ற முன்னேற்றப் பணி, சுறுசுறுப்பு, ஒற்றுமை, கூட்டுறவு, அன்பு இவையே ஒரு நாடு முன்னேறும் துணைகள். வங்காளி வங்காளியைக் கண்டால் வங்காளத்தில் பேசுகிறான் ; 'நான் வங்காளி,' என்கிறான். ஆந்திரன் ஆந்திரனிடம் எப்பொழுதும் தெலுங்கே பேசுகிறான். குஜராத்தி குஜராத்தியைக் கண்டால், குஜராத்தியிலேயே பேசுகிறான். பிரெஞ்சுத் தெரிந்திருந்தாலும், ஓர் ஆங்கிலேயன் **ஜினிவா மகாநாட்டில்** ஆங்கிலமே பேசுவான். தனது தாய் மொழியில் ஆங்கிலேயன் பெருமை கொள்கிறான் ; தனது தாய் நாட்டிற்கு உயிரைத் தருகிறான். இத்தகைய மொழியன்பு தமிழனுக்கு வரவேண்டும். தமிழ் தெரிந்த தமிழனிடம் ஆங்கிலத்தில் பேசுவதை ஓர்

அவமதிப்பாகக் கருத வேண்டும். தாய்ச் சோற்றை விட்டு விலைச் சோறுண்ணும் வீண் செயலை யார் ஒப்புவர்? தென்னாடு, பர்மா, மலேயா, தென்னாப்பிரிக்கா, பிஜி, சையாம், இலங்கை முதலிய நாடுகளிலெல்லாம் தமிழர் வாழ்கின்றனர். பர்மாவைப் பசுநிலமாக்கியது தமிழர் நெற்றி வேர்வை. தென்னாப்பிரிக்காவைச் செழிக்க வைப்பது தமிழர் உழைப்புத்தான். மலேயா ரப்பர்த் தோட்டங்களைப் பெருக்குவது தமிழர் பாடுதான். இவ்வாறு வஞ்சமில்லாது தமிழர் பிற நாடுகளில் பாடு படுகின்றனர். ஆங்குள்ள தமிழர் வேறுபாடின்றித் தமிழரை மதிக்க வேண்டும். அந்தந்த நாட்டிலுள்ள தமிழர் தமிழனைக் கண்டால் அன்பு ஆதரவாக நட்புரிமை காட்ட வேண்டும். ஆங்கிலச் செருக்கும் அன்னிய மோகமும் கொண்டு தாயையும், ஒரு தாயின் மைந்தரையும், தாய் மொழியையும் இழிவுறுத்துவது இழிகுணமாகும். தமிழைப் புறக்கணிக்கும் தமிழன் தாயைப் புறக்கணித்தவனாவான். தமிழைப் போற்றாத் தமிழன் தாயை மறந்தவனாவான். பெற்ற தாயை மறக்கலாமா? இதோ நம் தாய் என்றும் இளமையுடன் இருக்கிறாள்! உலக மொழிகளிடையே நம் ஆதரவின்றிக் கண்ணீர் விடுகிறாள். தாயின் கண்ணீரைத் துடைக்க மைந்தர் வருவரோ? தமிழருக்குத் தாயுணர்வு பெருகினால் தந்நலம் இருக்குமா? தாய் முன் தருக்கும் செருக்கும் தலை தூக்குமா? நாம் ஒரு தாயின் மைந்தர் என்னும் உணர்வு மேலிட்டால், சாதி மத வேறுபாடுகள் தோன்றுமா? தமிழர் உலகின் முன் தலை நிமிர்ந்து வாழ வேண்டுமானால், ஒரே வழிதான் உண்டு: வங்காளி தனது தாய் மொழியை உலகம் நன்கு மதிக்கச் செய்தது போலவே தமிழனாகிய நீ தமிழ் மொழியை உலகளாவச் செய். உன் முன் நல்ல கவிஞர் பலர் உள்ளனர்; வீரருள்ளனர்; கலைவாணர் உள்ளனர்; புலவர் உள்ளனர். அவர்களை எல்லாம் போட்டி, பொறாமையின்றி நன்றாக ஆதரி; ஒவ்வொரு நாளும் தமிழுக்கு ஏதாயினும் ஒரு பணி செய்; அல்லும் பகலும் தமிழின் நலத்தைக் கருது. இந்தியாவிலுள்ள மற்ற மொழிகளெல்-

லாம் தலை நிமிர்ந்து நிற்கின்றன. மலையாளம், தெலுங்கு, கன்னடங்கூட எவ்வளவோ முன்னேறி விளங்குகின்றன. தமிழ், நாளுக்கு நாள் தலை குனியும் நிலைமையிலிருக்கிறது! தமிழ்ப் பயிர் வாடுகிறது! இந்தப் பழந்தமிழ்ச் சோலை உன் அன்பழைப்பை நாடுகிறது. உன் அன்பால் இது கற்பகச் சோலையாகி உலகிற்கெல்லாம் நன்னிழலளிக்கும். தமிழா, தமிழை மதி; ஆங்கிலம் படி. வேண்டாவென்று சொல்லவில்லை. நீ ஆங்கிலத்தின் பயனைக்கொண்டு தமிழைப் பெருமைப்படுத்து. ஆங்கில மோகினி வலையிற்பட்டுத் தமிழ்த்தாய்க்குச் சிறுமை செய்யாதே! ஆங்கிலத்திற்குத் தமிழைப் பலியாக்காதே! தமிழா, நீ எத்தனை பிற மொழிகள் கற்றாலும், தாய் மொழிதான் உனக்கு நலமாகும். நீ எந்த நாடு சென்றாலும், தமிழகமே உனக்குச் சொந்தமாகும். பர்மாவில் நீ அன்னியனாகவே மதிக்கப்படுவாய். பிற மொழி நலங்களையெல்லாம் உரமாக இட்டுத் தமிழ்க்கற்பகத்தை உனது அன்புப் பாலூற்றி வளர். நீ எந்த நாட்டில் பிழைத்தாலும், தமிழகம் உனது தாயகம் என்பதை மறவாதே.

தமிழா, உனக்குத் தமிழன்பு போதாது; தமிழ் வெறி பிடிக்க வேண்டும். தமிழ்க் கனல் உனது உள்ளத்தில் ஏற வேண்டும். அக்கனலைக்கொண்டு தமிழருக்கு நேரும் தீமைகளையெல்லாம் பொசுக்கி எறிய வேண்டும். அக்கனலிலே தமிழ்த்தங்கத்தைப் போட்டுருக்கி, இன்னும் இன்னும் மாற்றேற்றி நமது தமிழ்ச் சமுதாய தேவிக்கு வெற்றித் திருமுடி செய்தணிவிக்க வேண்டும். தமிழா, விழித்துக்கொள். தமிழன் எங்கிருந்தாலும் சரி; நீ பர்மாத் தமிழனானாலுஞ் சரி; மலேயாத் தமிழனானாலுஞ் சரி; டர்பன் தமிழனானாலுஞ் சரி; இலங்கைத் தமிழனானாலுஞ் சரி; தமிழன் தமிழனே. அவனது தாய் மொழி தமிழ். அவன் எந்தச் சமயத்தைச் சேர்ந்தவனானாலுஞ் சரி; இந்து, இஸ்லாம், கிறிஸ்து என்று அவன் வீட்டிலே, கோவிலிலே, மசூதியிலே, சர்ச்சிலே சொல்லிக்கொள்ளலாம். அதற்குத் தடை இல்லை. வீதியிலே, நாட்டிலே யாராவது, 'நீ யார்?' என்று கேட்டால், 'நான் பிரா-

மணன், வேளாளன், பிள்ளை, முதலியார், நாயுடு, சேர்வை, அந்த மதம், இந்த மதம்' என்று வேற்றுமைப்புத்தியுடன் பேசலாகாது; 'நான் தமிழன்; தமிழ் நாடு என்னது; நான் எங்கிருந்தாலும் தமிழர் கூட்டத்தைச் சேர்ந்தவன்; தமிழே எனது தாய் மொழி; அதையே முதலிற்பேசுவேன்; அதிலேயே எழுதுவேன்; தமிழின் நன்மையே என் முதல் வேலை; தமிழ்ப்பணியே முதற்பணி; தமிழ் முன்னேற்றமே எனது முதல் விருப்பம்,' என்று சொல்லித் தலை நிமிர வேண்டும். தமிழா, முன்னேறும் உலகின் முன் உன் தாயைப் பெருமைப்படுத்து. அன்னிய மோகத்தாலும், ஆங்கிலச் செருக்காலும், சாதி மத சாத்திர கோத்திர வேற்றுமையுணர்வாலும் தமிழருக்கெல்லாம் பொதுவான தமிழ்த்தாயைத்—தமிழ் மொழியைச்—சிறுமை செய்யாதே. தமிழின் பெருமை, தமிழர் பெருமை; தமிழின் சிறுமை, தமிழர் சிறுமை. இதையுணர்! இன்று பெருமை பெற்று விளங்கும் வங்கமும், இந்தியும், ஆங்கிலமும் எவ்வாறு முன்னேறின? அந்தந்த மொழியினர் அன்பாலும் முயற்சியாலுந்தானே? நீயும் உனது தாய்மொழியைப் பெருமைப்படுத்தி, விடாமுயற்சியினால் ஒன்றுபட்டு முன்னேற்றினால், பிற மொழிகளைப் போலத் தமிழும் ஏன் முன்னேறாது? தமிழா, தலை நிமிர்! நிமிர்! நிமிர்! 'எம் தாய் வாழ்க!' இதுவே உன் மந்திரம்.

அருஞ்சொற்பொருள் :

இன்னல் - துன்பம், பேண - காக்க, ஆணவம் - கருவம், நீத்து - துறந்து, பாடு - வேலை, தருக்கு - செருக்கு, அல் - இரவு, கனல் - நெருப்பு, பணி - தொண்டு, சிறுமை - இழிவு.

வினாக்கள் :

1. தமிழர் முன்னேறுவதற்கு எத்தகைய ஒற்றுமை உணர்வு பெருகுதல் வேண்டும்?

2. தமிழ் முனிவர், பாரத ரிஷிகள் முதலியவர்கள் செய்த உபதேசம் யாது?

3. தீர்க்கதரிசிகள் காட்டிய வழி யாது ?

4. தமிழர் எவற்றைக் கனவிலும் மறத்தலாகாது ?

5. ஒரு நாட்டை வீழ்த்தும் பகைகள் யாவை ?

6. ஒரு நாடு முன்னேறும் துணைகள் யாவை ?

7. எத்தகைய மொழியன்பு தமிழருக்கு ஏற்படுதல் வேண்டும் ?

8. 'தாய்ச்சோற்றை விட்டு விலைச்சோறுண்ணும் வீண் செயல்' எது ?

9. 'தாயைப் புறக்கணித்தவனுவான்'—யார் ?

10. தமிழர் உலகின் முன் தலை நிமிர்ந்து நிற்பதற்கான வழி யாது ?

11. சுவாமி சுத்தானந்த பாரதியார் அவர்கள் தமிழர்க்குச் செய்யும் சிறந்த உபதேசங்கள் யாவை ?

2. பிரதாப முதலியார் பால லீலை

[மயிலாடுதுறை ச. வேதநாயகம் பிள்ளை அவர்கள்]

நான் படிப்பு விஷயத்தில் மந்தமாயிருந்தாலும், விளையாடுகிற விஷயத்தில் அதிக முயற்சி உள்ளவனாய் இருந்தேன். என்னுடைய பாலிய சேஷ்டைகள் யாவருக்கும் வியப்பாயிருக்குமானதால், அவைகளை அடியில் விவரிக்கிறேன் :

என் வீட்டில், என்னைத் தவிர, மற்றவர் எல்லாரும் சுரத்தினாலும் அம்மையினாலும் உபாதைப்பட்டனர். அவர்களைப் பல பேர் வந்து விசாரிக்கிறதும் உபசாரம் செய்கிறதுமாயிருந்தனர். என்னை ஒருவரும் விசாரிக்காதபடியால், நான் ஒரு மூலையில் அழுதுகொண்டிருந்தேன். எல்லோரும் ஓடி வந்து, 'ஏன் அப்பா அழுகிறாய் ?' என்று கேட்டனர். 'எனக்குச் சுரமாவது அம்மையாவது வரவில்லையே !' என்று தேம்பித் தேம்பி அழுதேன்.

நானும் சில பிள்ளைகளும் தெருவில் விளையாடிக்கொண்டிருக்கும் பொழுது, அவர்களில் ஒரு பையன் என்னைப் பார்த்து, 'நான் இரண்டு கண்களையும் மூடிக்கொண்டு ஒரு வித்தை செய்கிறேன் ; நீ அந்த வித்தையை இரண்டு கண்ணையும் திறந்துகொண்டு செய்வாயா ?' என்று கேட்டான். அதற்கு நான், "நீ இரண்டு கண்களையும் மூடிக்கொண்டு செய்கிற வித்தையை நான் கண்ணைத் திறந்துகொண்டு செய்யக் கூடாதா ? அப்படி நான் செய்யாவிட்டால், உனக்கு நான் இவ்வளவு பந்தயம் கொடுப்பேன் !' என்று ஒப்புக்கொண்டேன். உடனே அந்தப் பையன், நடுத்தெருவில் உட்கார்ந்து, இரண்டு கண்ணையும் மூடிக்கொண்டு, மண்ணை அள்ளியள்ளித் தன் கண்மேலே போட்டுக்கொண்டான். பிற்பாடு அவன் என்னைப் பார்த்து, 'நீ இரண்டு கண்களையும் திறந்துகொண்டு இந்த வித்தையைச் செய்,' என்று மண்ணை அள்ளி என் கையில் கொடுத்தான். நான் கண்ணை இழந்து போவதைப்பார்க்கிலும் காசை இழப்-

பது நலமென்று நினைத்து, பந்தயக் காசை அவனுக்குக் கொடுத்துவிட்டேன்.

எங்கள் வீட்டு மேல் மாடியில், அதிக விலை பெற்ற பெரிய நிலைக் கண்ணாடிகள் அமைக்கப்பட்டிருந்தன. ஒரு கண்ணாடியில் நானும் சில பிள்ளைகளும் எங்க-ளுடைய முக அழகைப் பார்த்த போது, எல்லோருடைய முகமும் அழகாயிருக்க, என் முகம் மட்டும் எனக்கே பார்க்கச் சகிக்காமல் விகாரமாயிருந்தது. அது கண்-ணாடியினுடைய பிசகென்றெண்ணிக் கையை ஓங்கிக்-கொண்டு அந்தக் கண்ணாடியில் பலமாக ஒரு குத்துக் குத்தினேன். அந்தக் கண்ணாடி ஆயிரம் துண்டாக உடைந்து போயிற்று.

எந்த வேலையிலும் சோம்பலாயிருக்கக் கூடாதென்-றும், தொட்ட காரியத்தை உடனே முடித்துவிட வேண்டுமே தவிர, நாளைக்கென்று நிறுத்தி வைக்கக் கூடாதென்றும், என் தாயார் எனக்கு அடிக்கடி புத்தி சொல்லி வருவார். நான் அந்தப் புத்தியை, பக்ஷண விஷயங்களில் உபயோகப்படுத்தி, எத்தனை பக்ஷணங்கள் அகப்பட்டாலும், நாளைக்கென்று வையாமல், உடனே சாப்பிட்டு, மந்தப்பட்டு வைத்தியர்களுக்கு ஓயாத வேலை கொடுத்து வந்தேன்.

தினமும், பொழுது விடிந்தவுடனே, உபாத்தியாயர் வந்து படிக்கச் சொல்லித் தொந்தரவு செய்தபடியால், பொழுது விடியாமலிருப்பதற்கு என்ன உபாயமென்று யோசித்துப் பார்த்தேன். கோழி கூவிப் பொழுது விடிகிறபடியால், கோழி கூவாவிட்டால் பொழுது விடியா-தென்று நினைத்து, 'கோழி வளர்க்க வேண்டா,' என்று, அக்கம் பக்க வீட்டுக்காரர்களுக்கு உத்தரவு செய்தேன்.

ஒரு நாள், ஒரு பையனிடத்தில் நான் இரண்டு வராகன் கடன் வாங்கினதாகவும், அவன் என்னை அடித்த-தாகவும் சொப்பனம் கண்டு விழித்துக்கொண்டு, அந்தப் பையனை மறு நாள் நான் பார்த்தபோது, அந்தச் சொப்-பனத்தை அவனுக்குத் தெரிவித்தேன். உடனே அவன், 'அந்தக் கடனைக் கொடு,' என்று என் மடியைப் பிடித்-

துக்கொண்டான். நான் அவனுடைய கன்னத்தில் பளீர் பளீர் என்று இரண்டு மூன்று அறைகள் கொடுத்தேன். அவன், 'ஏன் அடிக்கிறுய் ?' என்று கேட்டான். 'இராத்திரி நீ என்னைச் சொப்பனத்தில் அடித்தபடியால், அதற்காக இப்போது நான் உன்னை அடித்தேன்,' என்றேன். அவன், 'கடனுக்கும் அடிக்கும் சரியாய்ப் போய்விட்டது,' என்று சொல்லிப் போய்விட்டான்.

ஒரு நாள், நான் வீதியில் விளையாடிக்கொண்டிருந்த போது, ஒரு துஷ்டன் அவனுடைய மாட்டை ஓங்கி ஓங்கி அடித்து ஓட்டிக்கொண்டு போனுன். நான், 'ஏன் அடிக்கிறுய்?' என்று கேட்டதற்கு, அவன், 'என் மாட்டை எப்படியாவது நான் உபயோகிக்கிறேன் ; உனக்கென்ன ?' என்றுன். நான் உடனே என் கையில் இருந்த கழியால் அவனை அடித்து, 'என் கழியை நான் எப்படியாவது உபயோகிக்கிறேன் ; உனக்கென்ன ?' என்று சொல்லிப் போய்விட்டேன்.

எங்கள் வீட்டில் ஒரு பெரியவருக்கு அசாத்திய ரோகம் நேரிட்டு, வைத்தியர்களும் கைவிட்டுவிட்டார்கள். எமன் வந்து உயிரைக் கொண்டு போகிறுனென்று நான் கேள்விப்பட்டிருந்தபடியால், 'கதவை மூடி வைத்திருந்தால், எமன் எந்த வழியாய் வருவான் ?' என்று நினைத்து, அந்தப் பெரியவர் படுத்திருந்த அறையின் கதவை மூடி, துவாரங்களையெல்லாம் துணியினுல் அடைத்துவிட்டேன். அப்படிச் செய்தும், அந்தத் துஷ்ட யமன், எந்த வழியாகவோ வந்து, அவர் பிராணனைக் கொண்டு போய்விட்டான்.

நான் ஒரு நாள், கண்ணுடியில் என் முகத்தைப் பார்த்த பிறகு, முதுகின் அழகைப் பார்க்கும்பொருட்டுக் கண்ணுடியை எனக்குப் பின் புறத்தில் வைத்து, முதுகாலே பார்த்தேன். ஒன்றும் தெரியாமல் மயங்கினேன்.

என்னுடைய நேசன் ஒருவன், ஒரு புஸ்தகம் அனுப்ப வேண்டுமென்று தபால் வழியாய்க் கடிதம் அனுப்பினுன். நான் அந்தப் புஸ்தகத்தை அனுப்பவில்லை. சில

நாளைக்குப் பிறகு நான் அவனைக் கண்ட போது, 'புஸ்தகம் அனுப்பும்படி நீ எழுதிய கடிதம் என்னிடத்தில் வந்து சேரவில்லை,' என்றேன். 'கடிதம் வந்து சேராவிட்டால், நான் புஸ்தகம் வேண்டுமென்று எழுதிய சமாசாரம் உனக்கு எப்படித் தெரிந்தது?' என்று அவன் கேட்க, நான் ஆடு திருடின கள்ளன் போல விழித்தேன்.

ஒரு முக்கியமான சங்கதியைப் பற்றி, ஒரு சினேகிதனுக்கு நான் கடிதம் எழுதி, அதன் கடைசியில், 'இந்தக் கடிதம் வந்து சேராவிட்டால், உடனே எனக்குத் தெரிவி,' என்று எழுதினேன். 'கடிதம் வந்து சேராவிட்டால்' என்ற அதன் கடைசிச் சொற்றொடரால், என்ன பிரயோசனமென்பதை, நான் கவனிக்கவில்லை.

ஒரு பிரசித்தனான பொய்யன், என்னிடத்தில் வந்து, தன்னுடைய ஆயுசு முழுமையும் தான் ஒரு நிசம் சொன்னதில்லை என்றான். 'நீ ஒரு நிசம் சொல்லியிருக்கிறாய்!' என்று நான் சொல்ல, அவன், 'இல்லை! இல்லை!!' என்றான். 'ஆயுசு முழுவதும் நிசம் சொன்னதில்லை என்று நீ சொல்வது நிசம் அல்லவா?' என்றேன். அவன் சரியென்று ஒப்புக்கொண்டு, என்னைப் பார்த்து, 'நீ ஒரு பொய் சொல்ல வேண்டும்,' என்றான். நான் உடனே, 'நீ யோக்கியன்,' என்றேன்.

ஒரு நாள் இராத்திரி, நான் தங்கக் காப்புக்களும் கொலுசுகளும் போட்டுக்கொண்டு நித்திரை செய்தேன். ஒரு திருடன் எவ்விதமாகவோ உள்ளே நுழைந்து, எல்லாரும் தூங்குகிற சமயத்தில், என்னுடைய ஒரு கைக்காப்பையும் கொலுசையும் கழற்றிக்கொண்டு ஓடினான். நான் உடனே, 'திருடரே, திருடரே, இன்னொரு கைக்காப்பையும் கொலுசையும் மறந்துவிட்டீரே!' என்று கூவினேன். அந்த அரவம் கேட்டு, எல்லோரும் விழித்துக்கொண்டனர்; திருடனும் ஓடிப்போய்விட்டான்.

என் பாட்டியாருக்கு மூன்றாம் முறைச் சுரம் வந்துகொண்டிருந்தது. எங்கள் வீட்டிலிருந்த கடிகாரம், மத்தியானம் இரண்டு மணி அடித்தவுடனே சுரம் வருவது வழக்கமாயிருந்தபடியால், கடிகாரம் ஓடாமல் நின்று-

விட்டால், சுரமும் வாராமல் நின்றுபோகுமென்று நினைத்து, கடிகாரத்தை நிறுத்திவிட்டேன். அப்படிச் செய்தும் அந்தத் திருட்டுச் சுரம் வாராமலிருக்கவில்லை.

நானும் சில பிள்ளைகளும் நீந்தக் கற்றுக்கொள்வதற்காக, ஒரு குளத்துக்குப் போனோம்; நான், 'நீந்தக் கற்றுக்கொள்வதற்கு முன் தண்ணீரில் இறங்க மாட்டேன்,' என்று கரையில் உட்கார்ந்தேன். 'தண்ணீரில் இறங்காமல் எப்படி நீந்தக் கற்றுக்கொள்கிறது?' என்று எல்லாரும் என்னைப் பரிகாசம் செய்தனர்.

நானும் சில பிள்ளைகளும் குதிரைப் பந்தயம் விட்டபோது, என் குதிரை எல்லாருடைய குதிரைகளுக்கும் பிந்திப்போய்விட்டதால், எல்லாரும் என்னைப் பார்த்துக் கைகொட்டிச் சிரித்தனர். நான், 'என்னுடைய குதிரை எல்லாருடைய குதிரைகளையும் துரத்துகிறது!' என்று சொல்லி அவர்களுக்குமேல் அதிகமாகச் சிரித்தேன்.

ஒரு நாள் நானும், **கனகசபையும்**, பின்னும் சிலரும் எங்களுடைய வீரப் பிரதாபங்களைக் குறித்துப் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது நான் கனகசபையை நோக்கி, 'அனேக சத்துருக்களை நான் ஓடும்படி செய்தேன்,' என்றேன். அவன், 'எப்படி ஓடச் செய்தீர்கள்?' என்று கேட்க, நான், 'சத்துருக்களைக் கண்டவுடனே ஓட ஆரம்பித்தேன்; அவர்கள் என்னைத் துரத்திக்கொண்டு ஓடி வந்தார்கள்; இப்படி நான் சத்துருக்களை ஓடச் செய்தேன்,' என்றேன். கனகசபை என்னுடைய சௌரியத்தை மெச்சிக்கொண்டு, 'நீங்கள் சத்துருக்களை எப்படி வெல்லுவீர்கள்?' என்று கேட்க, நான் 'ஓட்டத்தினால் வெல்லுவேன்,' என்றேன். அவன், 'ஓட்டத்தினால் எப்படி வெல்லுவீர்கள்?' என்று கேட்க, நான், 'சத்துருக்களைக் கண்டவுடனே, அதிவேகமாக ஓடுவேன்; என்னுடைய ஓட்டத்தைப் பிடிக்க அவர்களாலும், அவர்கள் பாட்டனாராலும் முடியாது; இவ்வகையாக அவர்களை நான் வெற்றி கொள்ளுவேன்,' என்றேன். அப்போது கூட இருந்த ஒரு சிப்பாய், தான் ஒரு சண்டையில் எதிரியினுடைய காலை வெட்டினதாக வீரம் பேசினான்.

நான் அவனைப் பார்த்து, 'எதிரியினுடைய தலையை வெட்டாமற் காலை வெட்டின காரணம் என்ன?' என்று கேட்க, அந்தச் சிப்பாய், 'நான் என்ன செய்வேன்! எதிரியினுடைய தலையை வேறொருவன் முன்னமே வெட்டிக் கொண்டு போய்விட்டான்; பிறகு நான் காலை வெட்டினேன்,' என்றான்.

சில காலத்துக்கு முன் நானும் கனகசபையும் சேர்ந்து சில கவிகள் உண்டு பண்ணினோம். அந்தக் கவிகளை இந்தக் கிரந்தத்திலே சேர்க்கலாமென்று யோசித்து அவைகளைப் பார்வையிட்டோம். சில கவிகளின் அர்த்தம் எனக்கு மட்டும் தெரிகின்றது; கனகசபைக்குத் தெரியவில்லை. சில கவிகளின் அர்த்தம் கனகசபைக்கு மட்டும் புலப்படுகின்றது; எனக்குப் புலப்படவில்லை. சில கவிகளின் பொருள் அவனுக்கும் விளங்கவில்லை, எனக்கும் விளங்கவில்லை. அன்றியும், அனேக கவிகளுக்குச் சந்தமே தெரியவில்லை. சந்தம் தெரிகிற கவிகளுக்குப் பொருள் தெரியவில்லை. பொருள் தெரிகிற கவிகள், இலக்கண விதிக்கு ஒத்திருக்கவில்லை. ஆகையால், அந்தக் கவிகளை இந்தப் புஸ்தகத்திற்சேர்க்காமல் விட்டுவிட்டேன்.

ஒரு புலவர், நான் பாடின ஒரு கவியைப் பார்த்து, அதை நான் கம்ப ராமாயணத்திலிருந்து திருடிக்கொண்டதாகக் குறை கூறினார். நான், 'திருடவேயில்லை,' என்றேன். அவர், அந்தக் கவி கம்பராமாயணத்தில் இருப்பதாகக் காட்டினார். நான் உடனே அவரைப் பார்த்து, 'நான் அந்தக் கவியைக் கம்பராமாயணத்திலிருந்து திருடி எடுத்துக்கொண்டிருப்பேனானால், பிறகு அந்தக் கவி கம்பராமாயணத்தில் எப்படி இருக்கக்கூடும்? ஆகையால், நான் திருடவில்லை என்பதற்கு அந்தக் கவி கம்பராமாயணத்திலிருப்பதுவே சாக்ஷி,'' என்று மெய்ப்பித்தேன்.

ஒரு மூடன், என்னைப் பார்த்து, 'சகல மனுஷர்களும், பிழை செய்வது சகஜம்; இந்த விஷயத்தில் விவேகிக்கும் அவிவேகிக்கும் என்ன பேதம்?' என்றான். நான் அவனை நோக்கி, 'அவிவேகியின் குற்றம் அவனுக்கு

மட்டும் தெரியாது ; உலகத்துக்கெல்லாம் தெரியும். விவேகியின் குற்றம், அவனுக்கு மட்டும் தெரியும் ; உலகத்துக்குத் தெரியாது,' என்றேன்.

அருஞ்சொற்பொருள் :

மந்தம் - சோம்பல், சேஷ்டை - துஷ்டச் செய்கை, சுரம் - காய்ச்சல், உபாதை - துன்பம், ரோகம் - வியாதி, பிராணன் - உயிர், ஆயுசு - வாழ்நாள், அரவம் - சத்தம், சௌரியம் - சூரத்தனம், பிரதாபம் - பெருமை, கிரந்தம் - நூல், சகஜம் - இயற்கை, விவேகி - அறிவுடையவன், அவிவேகி- அறிவில்லாதவன்.

வினுக்கள் :

1. பிரதாப முதலியார் எந்த விஷயத்தில் அதிக முயற்சியுள்ளவராயிருந்தார் ?

2. பிரதாப முதலியார் கண்ணை இழப்பதிலும் காசை இழப்பது நலமென்று எண்ணிய சந்தர்ப்பம் யாது ?

3. பிரதாப முதலியாருக்கு அவர் தாயார் அடிக்கடி சொல்லி வந்த புத்திமதி என்ன ? அவர் அதனை எங்ஙனம் கடைப்பிடித்தார் ?

4. 'கடனுக்கும் அடிக்கும் சரியாய்ப் போய்விட்டது.'—இடம் சுட்டுக.

5. பிரதாப முதலியார் ஆடு திருடிய கள்ளனைப் போல விழித்தது எப்பொழுது ?

6. எதிரியின் காலை வெட்டிய சிப்பாயின் வீரம் எத்தகையது ?

7. பிரதாப முதலியாரும் கனகசபையும் சேர்ந்து செய்த கவிகள் எப்படி இருந்தன ?

8. பிரதாப முதலியார் செய்த அவிவேகமான செயல்களில் இரண்டினைக் குறிப்பிடுக.

9. இக்கதையிலிருந்து நகைச்சுவை தரும் நிகழ்ச்சிகள் இரண்டினை எடுத்தெழுதுக.

3. தமிழ்த்தெய்வம்

[வித்துவான் ஈ. பண்டார நம்பியார் அவர்கள்]

'பாலெல்லாம் பசுவின்பா லாகுமா? நூலெல்லாம் திருவள்ளுவர் நூலாகுமா?' என்று கேட்டார் ஒருவர். உண்மைதான். 'தமிழ்த் தெய்வ வணக்கம் எத்தனையோ புலவர்கள் பாடியிருக்கிறார்களே! அவைகள் எல்லாம் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் பாடிய தமிழ்த்தெய்வ வணக்கமாகுமா?' என்று நாமும் கேட்கிறோம்.

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் தமிழ்த்தெய்வத்தை நேரில் தரிசித்தார். தமிழ்த்தெய்வம் அவருக்குக் காட்சி அளித்தது. நீர் நிறைந்த நீலக்கடலுடுத்த நில மகளைத் தம் அகக்கண்ணால் பார்த்தார் பேராசிரியர். அவருக்குப் **பரத கண்டம்** நிலமகளது எழில் ஒழுகும் சிறந்த வதனமாய்க் காணப்பட்டது. வதனத்திற்குத் தகுந்தாற்போல் நெற்றி—பிறைச் சந்திரனைப் போன்ற சிறு நெற்றி. தெக்கணமே அந்த நெற்றியாகத் தென்பட்டது. நெற்றியின் நடுவே ஓர் அழகான திலகம்—நறுமணம் கமழும் திலகம்—நமது தமிழகமே அத்திலகம் என்று உணர்ந்தார். திலக வாசனை நாற்றிசையும் பரந்தது. தமிழ்த் தெய்வத்தின் புகழ் எத்திசையும் மணப்பதாகத் தோற்றமளித்தது. இந்நிலையில் பேராசிரியர் தமிழ்த்தெய்வத்தை அப்படியே தரிசித்து மகிழ்ந்தார். மகிழ்ச்சி பொங்கித் ததும்பி ஒரு கவிதையாய் வெளி வந்தது:

"நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திரவிடநற் றிருநாடும்;
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!"

பேராசிரியர் கண்ட காட்சி கவிதை உருவம் பெற்றுவிட்டது. இந்தக் கவிதைச் சித்திரத்தில் தமிழ்த்தெய்வத்தை நாமும் பார்க்கின்றோம்; தரிசித்து மகிழ்கின்றோம்; பாட்டைப் பல தடவை பாடியுங்கூட அனுபவிக்கின்றோம்.

தமிழ்த்தெய்வத்தைத் தரிசித்து மகிழ்ந்த பேராசிரியர், செயல் மறந்து வாழ்த்த ஆரம்பிக்கின்ருர். அவருக்கு நமது தமிழ் மொழி இன்ன காலத்தில் தோன்றியது என்று எவராலும் கூற முடியாத பழமையுடையது என்ற எண்ணம் பிறந்தது. தமிழைப் போலவே பழமையுடைய **ஆரியம், கிரீக்கு, இலத்தீன், ஈபுரு, அரபி, சீனம்** முதலிய பல தேய மொழிகளையும் அவர் மறந்துவிடவில்லை. ஆனல், 'அம்மொழிகள் தமிழைப் போல மக்களைப் பெற்று மாண்புறவில்லையே!' என்று அவர் எண்ணினர். தமிழ் மொழி **கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளுப்**போன்ற பல மொழிகளைப் பெற்றெடுத்தமை அவர் ஆராய்ச்சிக் கண்ணுக்குப் புலனுயிற்று; 'இந்த வழிமொழிகளிலிருந்துதான் எத்தனை கிளைமொழிகள் தோன்றியுள்ளன!' என்று நினைத்துப் பார்த்தார். இன்ன பல மொழிகளைப் பெற்றெடுத்தும், தமிழ்த்தெய்வம் இளமை குன்ருது கன்னியென விளங்குவது கவிஞருக்கு வியப்பைத் தந்தது.

கவிஞர், 'நம் அமிழ்தினும் இனிய தமிழ் மொழியை ஆரியத்திற்கு ஒப்பிடலாமா?' என்று ஆலோசிக்கலானர். ஆரியமொழியின் இயற்கைக்கு மாருன உரத்த ஓசைகளும், பொருந்தா இலக்கண முடிபுகளும் அவருக்கு அருவருப்பை அளித்தன. '**தேவபாஷை**' என்று கூறி எவரும் படிக்கவும் கேட்கவும் கூடாதவாறு தடுத்து வைத்திருந்த மொழி அல்லவா அது? அதன் பயனுகத்தானே, இன்று அம்மொழி உலக வழக்கிறந்து, ஒழிந்து, சிதைந்து காணப்படுகின்றது? 'இந்த ஆரியத்திற்கு ஒப்பிடுவதா நமது தெய்வத் தமிழை!' என்று எண்ணினர் பேராசிரியர். அவர் தெய்வத் தமிழுக்கு வேறு உவமை தேடினர்; எல்லாம் வல்ல இறைவனைப் போன்ற இறவாத இளமைத் தன்மை நமது மொழிக்கு இருப்பதை உணர்ந்தார். பரம்பொருளின் எல்லையில்லா விளையாட்டுக்களெல்லாம் அவர் அகக்கண்ணிற்குத் தோன்றின. அப்போது அவர் 'பல்லுயிரையும் பலவுலகையும் படைத்துக் காத்து அழிக்கின்ற அலகிலா விளையாட்டுடையவன்-

அல்லவா இறைவன் ? அத்தனைத் தொழில்களைச் செய்தாலும் இறைவன் முன்னிருந்தபடியே இருக்கின்றனே !' என்று எண்ணி வியந்தார். தமிழ்த்தெய்வத்தைத் தரிசித்த பேராசிரியர், பரம்பொருளையும் தரிசித்தமையால், அவருக்கு ஒப்புமை புலப்பட்டது. அவர் உள்ளத்தில் ஓர் அபூர்வ உணர்ச்சி பிறந்தது. உணர்ச்சியால் பல வார்த்தைகள் வெளி வந்தன. அவை தமிழ்த்தெய்வத்தின் இளமைத் திறத்தை வியந்து போற்றிய ஓர் அருமையான கவிதையாய் அமைந்தன :

" பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்,
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்,
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே !"

என்பது அந்தக் கவிதை. இம்மாதிரியான ஒரு தமிழ்த்தெய்வ வாழ்த்து, '**மனோன்மணீயம்**' என்னும் நாடகத்தின் ஆசிரியராலேதான் பாட முடிந்தது. வேறு யாரும் பாடியதில்லை. பாடியிருப்பதாகக் கூறுகின்றவர்களிடம் 'பாலெல்லாம் பசுவின் பாலாகுமா ?' என்ற கேள்வியைத்தான் கேட்க வேண்டும் நிலை ஏற்படுகின்றது. தாம் பெற்ற தரிசனத்தை வடித்தெடுத்த நல்ல சொற்களால் புனைந்து தந்த பெருமை பேராசிரியர் ஒருவர்க்கே உரியது. படிக்கின்றவர்களுடைய நெஞ்சு வீட்டில் உல்லாசமாக உலாவித் திரிகின்றது அவர் அருளிய வாழ்த்து. இதனை இதயபூர்வமாக அனுபவித்துப் பாடாத தமிழர்களுமுண்டோ ?

பேராசிரியரது இதயத் துடிப்பில் பின்னும் எத்தனையோ கவிதைகள் தோன்றின. தமிழ் பரம்பொருளுக்கு ஒப்பானதல்லவா ? பரம்பொருள் அழிவுறுமா ? தமிழுக்கும் அழிவில்லை. 'ஊழிக் காலம் என்பார்களே—அண்டசராசரங்கள் எல்லாம் அழியப் பரம்பொருளாகிய சிவபெருமான் மட்டும் தனித்திருக்கின்ற காலம்—அக்காலத்திலும் அழிவுறுதோ தமிழ் !' என்று எண்ணினர்.

அப்பொழுது அவருக்கு ஒரு கனவு ஆரம்பமாயிற்று. கவிஞர்கள் எப்பொழுதும் கனவு காண்கின்றவர்கள் அல்லவா! ஊழிக்காலத்தில் எல்லாப் பொருள்களும் அழிவுறுகின்றன; சிவபெருமான் மட்டும் தனித்திருக்கின்றார். 'அவர் தனித்திருக்கின்றாரே! எப்படிப் பொழுது போக்குகின்றார்?' என்று எண்ணினர் பேராசிரியர்; சிவபெருமான் கையில் ஏதோ ஓர் ஏடு இருப்பதாகத் தெரிகின்றது; அது என்ன ஏடு என்று உற்றுப் பார்க்கிறார்; அது **மாணிக்கவாசகர்** அருளிய **திருவாசகம்** என்பதை உணர்கின்றார். அதைப் பாராயணம் செய்கின்றார் சிவபெருமான். 'இப்படியா ஊழிக்காலத்தைக் கழிக்கின்றார் சிவபெருமான்!' என்று எண்ணிய அளவில் அவரது கனவு தெளிகின்றது. 'ஓகோ! சிவபெருமான் தில்லை சென்று, மாணிக்கவாசகர் சொல்ல, திருவாசகத்தை எழுதிச் சென்றாரே! அது இதற்காகத்தான் போலும்! கடை ஊழியிலுங்கூடச் சிவபெருமானும் தமிழ்த்தெய்வமுமே அழியாது விளங்குவார்கள்,' என்று தெளிவடைந்தார் பேராசிரியர். அவருக்கு எவ்வளவோ வியப்பாய் இருந்தது. அந்த வியப்பு ஒரு தாழிசையாய் வெளி வந்தது.

"கடையூழி வருந்தனிமை கழிக்கவன்றோ அம்பலத்துள்
உடையாருன் வாசகத்தில் ஒருபிரதி கருதினதே?"

என்று நம் கவிஞர் பாடியதை நாமும் பாடுகையில்—உள்ளூற உணர்ந்து பாடுகையில்—தாய் மொழியைப் பற்றிய பெருமை நம் உள்ளம் முழுதும் பரவுகிறது! பேராசிரியர் தமிழ்த்தெய்வத்தின் பெருமையை நினைத்து அனுபவித்த சந்தோஷ உணர்ச்சி நமக்கும் ஏற்படுகிறது!

இவ்வாறெல்லாம் தமிழின் பெருமையைப் பேசி வந்த பேராசிரியர் உள்ளம், சங்க இலக்கியங்களில் ஈடுபடுகிறது. **பத்துப்பாட்டு** அவர் உள்ளத்தை அள்ளிப் பருகிற்று என்று கூறலாம். அந்த இலக்கியச் சோலையில் உலவித் திரிந்து இன்புற்ற பேராசிரியர், 'யான் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்!' என்று அவற்றுள் மூன்று

பாட்டுக்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். என்றுலும், அவர் ஆர்வம் அடங்கவில்லை. அந்த ஆர்வம் மற்ருெரு கவியாய் வெளி வந்தது. பிற்காலப் புலவர்களின் பொருத்தமில்லாக் கற்பனைகளில் மயங்கிக் கிடக்கும் மக்களைப் பத்துப்பாட்டு முதலிய நூல்களைப் படிக்குமாறு ஆற்றுப்படுத்துகிறது அந்தக் கவி.

> "பத்துப்பாட் டாதிமனம் பற்றினர் பற்றுவரோ
> எத்துணையும் பொருட்கிசையும் இலக்கணமில் கற்பனையே?"

என்ற பாட்டைப் படிக்கும்போது நமது உள்ளமும் சங்க இலக்கியங்களில் ஈடுபடத்தான் செய்கின்றது! சங்கத்தமிழ் பாடித் தமிழர் புகழ் வளர்ப்பது நமது கடமை அல்லவா?

அடுத்தபடியாக, பேராசிரியருக்கு உலகப் பொது மறையாய் விளங்கும் வள்ளுவர் நூலைப் பற்றிய நினைவு வந்தது. ஆனுல், அவர் ஒரு குலத்துக்கு ஒரு நீதி வகுத்த **மனுதர்ம சாஸ்திரத்தைப்** பற்றியும் எண்ணினர்; 'அதையும் ஒரு தர்மசாஸ்திரம் என்கின்ருர்களே! திருக்குறளை மறுவறக் கல்லாமைதான் அதற்குக் காரணம்,' என்று முடிவு கட்டினர். உண்மையை விளக்கும் முறையில் ஒரு கவி தோன்றியது:

> "வள்ளுவர்செய் திருக்குறளை மறுவறநன் குணர்ந்தோர்கள்
> உள்ளுவரோ மனுவாதி ஒருகுலத்துக் கொருநீதி?"

என்பது அந்தக் கவி. வள்ளுவர் நூலைக் கசடறக் கற்க வேண்டும் என்பது பேராசிரியரது பெருவிருப்பம். நிறைவேற்ற வேண்டுவது நமது கடமை—மாணவர்களது முதற்கடமை.

மனேன்மணீயத்தில் பாயிரமாய் அமைந்துள்ள இந்தத் தெய்வ வாழ்த்தை ஒரு தனி நூல் என்று கூறுதல் பொருந்தும். தமிழ்த் தெய்வத்திற்குச் சூட்டப்பட்ட பாமாலை இது.

உலகில் எத்தனையோ மொழிகள் வழங்குகின்றன. எம்மொழியினரும் தம் மொழியைத் தெய்வமாகக்கொள்ளவில்லை. ஆனுல், தமிழ் மொழியை நாம் தெய்வமாக வழிபடுகின்ருேம்; தெய்வம் என்றே கூறினர்கள் நம்

ஆன்ருேர்கள். ஆசை பற்றியா அறைந்தார்கள்? அல்ல; நிச்சயித்துக் கூறினுர்கள். 'முத்தமிழும் ஆனுன் கண்டாய்' என்ருர் நாவுக்கரசர். 'தமிழ்த் தெய்வத்தை உள்நினைந்து ஏத்தல் செய்வாம்,' என்ருர் வள்ளலார். காரணங்காட்டிக் கவி புனைந்தார் நம் பேராசிரியர். தமிழே நமது கண் கண்ட தெய்வம்!

அருஞ்சொற்பொருள் :

எழில் - அழகு, வதனம் - முகம், நுதல் - நெற்றி, திலகம் - பொட்டு, துடைக்கினும் - அழித்தாலும், உதரம் - வயிறு, உடையார் - சிவபெருமான், மறுவற - குற்றம் நீங்க, கசடு - குற்றம், பாயிரம் - முகவுரை.

வினுக்கள் :

1. தமிழ்த்தெய்வம் பேராசிரியருக்கு எவ்வாறு காட்சி அளித்தது?
2. தமிழ்த்தெய்வம் பரம்பொருளுக்கு ஒப்பாவது எங்ஙனம்?
3. தமிழ் கடையூழியிலும் அழியாது என்பதைப் பேராசிரியர் எவ்வாறு உணர்ந்தார்?
4. சங்க இலக்கியங்களின் சிறப்பு யாது?
5. பேராசிரியர் திருக்குறளை எவ்வாறு பாராட்டியுள்ளார்?

4. சர்க்கரை

[திரு. R. K. விசுவநாதன் அவர்கள், M.A.]

முன்னுளில் நமது இந்திய நாடே சர்க்கரை உற்பத்தியில் சிறப்பிடம் பெற்றிருந்தது. இது முதலில் மருந்தாகப் பயன்பட்டுப் பின்னர் உணவுப் பொருள் ஆயிற்று. நம்மைக்காட்டிலும் வடவிந்தியாவில் உள்ளவர்களே நாள்தோறும் சர்க்கரைப் பண்டங்களை மிகுதியாக உட்கொண்டு வருபவர்கள். அவர்களிலும் வங்காளிகளுக்குத்தான் இதில் மிகுந்த விருப்பம். அவர்கள் உணவில் இரண்டு வேளையும் சர்க்கரைப் பண்டங்கள் இல்லாமல் இரா. ஒரு சமயம் இந்தியாவிலிருந்து பிற நாடுகளுக்குச் சர்க்கரை ஏற்றுமதியாகி வந்தது. அந்நிலைமை மாறி அயல் நாடுகளிலிருந்து சர்க்கரையைப் பெருவாரியாக இப்பொழுது நாம் இறக்குமதி செய்து வருகிறோம். சர்க்கரையைத் தரும் கரும்புப் பயிர் வளர்வதற்குத் தகுந்த நிலம் இந்திய நாட்டிலேதான் மிகுதி. இதற்கு வேண்டிய சூடு, நீர் வசதி, நிலவுரம் முதலியவை இங்கு மிகுதியாயுள. இப்பொழுது உலகின் பல இடங்களில் கரும்பு பயிர் செய்யப்பட்டு வருகின்றது. முக்கியமாகத் தென்னமெரிக்காவிலும், ஆஸ்திரேலியாவிலும் மக்கள் மிகுதியாகக் கரும்பைப் பயிர் செய்து வருகிறார்கள். ஜாவா, சுமத்திரா, போர்னியோ முதலிய தீவுகளிலும் கரும்பு மிகுதியாகப் பயிரிடப்பட்டு வருகின்றது. கரும்பில் பல வகைகள் இருக்கின்றன; யானைக்கரும்பு என்னும் வகை முதற்கொண்டு குச்சிக் கரும்பு என்னும் வகை வரை எண்ணற்ற வகைகள் இருக்கின்றன. இவை அனைத்தும் நன்றாக வளர்வதற்கு வேண்டிய சோதனைகள் கரும்புப் பண்ணைகளில் நடந்து வருகின்றன. இச்சோதனைகளில் சிலவற்றைச் செய்து, ஸர். டி. எஸ். வேங்கடராமன் என்பவர் எளிதில் கரும்பின் வகையை உயர்த்தும் வழியைக் கண்டுபிடித்தார். இதன் பயனாக நம் நாட்டில் சர்க்கரை உற்பத்தி பெருகிச் செல்வநிலை உயர்ந்தது என்று கூறப்படுகிறது.

நன்ருக வளர்ந்த கரும்பில் நூற்றுக்கு எழுபது பங்கு தண்ணீரும், பதினெட்டுப் பங்கு சர்க்கரையும், பத்துப் பங்கு 'ஸெலுலோஸ்' என்றுகூறப்படும் மூலாதாரப்பொருளும் இருக்கும். கரும்பை நசுக்கிச் சாறு எடுத்து அதைக் காய்ச்சிச் சர்க்கரையாக மாற்ற வேண்டும். சிற்றூர்களில் எண்ணெய் எடுப்பதற்குப் பயன்பட்டு வரும் செக்குகள் போன்றவற்றைக் கொண்டு, இன்றும் பல இடங்களில் கரும்பிலிருந்து சாறு பிழிந்து வருகிருர்கள். செக்குகளில் மாடுகளைப் பூட்டி ஓட்டுவதற்குப் பதிலாக, மேனுட்டில் காற்றின் விசை அல்லது நீரின் விசையைப் பயன்படுத்திய காற்ருடியைக்கொண்டு இச்செக்குகளை இயக்கி வந்தார்கள். இக்காலத்தில் நீராவி இயந்திரத்தால் இயக்கப்படும் உருளைகளே இவ்வேலைக்குப் பல இடங்களில் பயன்பட்டு வருகின்றன. இதனுல், சாறு சிறிதும் சேதமாகாமல் எடுக்கப்படுகிறது. நசுக்கும் போது கரும்புகளை நீராவியினுல் தாக்கி நசுக்குவார்கள்; கரும்புச் சக்கையை வீணுக்காமல் அதையே பயன்படுத்தி நீரைக் கொதிக்க வைப்பார்கள்; இதற்கென்று தனி முறையில் அடுப்பையும் செய்திருக்கிருர்கள். வேண்டுமென்ற போது சக்கைக்குப் பதிலாகக் கழியையோ அல்லது மரக் கட்டையையோ பயன்படுத்திக்கொள்ளுமாறு அந்த அடுப்பு அமைந்திருக்கும். சாறு எடுக்கப்பட்ட பின்னர் அதில் மிதக்கும் தூசி முதலியவை இயந்திரத்தைக்கொண்டு நீக்கப்படும். இந்த இயந்திரத்திலுள்ள உருளைகளின்மீது உருளும் நீண்ட சல்லடை அமைப்பினுல், மிதக்கும் பொருள்களெல்லாம் நீக்கப்பட்டுவிடுகின்றன. இச்சல்லடையின் துளைகள் மிகச் சிறியவையாதலால், சாறு மிகத் தெளிவாய் மாறிவிடுகிறது. இதில் கரைந்துள்ள அசுத்தங்களை—முக்கியமாகக் காடியை—நிவர்த்தி செய்வதற்குச் சுண்ணும்புத் தண்ணீரைச் சேர்த்துக் காய்ச்சுவார்கள். சேர்க்க வேண்டிய சுண்ணும்புத் தண்ணீரின் அளவும், காய்ச்சப்பட வேண்டிய நேரமும், சுடும் சாற்றுக்குத் தகுந்தபடி மாறும். சுண்ணும்பு, தண்ணீரின் மாசுகளை எல்லாம் மேலே

மிதக்கச் செய்யும். சிறிது நேரம் கழித்து அதை வடிகட்டி மிதக்கும் மாசுகளை நீக்கிவிடுவார்கள்.

சாற்றிலுள்ள சர்க்கரையை மட்டும் பிரிக்க வேண்டுவது அடுத்த வேலை. இதற்காகச் சாறு காய்ச்சப்படும். நீர் கொதித்து ஆவியாக வெளிப்பட்டுவிட்டால், சர்க்கரையை மட்டும் பிரித்துவிடலாம். இங்கே கொதித்தல் நிகழ்ச்சியைப் பற்றிய விவரம் ஒன்றைக் கூற வேண்டியிருக்கிறது. பெரும்பாலும் எல்லாத் திரவங்களும் ஆவியாக மாறும் தன்மை வாய்ந்தவைகளே. ஆனால், சில திரவங்கள் மிக விரைவில் ஆவியாகிவிடும். சான்றாக 'ஸ்பிரிட்டு' என்னும் திரவம் மிக விரைவில் ஆவியாகிவிடும். இத்துணை விரைவில் தண்ணீர் ஆவியாக மாறாது. தண்ணீரைக் கொதிக்க வைத்துத்தான் ஆவியாக மாற்ற முடியும். அதைக் காய்ச்சத் தொடங்கியதும் அதன் சூடு உயர்ந்துகொண்டே சென்று, ஒரு நிலையில் நின்றுவிடும். இச்சூட்டையே கொதிநிலைச் சூடு (Boiling Point Temperature) என்று கூறுவார்கள். சாதாரணமாகத் தண்ணீரின் கொதிநிலைச் சூடு, சென்றிக்கிரேடு திட்டத்தில் நூறு டிகிரி இருக்கும். இதைப்போல ஒவ்வொரு திரவத்துக்கும் ஒரு கொதிநிலைச் சூடு உண்டு. இக்கொதிநிலைச் சூடு திரவப் பரப்பின்மீதுள்ள இறுக்கத்துக்குத் (Pressure) தகுந்தவாறு வேறுபடும். இறுக்கம் மிகுதியானால், கொதிநிலை உயரும். இறுக்கம் குறைந்தால், கொதிநிலை தாழும். சாற்றிலுள்ள நீரை அகற்ற வேண்டுமானால், அதன்மீதுள்ள இறுக்கத்தைக் குறைத்துக்கொண்டுதான் கொதிக்க வைப்பார்கள்; எனவே, நூறு டிகிரிக்குக் குறைந்த சூட்டிலேயே சாற்றிலுள்ள நீர் ஆவியாக மாறும்படி செய்யப்படும். நீர் நன்றாகச் சுண்டியவுடன் அதன் நிறத்தைப் போக்குவதற்கென்று நன்றாகப் பொடி செய்யப்பட்ட எலும்புக் கரியின் (Bone Charcoal) மூலம் அதைச் செலுத்துவார்கள். இவ்வேலை மிகவும் முக்கியமானது. இதற்காக எலும்புக் கரியைச் சிறந்த முறையில் ஆலைகளிலேயே செய்வார்கள். விலங்குகளின் எலும்புகளை உடைத்து, அவற்றிலுள்ள கொழுப்புப்

பொருள்களை ஈதர், கரிக்கந்தகத் திரவம் (Carbon-di-Sulphide), பென்ஸீன் (Benzene) முதலிய திரவங்களால் கரைத்து முதலில் அவற்றை நீக்கிவிடுவார்கள். மீதியுள்ள பொருளை நீராவியைக்கொண்டு சூடு செய்து, அதிலிருந்து கோழை போன்ற பொருள்கள் (Colloids) யாவும் பிரிக்கப்படும். இவ்விதம் துப்புரவாக்கப்பட்ட எலும்புகள் மீண்டும் இரும்பு உலைகளில் காற்றுப் படாமல் சூடு செய்யப்படும். இதனுல், இதில் எஞ்சியுள்ள சேதனப் பொருள்கள் முழுவதும் வெளியேறிவிடும். சில, வாயுப்பொருள்களாகவும், மற்றும் சில திரவங்களாகவும் பிரிந்துவிடும். தங்கி நிற்பதுதான் எலும்புக் கரி. இதை இயந்திரத்தால் பொடி செய்த பின் இப்பொடியே சர்க்கரையைத் துப்புரவு செய்வதற்குப் பயன்படுத்தப்படுகிறது. இவ்வாறு துப்புரவு செய்யப்பட்ட சர்க்கரைப் பாகு ஸ்படிக உரு (Crystallisation) கொள்ளுமாறு செய்யப்பட்டுச் சர்க்கரையாக்கப்படுகிறது. இதைச் செய்வதற்குப் பாகை மறுபடியும் குறைந்த இறுக்கத்தில் கொதிக்க வைத்து, குளிர்வித்துச் சர்க்கரை இறுகும்படி செய்யப்படுகிறது. பின்னர் இதை நொறுக்கிச் சீரான தூள் ஆகுமாறு சுழற்சி இயந்திரம் (Centrifugal Machine) பயன்படுத்தப்படுகிறது. இத்தொழிலின் தொடக்கம் முதல் இறுதி வரை பல தொழில் நுட்பங்கள் உண்டு. எனவே, ஒவ்வொரு சமயத்திலும் வேலை சரியாக நடந்து வருகிறதா என்று கண்காணித்துக்கொண்டு வருதல் வேண்டும்.

ஐரோப்பாவில் பீட்டு (Beet) எனும் ஒருவகைக் கிழங்கிலிருந்து சர்க்கரை உற்பத்தி ஆகிறது. முதன்முதல் ஒரு ஜெர்மன் விஞ்ஞானியாரே இக்கிழங்கில் சர்க்கரை இருப்பதை உணர்ந்தார். எனவே, இம்முறை முதலில் ஜெர்மனியிலேதான் சிறப்படைந்தது. அமைப்பில் இக்கிழங்கு முள்ளங்கிக் கிழங்கைப் போல இருக்கும். நன்ருகப் பயிர் செய்யப்பட்ட கிழங்குகளில் நூற்றுக்கு எண்பது பங்கு நீரும், பத்துப்பங்கு சர்க்கரையும் இருக்கும். கிழங்குகளின் உயர்வு தாழ்வை அவற்றி-

லிருந்து பெறப்படும் சாற்றின் செறிவைக் (Density) கொண்டு அறியலாம். சர்க்கரை மிகுதியுள்ள கிழங்குகளின் சாறு மிகுந்த செறிவு கொண்டிருக்கும். கரும்புப் பண்ணைகளில் செய்வது போல இவற்றைப் பண்ணைகளில் பயிராக்கி முதல் வகைக் கிழங்குகள் உற்பத்திக்கு வேண்டிய விவரங்களை அறிந்து வருகின்றார்கள். இக்கிழங்கு கண்டு பிடித்த புதிதில் இதில் மிகக் குறைந்த அளவுக்குத்தான் சர்க்கரை இருந்தது. ஆனால், இக்காலத்தில் பயிர் செய்யப்படும் கிழங்குகளில் சர்க்கரையின் அளவு முன் இருந்ததைவிடப் பன்மடங்கு மிகுந்துள்ளது. இக்கிழங்குகளிலிருந்து சாறு எடுக்கப்படும் வகையினை இப்பொழுது பார்ப்போம் :

முதலில் கிழங்குகளிலிருந்து இலைகள் வேர்கள் முதலியவை நீக்கப்படும். பின்னர் இவை நன்றாகக் கழுவப்பட்டு இயந்திரத்திலிட்டுச் சிறிய வில்லைகளாகத் துண்டிக்கப்படும். இதைச் செய்யும் இயந்திரம் சாதாரணமாக ஒரு நாளில் நூறு டன் கிழங்குகளை வில்லைகளாகச் செய்துவிடும். ஒரு வில்லையின் கனம் ஓர் அங்குலத்தில் நூற்றில் நான்கு பங்கு இருக்கும். அகலம் சுமார் அரை அங்குலம் இருக்கும். நீருள்ள பெரிய பாண்டங்களில் இவ்வில்லைகள் போட்டுக் கொதிக்க வைக்கப்படும் ; நீரின்மேலுள்ள இறுக்கத்தைத் தக்கவாறு குறைத்துக்கொண்டுதான் கொதிக்க வைக்கப்படும். இதனால், நீர் வில்லைகளினுள் செல்லும். வில்லைகளிலிருந்து சர்க்கரைச் சாறு வெளிப்படும். இந்நிகழ்ச்சியைப் பரவுதல் (Diffusion) என்று கூறுவார்கள். வெளியிலிருக்கும் நீரின் செறிவும் உட்சென்ற நீரின் செறிவும் சரிசமானமாகும் வரை கொதிக்க வைக்கப்படும். இதனால், சர்க்கரைச் சத்து முழுவதும் கிழங்குகளிலிருந்து நீக்கப்பட்டு, நீருடன் கலந்துவிடும். கரும்புச் சாற்றைத் துப்புரவு செய்தது போல இதையும் துப்புரவு செய்வார்கள். இதனுடன் சுண்ணும்புத்தண்ணீரைக் கலந்து காய்ச்சி, எலும்புக்கரி மூலம் செலுத்தி, மறு முறை காய்ச்சிக் குளிர்வித்து, ஸ்படிக உருவை அடையச் செய்து, சர்க்-

கரை உற்பத்தி செய்வார்கள். இதன் இனிப்பு, கரும்பிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரையைவிடக் குறைவுதான். இதில் சில உப்புக்கள் (Potash Salts) பிரியாமல் சிறிதளவு தங்கிவிடுவதால், இதன் இனிப்புக் குறைந்துவிடுகின்றது. மாப்பசையிலிருந்தும் (Starch) சர்க்கரை உற்பத்தி செய்யப்படுகிறது. இதற்கு மாப்பசையைக் கந்தகக் காடியுடன் (Sulphuric Acid) கலந்து கொதிக்க வைப்பார்கள். நீண்ட நேரம் கொதிக்க வேண்டும். பின்னர் இதில் தங்கியுள்ள காடியை நீக்கிவிட்டுக் கரும்புச்சாறு, பீட்டுக் கிழங்குச்சாறு இவற்றைத் துப்புரவு செய்தது போலவே இதையும் துப்புரவு செய்வார்கள். இவ்வாறு சர்க்கரையை உற்பத்தி செய்வதால் செலவு குறையும் என்று கூறப்படுகிறது. மற்றும் சர்க்கரையைப் பழங்களிலிருந்தும், பாலிலிருந்தும், ஈச்சஞ்சாறு பனஞ்சாறு முதலிய வேறு சாறுகளிலிருந்தும் உற்பத்தி செய்யலாம். ஒவ்வொரு விதக் சர்க்கரையையும் சிறிது நீரில் கரைத்து அதன் மூலம் ஒரு வித ஒளியைச் (Plane Polarised Light) செலுத்தி, அதன் போக்கில் ஏற்படும் மாறுதலை உணர்ந்து, சர்க்கரையின் இனிப்பு அளவைக் கணக்கிட்டுவிடுவார்கள். இதனால், ஆலைகளில் சர்க்கரையின் இனிப்பு அளவு மிகு விரைவில் கணக்கிடப்பட்டுவிடும்.

சர்க்கரையை உற்பத்தி செய்யும் ஆலைகளில் அதன் கழிவுச் சரக்குகளை வீணுக்குவதில்லை. குளிர்விக்கும் போது சர்க்கரைப் பாகில் சிறிது பாகம் ஸ்படிக உரு ஆகாமல் தங்கிவிடும். இதில் சிறிதளவு பிரை (Yeast) சேர்த்துச் சிறிது நேரம் வைக்கப்படும். பிரையுடன் கலந்த பாகு சாராயமாகவும் (Alcohol) கரியமிலவாயு (Carbon-di-Oxide) ஆகவும் பிரிந்துவிடும். சாராயம் நீருடன் கலந்துவிடுவதால், அது காய்ச்சி வடித்தல் (Distillation) முறையினுல் பிரிக்கப்படும். கரியமிலவாயுவையும் வீணுக்குவதில்லை. சோடாத் தண்ணீர் முதலிய பானங்கள் செய்வதற்கு அது பயன்படும்.

சர்க்கரை உற்பத்தியில், அதைத் துப்புரவு செய்து

பகட்டாகச் செய்வதிலேதான் செலவு மிகுதியாகிறது என்றும், பகட்டாகச் செய்யாமல் வெல்லமாகச் செய்து பயன்படுத்துவதில் கெடுதல் ஒன்றுமில்லை என்றும் சிலர் கூறுகின்றனர் ; இதனால், இத்தொழிலையும் குடிசைத் தொழில்களில் ஒன்றாக ஏன் செய்யக்கூடாது என்றும் கருதுகின்றனர். சிற்றூர்களிலுள்ளவர்கள் தங்களுக்கு வேண்டிய அளவு வெல்லத்தைத் தாங்களே செய்துகொள்வதில் தடை ஒன்றும் இராது. விஞ்ஞானத்தின் துணைகொண்டு பெருத்த அளவில் சர்க்கரை செய்வதாலேதான் பல நன்மைகள் உண்டு.

அருஞ்சொற்பொருள் :

திரவம் - நீர் வடிவமான பொருள், இறுக்கம் - அழுத்தும் சத்தி, ஸ்படிகம் - கண்ணாடி போன்ற ஒரு பொருள், பாகு - காய்ச்சப்பட்ட கருப்பஞ்சாறு, கண்காணித்துக்கொண்டு - மேற்பார்த்துக்கொண்டு.

வினாக்கள் :

1. கரும்பிலிருந்து சர்க்கரை எவ்வாறு செய்யப்படுகிறது ?
2. சர்க்கரை செய்வதற்கு உபயோகிக்கப்படும் வேறு பொருள்கள் யாவை ?
3. கரும்பு மிகுதியாகப் பயிர் செய்யப்பட்டுவரும் இடங்கள் யாவை ?
4. கரும்பில் அடங்கியுள்ள பொருள்கள் யாவை ?
5. ‘ கொதிநிலைச் சூடு ’ என்பது என்ன ?
6. எலும்புக் கரித்தூள் எவ்வாறு செய்யப்படுகிறது ?
7. பீட்டுக்கிழங்கிலிருந்து சர்க்கரை எடுக்கும் முறை யாது ?
8. சர்க்கரை எடுக்கும் ஆலைகளில் கழிவுப் பொருள் எவ்வாறு பயன்படுகின்றது ?
9. சர்க்கரை உற்பத்தியை எவ்வாறு குடிசைத்தொழிலாக்கலாம் ?

5. கலா ரஸனை

[தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் அவர்கள், M.A.]

இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன் நான் கும்பகோணம் போயிருந்தேன். என்னுடன் சில இலக்கிய நண்பர்களும் வந்திருந்தார்கள். நாங்கள் போனது மகாமகத்தில் அல்ல. ஆதலால், கூட்டம் ஒன்றும் இல்லை. மகாமகக் குளத்திலும் தண்ணீர் அதிகம் இல்லை. அந்தக் குளத்தைப் பார்த்துவிட்டுப் பக்கத்தில் உள்ள நாகேசுவரசாமி கோவிலுக்குள் போனேம். அங்கே கோவில் கொண்டிருக்கும் நாகேசுவரனை வணங்கினேம். அந்தச் சுவாமியைத்தான் இந்திரனும் சூரியனும் வழிபட்டதாகக் கர்ணபரம்பரைக் கதை கூறுகிறது. இந்தக் கதைக்கு ஏற்ருற்போல, ஒவ்வொரு வருஷமும் சித்திரை மாதம் பத்தாம் தேதி முதல் மூன்று நாட்கள் காலை ஒன்பது மணிக்குக் கோபுரத்தின் வழியாய்ச் சூரியனின் கிரணங்கள் கோபுரத்திலிருந்து சுமார் ஒரு பர்லாங்கு தூரத்தில் இருக்கும் கர்ப்பக் கிருகத்தில் உள்ள மூல லிங்கத்தின்மீது விழுகிறது. இந்த விதமாகச் சூரிய வழிபாடு நடக்கிறது. கோவிலுக்குள் போனதும் இதைப்பற்றியே பிரமாதமாகச் சொன்னர்கள் கோவில் நிருவாகிகள். இதொன்றும் எங்களுக்குப் பிரமாதமாகப்படவில்லை. கொஞ்சம் ‘ஜாமட்ரி’ படித்திருந்தால், ‘ஹைப்பாடினியூஸ்’ லயனில் கோபுரத்தின்மேல் உள்ள முன் பின் கதவுகளை அமைத்துவிட்டால், இதைச் சாதித்துவிடலாம் அல்லவா? அதிசயம் எல்லாம், ‘இப்படி ஒரு கோபுரம் கட்டவும் அதற்கென்று ஒரு கதவைக் கட்டவும் தெரிந்து வைத்திருக்கிருர்களே நம் முன்னேர்கள்!’ என்பதுதான்.

கோவில் வெளிப் பிராகாரத்தைச் சுற்றி வரப் புறப்பட்டோம். தென்பக்கம் இருக்கும் மாடக் குழிகளில் (Niches) ஒரு பௌத்த பிக்ஷுவும் ஓர் அரசிளங்குமரியும் நின்றுகொண்டிருந்தார்கள். ஆம், கல்லுருவிலேதான். நல்ல நயமான வேலை என்று கண்டோம். இன்னும் சிறிது மேற்கே போய், மேலைப் பிராகாரத்திற்கே வந்துவிட்டோம்.

கர்ப்பக் கிருகத்திற்கு வெளியில் உள்ள மேலைச் சுவரில் ஒரு சிலை—அர்த்த நாரியின் சிலை—ஒன்றன் முன் வந்து சேர்ந்தோம். அதைப் பார்த்தவுடன் அசைவற்று நின்று-விட்டேன் நான்! எவ்வளவு நேரம் அப்படி நின்றேனோ, தெரியாது! 'சரி, போவோம்,' என்று பக்கத்தில் உள்ள நண்பர் என்னை உசுப்பிய போதுதான் எனக்கு உணர்ச்சி வந்தது. உணர்வு வந்தும், என்னால் அந்த இடத்தை விட்டு நகரவே முடியவில்லை! சிற்பி செதுக்கிக் காட்டி-யுள்ள ஓர் அற்புத நயத்திலேயே உள்ளத்தைப் பரவ விட்டுவிட்டு அங்கேயே நின்றேன். உடன் வந்த நண்பர்-களுக்கோ, ஆத்திரம் தாங்கவில்லை; 'என்ன அதி-சயத்தை ஐயா கண்டுவிட்டாய்? நகரமாட்டேன் என்-கிறாயே! சாப்பிடப் போக வேண்டாவோ?' என்றெல்லாம் துரிதப்படுத்தினார்கள். அப்போது சொன்னேன் அவர்-களைப் பார்த்து:

"நீங்கள் எல்லாம் அர்த்தநாரியின் சிலையைப் பல இடங்களில் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா? மதுரைப் புது மண்டபத்திலும், மற்றும் எல்லாச் சிவன் கோவிலிலுமே அர்த்தநாரியின் சிலா உருவம் இருக்கத்தானே செய்-கிறது? அர்த்தநாரி என்றால், பாதி ஆண் பாதி பெண்-ணுருவில் நிற்கும் இறைவன் உருவந்தானே? ஆதலால், எல்லாச் சிலைகளிலும் பாதியை ஆண் வடிவத்திலும் பாதியைப் பெண் வடிவத்திலுமே செதுக்கி இருக்கும். வலப் பாகத்தில் ஆண் வடிவம், அதற்கேற்பச் சடா-மகுடம், குழைக்காது, அரையில் புலித்தோலாடை, காலில் வீரக்கழல் முதலியன காட்சியளிக்கும்; இடப்பாகத்தில் பெண் வடிவம், அழகான மணிமகுடம், காதில் தோடு, கழுத்து நிறைய ஆபரணம், இடுப்பில் மேகலை மணிகள், காலில் சதங்கை முதலியன கச்சிதமாய்க் காட்சி-யளிக்கும். இரு பாகத்திலும் தோளுக்குத் தோள் ஒரே உயரம்—இடைக்கு இடை ஒரே உயரம்—முழங்காலுக்கு முழங்கால் ஒரே உயரம் என்றுதான் இருக்கும். இப்படிச் சிலைகளை வடித்த சிற்பிகள் எல்லாம் ஒரேயொரு விஷ-யத்தை மட்டும் அடியோடே மறந்துவிட்டார்கள்.

ஆணையும் பெண்ணையும் எலும்புருவில் வேறுபடுத்திக் காட்டுவது அவர்கள் இடுப்புத்தான். பெண்ணின் இடைக்குக் கீழே உள்ள பாகம் இருக்கிறதே, 'பிட்டி' (அதாவது Pelvic girdle), அது ஆணின் பிட்டியைவிட உருவில் பெரியது. பத்து மாதம் குழந்தையை வயிற்றில் ஏந்த வேண்டிய பொறுப்பு உடையவள் அல்லவா அவள்? அதற்கேற்ப விரிந்து பரந்து கிடக்கும்படி அந்தப் பாகத்தைப் படைத்திருக்கிருர் கடவுள். இது காரணமாகவேதான் அதற்கு மேல் உள்ள இடை சிறுத்துவிடுகிறது. காலின் நீளமும் (இடையிலிருந்து உள்ளங்கால் வரை உள்ள பாகமும்) சிறிது அதிகப்படுகின்றது. இதை 'அனுட்டமி' தெரிந்த ஒவ்வொருவரும் தெரிந்திருப்பர். இப்படி இருக்கும் போது, ஆணையும் பெண்ணையும் ஒரு நிலையில், சமவுருவில் உருவாக்குவது கொஞ்சம் சிரமந்தானே? இந்த நுணுக்கத்தையெல்லாம் தெரிந்தே இந்தச் சிலையைச் செதுக்கியிருக்கிருன் சிற்பி இங்கே; பெண்ணின் பிட்டிப் பாகத்தைப் பெரிதாக்கியிருக்கிருன். மேலும், பெண்ணின் நீண்ட காலை, ஆணின் குறுகிய காலுடன் சமப்படுத்துவதற்காகப் பெண்ணின் கால் பாகத்தில் ஒரு வளைவைக் கொடுத்து, நடனத்திற்குத் தயாராகும் நிலையில் அமைத்துச் சரிக்கட்டியிருக்கிருன். அடடே! அங்க நிர்மாண சாஸ்திரத்தைக்கூட இவ்வளவு நுணுக்கமாக அறிந்து இந்தச் சிலையை அதிக அற்புதமாக அமைத்து இங்கே நிறுத்தியிருக்கிருனே! இதை வியக்காவிட்டால், நீங்கள் எதைத்தான் கண்டு வியக்கப் போகிறீர்கள்?" என்றேன்.

உடனே சொன்னுர்கள் நண்பர்கள்: "ஆமாம்! நீ சொன்ன பின்னேதான் தெரிகின்றன இவையெல்லாம்! இவ்வளவு விளக்கிய பின்னேதான் இந்தச் சிலையின் பெருமையும் தெரிகிறது!" என்று என்னையும் சிலையையும் பாராட்ட முனைந்துவிட்டார்கள். அப்போது ஒரு நண்பர் மேலும் சொன்னுர்: 'சரி, அவனுக்குக் கண் இருக்கிறது; நமக்கு அது இல்லை,' என்று. அடேயப்பா! இது எவ்வளவு பெரிய உண்மை! 'கலையை அனுபவிப்பதற்குக்

கண் வேண்டும் ; கண்ணுடையவர்களே கலா ரஸிகர்கள்,' என்று மேல் நாட்டார்கள் பல முறை சொல்லுகிறார்களே ! அது உண்மை என்பது அன்றுதான் விளங்கியது எனக்கு. 'கலையை அனுபவிக்கக் கண் மட்டும் இருத்தல் போதாது. கண்ணைச் சரியாகப் பழக்கியும் இருத்தல் வேண்டும். காண்கின்ற காட்சியிலே உள்ள அதிசயங்களை ஊடுருவிச் செல்லும் உணர்ச்சியும் பெற்றிருக்க வேண்டும்,' என்று மிஸ் அன்னபெரி என்ற அம்மையார் எவ்வளவு அழகாகச் சொல்லிவிடுகிறார் ! கலா ரஸனைக்கு முக்கியமாக வேண்டுவது கண்-கண்-கண்ணேதான் !

இனிச் சிற்பக்கலை அனுபவத்தைப் பற்றிக்—கலா ரஸனையைப் பற்றி—ஒரு சில வார்த்தைகள் : இவை-களையே உரையாணியாகக் கொண்டு மற்றக் கலைகளையும் அனுபவிக்க முயலலாம் :

'ஒரு சிற்பம் சர்வ சாதாரணமானதா, அதி அற்புத-மானதா ? அது ஒரு கலைப் பொருளா, அல்லது வெறுங்-கல்லுருவந்தானா ?' என்றெல்லாம் அறிய, அந்த உருவத்-தில் உள்ள லளித நயம் (Rythm) தெரிய வேண்டும். கவிதையில் இந்த ரிதும், லளிதம் அல்லது தாளலயம், இசை இருப்பது காரணமாக எளிதாகத் தெரிந்துவிடும். ஆனால், கல்லுருவில், அதன் அங்க வளைவுகளிலும், அதன் உருவ அமைப்பிலுமேதான் இந்த லளிதத்தைத் தேட-வேண்டியிருக்கும். 'தண்ணீர் மட்டம் எப்போதும் சரி-யாகவே இருக்கும் (Water finds its level)' என்பது ஒரு சித்தாந்தம். எனினும், வெறுங்கோடு கிழித்துக் காட்டி-விட்டால் சித்திரத்தில் தண்ணீர் உருவாகிவிடாது. ஒரு நேர்க்கோட்டை இவ்வாறு மட்டும் வளைவுகளுடன் காட்டி-விட்டால் தண்ணீர் ஓடும் காட்சியே நம்முன் தோன்றி-விடுகிறது. தாமரை மலரைச் சித்திரிக்கவும், அடுக்கடுக்-காய் இருக்கும் இதழ்களையும் எடுத்துக்காட்டி உருவாக்-கினால்தான் தாமரை நம் கண் முன்னால் வரும். லளிதத்-துக்கு அடிப்படை அசைவு. கொடியில் காயப்போட்-டிருக்கும் ஒரு சேலைத்துண்டு அப்படியே கிடந்தால், அதில் அழகில்லை. ஆனால், காற்றில் அசைந்து, அதன்

கீழ்ப்பாகம் நெளிந்து நெளிந்து, வளைந்து காட்சியளிக்கும் போது ஓர் அழகு தோன்றுகிறது; லளிதமுடையதாகின்றது. அசைவிலே — ஆட்டத்திலே — உருவாகும் லளிதம். அசைவற்றிருக்கும் எப்பொருளும் உயிர் அற்ற பொருள் என்பது நமக்குத் தெரிந்ததுதானே? நடனப் பெண்ணை, நடராஜனை எல்லாம் நல்ல சிலா உருவங்கள் என்று நாம் கொண்டாடுவதன் பொருள் நமக்கு விளங்குகின்றதல்லவா?

இந்த லளிதம் எப்படி உருவாகும்? உணர்ச்சியிலேதான் உருவாகும் என்கிறுர்கள் தெரிந்தவர்கள். உள்ளத்தில் எழுகின்ற உணர்ச்சிகளைச் சந்த சித்திரத்தில் அமைத்துக் காட்டுவதுதானே கவிதை? 'துள்ளி ஓடுகின்ற உணர்ச்சியிலேதான் பெரிய உண்மைகள் பிறக்கின்றன; உயர்ந்த சங்கீதங்கள் வழிகின்றன; ஓவியங்கள் உயிர் பெற்று எழுகின்றன; காவியங்கள் விரிகின்றன,' என்று சொல்லுகிறுர் ஒரு கலா ரஸிகர். உணர்ச்சிதான் அசைவற்றிருக்கும் ஒரு பொருளுக்கு அசைவையும் ஆட்டத்தையும் கொடுக்கும். அசைவும் ஆட்டமுமே லளிதத்தை உருவாக்கும். லளிதம் உள்ள உருவமே கலா சிருஷ்டியாகும். சாந்தஸ்வரூபியாகக் காட்சியளிக்கும் புத்தர் பிரான் உருவத்திலும் ஓர் உணர்ச்சி உண்டு. அது அமைதியிலே காண்கின்ற ஒரு லளிதம் (Rythm in Repose). நடராஜனது ஆட்டமோ, ஒரே உணர்ச்சி மயந்தானே?

"ஆனந்தம் ஆடரங்கு; ஆனந்தம் பாடல்கள்;
ஆனந்தம் பல்லியம்; ஆனந்தம் வாச்சியம்;
ஆனந்த மாக அகில சராசரம்
ஆனந்தம், ஆனந்தக் கூத்துகந் தானுக்கே."

என்று ஒரே ஆனந்த வெறியில் நடராஜனது நடனம் உருவாவதைப் பார்த்த பின், கலைக்கு, கலையை உருவாக்கும் லளிதத்துக்கு அடிப்படை உணர்ச்சிதான் என்பதையும் தெரிந்துகொள்ளலாம் அல்லவா?

கலா ரஸிகர்களுக்குக் கலைப்பொருளின் லளிதம் தெரிய வேண்டும்; அதை உருவாக்கும் உணர்ச்சியும்

தெரிய வேண்டும்; இத்துடன் கலைப்பொருளின் முழுத் தோற்றத்தின் பொலிவும் (Form) தெரிய வேண்டும். கலைஞன் ஒரு பொருளைச் சிருஷ்டிக்க முற்படுவதற்கு முன், அதன் முழுத் தோற்றத்தையும், தன் உள்ளத்துக்-குள்ளேயே சிருஷ்டித்துக்கொள்கிறான். சமீப காலத்தில் வெளி வந்த விகடத் துணுக்கு ஒன்று மிகுந்த ரஸமா-யிருந்தது: ஒரு சிற்பி சிவபிரானது உருவைக் கல்லில் செதுக்கிக்கொண்டிருக்கிறான். பாதிதான் செதுக்கி முடிந்திருக்கிறது. இதைப் பார்த்து ஒருவன், 'அட அண்ணே, இந்தக் கல்லுக்குள் இவன் ஒளிந்துகொண்-டிருக்கிறான் என்பதை எப்படி அண்ணே கண்டு பிடித்து-விட்டாய்?' என்று கேட்டானும். அதுபோலத்தான் கல்லுக்குள் கனியாய் இருக்கும் கலைப்பொருள்களைக் கண்டுவிடுகிறான் கலைஞன்.

கல்லோ, கட்டையோ, உலோகமோ எல்லாம் உயிரற்ற உணர்ச்சியற்ற சடப்பொருள்கள்தாமே? அவைகளில் மனிதன் தோலில் உள்ள மிருதுத் தன்மையைக் காட்டி-விடுவது எளிதான காரியம் அன்று. துடிதுடிக்கும் சரும உணர்ச்சியை, உள்ளத் துடிப்பைக் கல்லிலே காட்டி-விடுவது எப்படி? 'இதழ் விரியாத ரோஜா மொட்டிற்குள் இருக்கும் ஜீவகளையை உணரும் திறன் எவனுக்கு இருக்-கிறதோ, அவனாலேயே கலை உருவைச் சித்திரிக்கவோ, செதுக்கவோ முடியும்,' என்கிறார் ஒருவர். 'இயற்கையில் எண்ணிறந்த உருவங்கள். கலைஞன் இங்கொரு மலரைப் பார்க்கிறான்; அங்கோர் இதழைப் பார்க்கிறான்; இங்கொரு கனியைப் பார்க்கிறான்; அங்கொரு கன்னியைப் பார்க்-கிறான்; வளர்ந்தோங்கிய மலையைப் பார்க்கிறான்; ஆழ்ந்து அகன்ற கடலைப் பார்க்கிறான்; இவற்றையெல்-லாம் கண்களை அகலத் திறந்துகொண்டே பார்க்கிறான்; இவைகளை, உருவங்களை உள்ளத்தில் நிலைநிறுத்துகிறான்; பின்னால், கல்லிலும் செம்பிலும் வடித்தெடுக்கிறான். இப்படித்தான் அற்புதமான கலா உருவம் (Splendrous form) உருவாக்கப்படுகிறது,' என்கிறார் தாமஸ் அக்கு-வினாஸ். உருவாக்கிய சிலா உருவத்தில் ஓர் இசை, ஒரு

லளிதம் தோன்றுகிறது. இதையெல்லாம் தெரிந்துதானே கிளைவ் பெல் என்பவள் சொன்னுள், ‘ கலை என்பது அதி அற்புதமான தோற்றப் பொலிவு (Art is significant form) ’ என்று ?

இனி நீங்கள் எங்காவது ஒரு கோவிலுக்குச் சென்ருல், அல்லது ஒரு பொருட்காட்சிக்குச் சென்ருல், கலா சிருஷ்டியிலுள்ள லளிதத்தைக் காண முற்படுங்கள்; உணர்ச்சியை ஊடுருவிப் பாருங்கள்; முழுத்தோற்றத்தின் பொலிவையுமே கணக்கெடுங்கள்; இவைகளையெல்லாம் தெரிந்துகொள்ள உங்கள் கண்களையே உபயோகியுங்கள்; அதற்கு அவற்றைப் பழக்கப்படுத்திக்கொள்ளுங்கள். அதன் பின் கலா ரஸனை உங்களுக்குக் கைவாராவிட்டால் என்னைக் கேளுங்கள் !

அருஞ்சொற்பொருள் :

மகாமகம் - கும்பகோணத்தில் பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு தரம் நடக்கும் விசேடத் திருவிழா. இதை ‘மாமாங்கம்’ என்பர். கர்ப்பகிருகம் - மூலஸ்தானம், ஹைப்பாடினியூஸ் - கன்னம், அர்த்தநாரீசுரன் - பாதிச் சரீரம் பெண்ணுய் இருக்கும் சிவபெருமான், மகுடம் - முடி, கச்சிதம் - ஒழுங்கு, அனுட்டமி - அங்க அமைப்பு நூல், பல்லியம் - சங்கீதக் கருவிகள், அகிலம் - எல்லாம், சராசரம் - நடையுள்ளதும் இல்லதுமாகிய பிரபஞ்சம், பொலிவு - அழகு, சருமம் - தோல்.

வினுக்கள் :

1. நாகேசுவரசாமி கோவிலில் எவ்வாறு சூரிய வழிபாடு நடைபெறுகிறது ?
2. கும்பகோணக் கோபுர அமைப்பைப் பற்றிக் கட்டுரை ஆசிரியர் கருத்து யாது ?
3. ஆசிரியர் அசைவற்று நின்று கண்ட சிற்பம் எது ?
4. பெண்களின் இடை சிறுத்திருக்கக் காரணம் யாது ?
5. கும்பகோணத்திலுள்ள அர்த்தநாரிச் சிலையின் அமைப்பை விளக்குக.
6. மதுரை முதலிய இடங்களிலுள்ள அர்த்தநாரிச் சிலைகள் எவ்வாறு அமைக்கப்பட்டுள்ளன ?
7. கலா ரஸனை பற்றி மிஸ் அன்ன பெரி அம்மையார் கூறுவது யாது ?
8. சிற்பத்தின் சிறப்பை அறிய முதலில் எதைத் தெரிந்துகொள்ள வேண்டும் ?
9. லளிதத்திற்கு அடிப்படையாய் உள்ளது எது ? விளக்குக.
10. லளிதம் எப்படி உருவாகும் ?
11. ‘ கலைக்கு அடிப்படை உணர்ச்சி,’ என்பதை விளக்குக.
12. கலா உருவம் உருவாக்கப்படுவதைப்பற்றித் தாமஸ் அக்குவினுஸ் கூறுவது என்ன ?

6. நாகனாரும் வளவனும்

[வித்துவான் ஈ. பண்டார நம்பியார் அவர்கள்]

சோழவள நாட்டில் **வெள்ளைக்குடி** என்னும் ஊர் ஒன்றுளது. அவ்வூர் வேளாண் குடியினர்க்கு நிலைக்களமாய் விளங்கிற்று. அங்கு, உழவர் குலம் உய்யத் தோன்றினார் **நாகனார்** என்னும் நல்லிசைப் புலவர். அவர் இளமையிலேயே இலக்கிய இலக்கணங்களைக் கற்றுத் தேர்ந்தார். இயற்கையாகவே அவர் உள்ளத்தில் கவிதை உணர்ச்சி கனிவு பெற்றிருந்தது. அவர் தம் உள்ளுணர்வால் தெள்ளிய தமிழில் சொற்செறிவும், பொருட்பொலிவும் மிக்க கவிதைகளைப் புனைந்து வந்தார். அவர் கவிதைகளுக்கு நாடெங்கும் நல்ல வரவேற்பிருந்தது. என்றாலும், நாகனார் காடு மேடுகளையெல்லாங் கடந்து, வள்ளல்களை அடைந்து, பாடிப் பரிசில் பெறும் வாழ்க்கையை விரும்பினாரில்லை; தம் குலத்திற்குரிய உத்தமமான உழவுத் தொழிலில் தலை நின்று உழைத்து வந்தார்.

'உலகத்தோர்க்கு அச்சாணி போன்ற உழவர்கள் உயர்வடைய வேண்டும்,' என்பது நாகனாரது பொது நோக்கம். 'உழவர்களுக்கு உயர்வளிக்க மறுக்கும் நாடு, எவ்வளவு வளமுடையதாய் இருந்த போதிலும், உயிர் வாழத் தகுதியற்றதாகிவிடும்,' என்பது அவரது உட்கருத்து. ஆதலின், தாம் வாழ வேண்டும் என்ற தந்நலமின்றி, 'உழவர்கள் உயர வேண்டும்,' என்ற எண்ணத்தால் உழைத்து வந்தார். 'பெரியோரை வியத்தலும், சிறியோரை இகழ்தலும்' அவரிடம் இல்லை. அரசனாயினும், ஆண்டியாயினும் ஒப்ப நின்று உண்மையை எடுத்துரைக்கும் உறுதியுள்ளம் அவர்பால் அமைந்திருந்தது. இத்தகைய குணக்குன்றான நாகனாரை வேளாண்குடியினர் தம் தலைவராகக் கொண்டதில் ஆச்சரியமில்லையல்லவா? அவரால் வெள்ளைக்குடி என்னும் ஊர் விளக்கம் பெற்றமையால், எல்லாரும் அவரை ஊர்ப்பெயரோடு சேர்த்து, '**வெள்ளைக்குடி நாகனார்**' என்றே வழங்கி வந்தனர்.

நாகனார் காலத்தில் சோழ நாட்டை ஆண்டு வந்த

அரசன் **கிள்ளி வளவன்** என்னும் பெயரினன். அவனைக் **குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன்** என்று வழங்குவார்கள். அவன் குளமுற்றமென்னும் இடத்தில் இறந்தது பற்றி அப்பெயர் பெற்றான் என்பர். அவன் அஞ்சா நெஞ்சினன்; பகை வேந்தர்களாகிய யானை-களுக்கு அரியேறு போன்றவன்; ஆனால், செஞ்சொற்-கவிஞன்; தமிழ்ப் புலவர்களிடம் தண்ணளியுடையான்; பசிப்பிணி மருத்துவனான **பண்ணன்** என்பவனைத் தன் நண்பனாகக் கொண்டவன். அவன் புலவர் பெருமக்க-ளால் தமிழ் மாலை சூட்டப்பட்ட புரவலனாய் விளங்கினான். **கோவூர் கிழார்** போன்ற பெரும்புலவர்கள் அவன் அவைக்களத்தில் அமர்ந்திருந்தார்கள். அரசன் அவர்க-ளோடு அளவளாவி, புலமை இன்பத்தில் பொழுது போக்கி வந்தான்; ஆதலின், நாட்டின் உயிர் நாடியான உழவுத்தொழில் தன்னாட்டில் உயர்வடைவதற்கான எவ்வித முயற்சியும் செய்தானில்லை. நாளடைவில் உழவுத் தொழில் குன்றியது. வளவன் நாட்டிலும் வறுமை எட்டிப் பார்த்தது. உழவர் குலம் பட்ட அல்லலுக்கு அளவில்லை. மக்கள் பசிப்பிணியால் துன்புற்றார்கள்; மன்னனைக் கண்டு மனக்குறையை எடுத்துரைக்கும் வகை அறியாது வருந்தினார்கள். அரசனைக் காண்பது அத்துணை அருமையாயிற்று!

இந்நிலையில், உயிருக்கு இறுதி நேர்ந்தாலும் உண்-மையை எடுத்துரைத்து மன்னனை நல்வழிப்படுத்த உறுதி கொண்டார் நாகனார் என்னும் நல்லிசைப் புலவர். அவர் அரசனை நேரில் பார்ப்பதற்குரிய வழியை ஆராய்ந்தார்; 'வரி கொடாமையே அதற்குரிய வழியாகும்,' என்று முடிவு கட்டினார்; தம் நிலபுலங்களுக்கு வரி கொடுப்பதை நிறுத்தினார்; தண்டற்காரர்கள் அவரை அழைத்துச் சென்று வளவன் முன் நிறுத்தினார்கள். தம் எண்ணம் நிறைவேறியது கண்டு புலவர் மகிழ்ந்தார்.

அரசன் புலவரை நோக்கி, 'நீர் வரிப்பணம் செலுத்-தாமையின் காரணம் என்ன?' என்று வினவினான். அப்-பொழுது நாகனார் அரசனை நோக்கி, 'முரசொலிக்கும்

படையையுடைய மூவேந்தருள்ளும் முதன்மை பெற்று விளங்கும் வளவர் பெருமானே, வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரி பாய்தலால் வேலி ஆயிரம் விளையும் விளையுளையுடையது உனது சோழநாடு. அந்நாட்டில் பொருந்திய செல்வம் மிக்க பீடு கெழு வேந்தே, நான் கூறுவன சிலவுள; அவற்றைக் கேட்பாயாக: அரசே, எளிய குடியானவர்கள் தங்கள் குறைகளைக் கூறுதற்கு வாய்ப்பளித்து, அவர்கள் குறை முடித்து ஆவன புரிந்து ஆளுவதன்றோ காவலனாகிய உனது கடமை? அக்கடமை-யறம் வழுவாது காக்கும் மன்னன் வாழும் நாட்டிலேதான் காலந்தவறாது மழை வளம் சுரக்கும் என்பதை நீ அறிந்து-கொள்ளுதல் வேண்டும். அரசன் ஒருவன் செங்கோல் தாங்கி அரியாசனத்தில் அமர்ந்திருப்பது, தன் புகழைப் பரப்ப வேண்டும் என்னும் தன்னலத்திற்காகவா? மன்-பதையைக் காத்து மாண்புறுவதற்காகவன்றோ? வெண்-கொற்றக்குடை நிழற்றுவது வெயிலை மறைத்தற்காகவா? குடிகளின் துன்பம் துடைப்பதற்காகவன்றோ? கூரிய வேலினையுடைய வளவ, மற்றும் நீ மாற்றரசரை வெற்றி கொள்வது எதனால் என்று எண்ணுகின்றாய்? வேலின் வலிமையினாலா? நால்வகைப் படைகளின் ஆற்றலினாலா? இல்லை. இல்லை. உழுகின்ற கலப்பை ஊன்றுசாலிடத்து விளைவிக்கும் நெல்லின் வலிமையினால் என்பதை நீ அறிந்துகொள்வாயாக! வான் பொய்ப்பினும், வளங்-குறையினும், மறம் நிகழினும் உலகம் மன்னனை அன்றோ பழித்துரைக்கும்? இதனை நன்கு உணர்ந்தனை-யாயின், நீ புறங்கூறுவாரது பழிமொழியை நம்பிப் பகை கொள்ளாது, உழவர் குலம் உயர வழி வகுத்து, அதனால் பிற குடிகளையும் பாதுகாப்பாயாக! அப்பொழுது நின் அரசும் சிறக்கும்; நாடும் நலம் பெறும்; பகைவரும் நின்னடியை வணங்கி வாழ்த்துவர்,' என்று தம் உள்ளத்தே உறைந்து கிடந்த உண்மைகளை எல்லாம் மன்னன் மனங்கொள்ளுமாறு எடுத்து மொழிந்தார்.

'உலகம் விளங்கவேண்டும்—உழவர் உயரவேண்டும்,' என்னும் பொது நோக்கம் கொண்ட புலவர் வாக்கில் எக்-

காலத்தவரும் அறிந்து போற்ற வேண்டிய எத்தனையோ உண்மைகள் அமைந்து கிடக்கின்றன. கிள்ளி வளவன் உள்ளம் உயர்ந்த உள்ளம்; இலக்கியச் சிந்தனையால் பண்பட்ட உள்ளம் ஆதலின், அவ்வுள்ளத்தில் புலவர் அருளிய மொழிகள் ஆழப்பதிந்து, அருள் விளங்கச் செய்தன. ஆதலின், வளவன், புறங்கூறியும் முகமன் இயம்பியும் பொய்த்துயிர் வாழும் புலவரைப் போலாது, கண்ணின்று கண்ணறச் சொல்லிய நாகனூரின் கருத்தை வரவேற்று, உழவர்க்கு நேர்ந்த குறையை உடனே நீக்கினான்; புலவரும் உழவரும் கொடுக்கவேண்டிய நிலவரியை நீக்கல் செய்தான்; நாட்டிற்குழைத்த நாகனூரின் நல்லியல்பைப் பாராட்டி, அறம் உணர்த்திய அறிவுரைக்காக அவருக்கு நன்றி கூறி அனுப்பினான்.

அன்று முதல் சோழவள நாடு நலஞ்சிறந்தது. மக்கள் பசியும் பிணியுமின்றி, வசியும் வளனும் சிறக்க வாழ்ந்தார்கள். அரசனும் '**வளவன்**' என்னும் தன் பெயர் விளங்க வாழ்ந்தான்.

இங்ஙனம் புலவர் ஒருவர் பொது வாழ்வில் ஈடுபட்டுழைத்து வெற்றி கண்டது அருமையே! அதனினும் அருமை, புலவர் மொழியைப் பொன்னேபோலப் போற்றிப் புது வாழ்வு பெற்ற புரவலனது அருஞ்செயல். இத்தகைய புலவரும், புரவலரும் வாழ்ந்த பண்டைத் தமிழகத்தை நினைத்துப் பெருமிதமடைகிறோம்!

அருஞ்சொற்பொருள் :

அரியேறு - ஆண் சிங்கம், பீடு - பெருமை, தண்ணளி - கருணை, அவை - சபை, வேலி - நிலத்தளவையினொன்று, வசி - மழை.

வினாக்கள் :

1. நாகனூர் மேற்கொண்ட தொழில் யாது?
2. அவர் பொது நோக்கம் யாது?
3. அவர் உட்கருத்து என்ன?
4. நாகனூரிடம் அமைந்திருந்த நற்குணங்கள் யாவை?
5. வளவன் நாட்டில் வறுமை ஏற்படக் காரணம் என்ன?
6. நாகனூர் மன்னனை நேரில் பார்ப்பதற்குக் கண்ட வழி யாது?
7. நாகனூர் வளவனுக்குக் கூறிய அறிவுரைகளைச் சுருக்கிக் கூறுக.
8. வளவன் உள்ளம் இலக்கியச் சிந்தனையால் பண்பட்ட உள்ளம் என்பதை விளக்குக.

7. எக்ஸ்-ரே (X-Ray)

[திரு. N. குழந்தைவேலன் அவர்கள், B.A.]

பகலில் சூரியனது ஒளியும் இராக்காலங்களில் விளக்கு வெளிச்சமும் நமக்கு இன்றியமையாதனவாய் இருக்கின்றன. ஒளியின் உதவியினலேயே உலகிலுள்ள பொருள் அனைத்தையும் நாம் காண்கின்றோம். ஒளி மக்களுக்கு எத்தனையோ வகைகளில் பயன்படுகின்றது. ஒளியின் தன்மைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது அஃது ஒரு வியத்தகு பொருளாய் இருக்கின்றது.

ஒளியானது மிக நுண்ணிய அலைகளால் ஆகியது. இந்த அலைகளை நீரலைகளுக்கு ஒருவாறு ஒப்பிடலாம். ஒளியலைகள் ஒரே அளவுடையன அல்ல. இவற்றுட்சில நீண்டும், மற்றும் சில குறுகியும் உள்ளன. ஒளியலைகளின் அளவுக்குத் தகுந்தவாறு நிறங்கள் தோன்றுகின்றன. வானவில்லில் சிவப்பு முதல் நீலம் ஈருக ஏழு நிறங்களைக் காணலாம். சிவப்பு ஒளியின் அலைகள் நீண்டும், நீலவொளியின் அலைகள் குறுகியும் இருக்கின்றன. இவற்றின் இடையில் உள்ள நிறங்களின் அலைகள் நடுத்தரமான அளவுடையவை. நாம் காணும் இவ்வேழு நிறங்களைத் தவிர, ஏனைய ஒளிக்கதிர்கள் நம் கண்ணுக்குப் புலப்படாதனவாய் இருக்கின்றன. சிவப்பு ஒளிக்கு மேலுள்ள அலைகள் மிகப் பெரியவையாதலாலும், நீலவொளிக்குக்கீழுள்ள அலைகள் மிகச் சிறியவையாதலாலும் அவை நம் கண்ணிற்படுவதில்லை. கண்ணுக்கு எட்டாத இவ்வொளிக்கதிர்கள் மிகுந்த ஆற்றல் உடையனவாய் இருக்கின்றன.

குறுகிய அலைகளை உடையதும், நிறைந்த ஆற்றல் உடையதுமான நீலவொளிக் கதிர், எக்ஸ்-ரே எனப்படும். இவ்வொளியை 1895-ஆம் ஆண்டில் ராண்ட்ஜன் (Rontgen) என்னும் பேரறிஞர் கண்டுபிடித்தார். அவர் ஒருநாள் காற்று நீக்கப்பட்ட கண்ணடிக் குழாயொன்றில் மின்சாரத்தைப் பாய்ச்சி ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தார். அக்குழாய் ஒரு கறுப்பு மூடியால் மறைக்கப்-

பட்டிருந்தது. அதனுள் மின்சாரத்தைப் பாய்ச்சியவுடன் திடீரென்று அருகில் இருந்த பொருள்கள் எல்லாம் நீல நிறத்துடன் மின்னத் தொடங்கின. இதனைக் கண்டு அப்பண்டிதர் மிகவும் வியப்புற்றார். சுற்றிலும் இருந்த பொருள்களை மிளிரும்படி செய்தது கண்ணுக்குப் புலப்படாத நீலவொளி என்பதையும், அவ்வொளி கண்ணாடிக் குழாயினுள்ளே இருந்து கறுப்பு மூடியைத் துளைத்துக்கொண்டு வெளியே வந்திருத்தல் வேண்டும் என்பதையும் அவர் கண்டறிந்தார்.

எக்ஸ்-ரே என்னும் இவ்வரிய நீலவொளி, கல், மரம் முதலிய எல்லாக் கெட்டிப் பொருள்களையும் தங்கு தடையின்றி ஊடுருவிச் செல்லும் ஆற்றல் வாய்ந்தது. இந்த ஒளியின் உதவியால் நமது உடலைப் படம் பிடித்துப் பார்க்கும் பொழுது உள்ளே இருக்கும் எலும்பு முதலியன நன்கு புலப்படுகின்றன. எக்ஸ்-ரேப் படத்தில், தசைகளின் நிழல் மெல்லியதாகவும், எலும்புகளின் நிழல் தடிப்பாகவும் தெரிகின்றன. இந்நிழற்படங்களுக்கு எக்ஸ்-ரேடியோ கிராப்ஸ் என்பது பெயர். உடலின் உள்ளே எலும்பு ஏதேனும் முறிந்து போய்விடில், எக்ஸ்-ரேயின் உதவியால் படம் பிடித்து அதிலிருந்து எலும்பு முறிந்த இடத்தைக் கண்டுபிடித்து, அதனை எளிதிற் செம்மைப்படுத்திவிடலாம். இதுவுமன்றி, நோயுள்ள இடங்களில் இவ்வொளியைப் படும்படி செய்வதால், பல கொடிய நோய்கள் நீங்கிவிடுகின்றன.

எக்ஸ்-ரே என்னும் இவ்வியத்தகு ஒளி, கல், மரம், தசை முதலியவற்றை எங்ஙனம் தாண்டிச் செல்கின்றது? ஏனைய ஒளிக்கதிர்கள் ஏன் இங்ஙனம் செல்வதில்லை? எக்ஸ்-ரே என்னும் நீலவொளியின் அலைகள் மிகச் சிறியவை. ஒவ்வோர் அலையும் ஓர் அங்குலத்தில் இருபத்தைந்து கோடியில் ஒரு பங்கு ($\frac{1}{250000000}$) இருக்குமென அறிவியற்புலவர் கணக்கிட்டிருக்கின்றனர். இதனாலேதான் நுண்ணிய நீல அலைகள், கல், மரம், முதலிய எல்லாப் பொருள்களையும் எளிதில் துளைத்துச் செல்கின்றன.

சூரிய வெளிச்சத்தில் நம் கண்ணுக்கு எட்டாது மறைந்து நிற்கும் இந்நீலவொளி, மக்கள் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாததாய் இருக்கின்றது. நாம் வெயிலில் காய்வதால் நம் உடல் நீலவொளியை உறிஞ்சி, உரம் பெறுகின்றது. இதனாலேதான் பனி மிகுந்த ஆங்கில நாடுகளில் வெயிலிற்காயும் வழக்கம் மிகுதியாய் இருக்கின்றது. சூரிய வெளிச்சம் இயற்கையாகவே பல நோய்களைப் போக்குகின்றது. சூரிய வெளிச்சம் இல்லாத காலங்களில் நீலவொளியைச் செயற்கை முறையில் உண்டாக்கி நோயாளிகளுக்குக் கொடுப்பதும் உண்டு. நாம் உட்கொள்ளும் உணவிலும் இவ்வொளியைப் பாய்ச்சி, அதனை உரம் உடையதாகச் செய்யலாம். இங்ஙனம் உரம் ஏற்றிய உணவைக் குழந்தைகளுக்குக் கொடுத்தால், எலும்புகளும் பற்களும் நன்கு வளர்ச்சியடையும்.

கண்ணுக்குத் தெரியாத சிவப்பு ஒளியும் (Infra-Red Rays) பல திறப்பட்ட நோய்களைப் போக்கப் பயன்படுகின்றது. 1929-ஆம் ஆண்டில் ஐந்தாம் ஜார்ஜ் அரசர் நோய்வாய்ப்பட்டிருந்த பொழுது இவ்வொளிதான் மிகவும் பயன்பட்டது. இதன் உதவியால் இருட்டுக் காலங்களிலும், பனி மூடி இருக்கும் வேளைகளிலும் புகைப்படம் பிடிக்கலாம். எதிரிலுள்ள பொருள் பனியினாலோ புகையினாலோ முழுவதும் மறைந்து கிடக்கும்போது அதனை எங்ஙனம் படம் பிடிப்பது? நம் கண்ணுக்குப் புலனாகும் ஒளியலைகளை மட்டும் பனியும் புகையும் தடுத்துவிடக்கூடும். ஆயினும், நம் கண்ணுக்குப் புலப்படாத சிவப்பு அலைகளோ, மறைக்கும் பொருள்கள் யாவற்றையும் ஊடுருவிக்கொண்டு வெளியில் வருகின்றன. இவ்வொளிக் கதிர்கள் படம் பிடிக்கும் கருவியின்மேல் பட்டதும் பனியினால் மறைந்திருக்கும் பொருள்களும் படத்தில் பதிகின்றன.

இத்தகைய படம் பிடிக்கும் கருவிகள் கப்பல்களில் வைக்கப்பட்டிருக்கின்றன. கடலில் பனி மூடியிருக்கும் காலங்களில் கப்பலுக்கு எதிரில் மறைந்திருக்கும் பனி

மலைகளும் பாறைகளும் இக்கருவிகளிற் பதிகின்றன. மாலுமி படத்தைப் பார்த்துக்கொண்டு பனி மலைகளிலும் பாறைகளிலும் கப்பலை மோத விடாமல் காத்துக்கொள்வான். இக்கருவிகள் எதிரில் வரும் கப்பல்களையும் படம் பிடித்துக் காட்டுவதால், மாலுமி தன் கப்பலை ஒரு புறமாக விலக்கிக்கொண்டு அவை போவதற்கு வழி விடுவான். சிவப்பு ஒளிப்படம் இல்லாவிடில், பனிக் காலங்களில் கப்பல்கள் ஒன்றோடொன்று மோதி உடைந்து போக நேரிடும்.

அருஞ்சொற்பொருள் :

வியத்தகு - அதிசயிக்கத்தக்க, உரம் - வலிமை, மாலுமி - கப்பல் ஓட்டி.

வினாக்கள் :

1. ஒளியலைகளின் தன்மை யாது?
2. வானவில்லில் காணப்படும் நிறங்கள் யாவை?
3. சிவப்பு ஒளி அலைகளுக்கும் நீல ஒளி அலைகளுக்கும் வேறுபாடு யாது?
4. சில ஒளி அலைகள் கண்ணுக்குப் புலனாகாதது ஏன்?
5. எக்ஸ்-ரேக் கதிர்களைக் கண்டறிந்தவர் யார்? எப்படிக் கண்டறிந்தார்?
6. ' எக்ஸ்-ரேடியோ கிராப்ஸ் ' என்பது என்ன?
7. எக்ஸ்-ரே நோயாளிகளுக்கு எப்படி உதவுகிறது?
8. எக்ஸ்-ரே, கல், மரம் முதலியவற்றை ஊடுருவிச் செல்வது எங்ஙனம்?
9. நீலவொளியால் ஏற்படும் நன்மைகள் யாவை?
10. சிவப்பு ஒளிப்படம் எவ்வாறு பயன்படுகிறது?
11. சிவப்பு ஒளிப்படம் மாலுமிகளுக்கு எவ்வாறு வழிகாட்டுகிறது?

8. ஐக்கிய நாடுகளின் சங்கம்

[திரு. C. J. கமலம் அவர்கள், B.A., L.T.]

இன்று உலகில் எங்கு நோக்கினும் அமைதி என்பதைக் காண்பது அருமையாய் இருக்கின்றது. ஆர்ட்டிக்குப் பனிப்பிரதேசத்தில் வாழ்கின்ற எஸ்கிமோக்களிலிருந்து, ஆப்பிரிக்காவில் வாழும் நீகிரோக்கள் வரை எல்லாரையும் ஒரு பிரச்சினையோ, தொல்லேயோ பிடித்து அலேப்பதைப் பார்க்கின்றோம். ஒரே தலே முறையில் ஏற்பட்ட இரண்டு மகாயுத்தங்கள், வாழ்க்கையிலுள்ள ஒழுக்க நெறியையும் கட்டுப்பாட்டையும் தகர்த்துவிட்டன. இவைதாம் இன்று நாம் காணும் அமைதி இன்மைக்குக் காரணம் என்று அறிஞர் கருதுகின்றனர். வல்லரசுத் தலேவர்கள்கூட, 'இனி உலகில் போர் ஏற்படாதவாறு தடுத்து அமைதியை நிலேநாட்டுதல் வேண்டும்,' என்று விரும்புகிறார்கள் ; 'நாடுகளுக்கிடையில் வளர்ந்து வரும் மனப்புழுக்கம், பகைமை, அழுக்காறு, அவா முதலிய பொல்லாங்குகள் மீண்டும் ஒரு போரை மூட்டிவிடுமாயின், மக்கள் கூட்டமே முடிந்து போவது திண்ணம்!' என்ற முடிவிற்கு வந்துவிட்டார்கள். ஆதலாலேதான் 1945ல் இரண்டாவது உலகப் பெரும்போர் முடிந்ததும் அமெரிக்காவின் குடியரசுத் தலேவராய் இருந்த **ரூஸ்வெல்டும்**, பிரிட்டனின் பிரதமராய் இருந்த **சர்ச்சிலும்**, ரஷ்யாவின் தலேவரான **ஸ்டாலினும் யால்டா** (Yalta) என்னும் இடத்தில் கூடி, உலகில் போர் ஏற்படாதவாறு தடுத்து அமைதியை நிலேநாட்டுவதற்குரிய வழி வகைகளேப் பற்றி ஆலோசித்தனர் ; ஒரு மகாநாடு கூட்டுவதென்ற முடிவிற்கு வந்தனர். அச்சு நாடுகள் நீங்கலாக, மற்ற எல்லா நாடுகளுக்கும் அழைப்பு அனுப்பினர். 1945-ஆம் ஆண்டு, ஏப்பிரல் மாதம், 26-ஆம் நாள் **ஸான் பிரான்ஸிஸ்கோவில்** மகாநாடு ஆரம்பமாயிற்று. சுமார் ஐம்பது நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் வந்து மகாநாட்டில் பங்கு கொண்டார்கள். அம்மகாநாட்டின் முடிவாக உலகப் பொதுச் சங்கம் ஒன்று

நிறுவப்பட்டது. அதற்குத்தான் **ஐக்கிய நாட்டுச் சங்கம்** (U. N. O.) என்பது பெயர்.

அம்மகாநாட்டில் பங்கு கொண்ட ஐம்பது நாடுகளிலுள்ள பிரதிநிதிகளும் கூடி, அச்சங்கத்தின் சட்டதிட்டங்களை வகுத்தார்கள். பின்பு அவற்றை அனைவரும் ஒப்புக்கொண்டு, கையெழுத்திட்டனர். அச்சட்டதிட்டங்களுக்கு '**ஐக்கிய நாட்டுச் சாசனம்**' என்பது பெயர்.

ஐக்கிய நாட்டுச் சங்கத்தின் முதற்பொதுக்கூட்டம், 1946-ஆம் ஆண்டு, ஜனவரி மாதம், 10-ஆம் நாள் இலண்டன் மாநகரில் நடைபெற்றது. அப்போது மாண்பு மிக்க மன்னர்பிரான் **ஆறும் ஜார்ஜ்** அவர்கள், வரவேற்புரை நிகழ்த்தினுர்கள். பிரதமர் **அட்லி** அவர்கள் அரியதொரு சொற்பொழிவாற்றினுர்கள்.

இச்சங்கத்தின் முக்கிய நோக்கம், போரை ஒழித்து அமைதியையும் பாதுகாப்பையும் ஏற்படுத்துவதேயாகும். இச்சங்கம், சமூக, பொருளாதார, கல்வி வளர்ச்சிகளுக்கு உதவல்; ஜாதி, மத, மொழி, நிற வேறுபாடுகளின்றி மக்களின் உரிமையை மதித்து, ஆண்களோடு பெண்களையும் சரிநிகர் சமமாக வாழச்செய்தல்; மக்கள் சமூகம் உயர்வடைவதற்கான ஆக்கவேலைகள் பலவற்றைச் செய்தல் முதலிய பல உயரிய நோக்கங்களைக்கொண்டு பணிபுரிந்து வருகின்றது.

இச்சங்கம் ஆறு பெரும்பிரிவுகளை உடையது. அவை, பொதுச்சபை (General Assembly), பாதுகாப்புச் சபை (Security Council), பொருளாதார சமுதாய சபை (Economic and Social Council), தருமகர்த்தா சபை (Trusteeship Council), உலகப் பொது நீதி மன்றம் (International Court of Justice), தலைமைக் காரியாலயம் (Secretariat) என்பனவாம். இவை ஒவ்வொன்றிலும் பல உட்கழகங்கள் இணைக்கப்பட்டுள்ளன. இச்சங்கத்தில் இன்று அறுபது நாடுகள் அங்கம் வகிக்கின்றன. அந்நாடுகளைச் சேர்ந்த சுமார் 4000 அலுவலாளர்கள் இச்சபைகளில் வேலை செய்து வருகின்றுர்கள்.

இச்சங்கத்தின் அலுவலகங்கள் அமெரிக்க ஐக்கிய

நாட்டிலுள்ள நியூயார்க்கு நகரில் அமைந்திருக்கின்றன. இவ்விடம் ஐ. நா. சங்கத்திற்கு உரியதாகும். இச்சங்கத்தில் ஆங்கிலம், சீனம், பிரெஞ்சு, ருஷ்யா, ஸ்பானியம் என்னும் மொழிகளில் பேசலாம். என்ருலும், ஆங்கிலமும் பிரெஞ்சுமே இங்கு முக்கியமாகப் பேசப்படுகின்றன.

ஐக்கிய நாட்டுச் சங்கத்தைச் சேர்ந்த எல்லா நாடுகளின் பிரதிநிதிகளும் அங்கம் வகிப்பார்கள். ஒவ்வொரு நாடும் இதன் ஒவ்வொரு கூட்டத்திற்கும் ஐந்து அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பும். அரசியல், பொருளாதாரம், சமூக முன்னேற்றம், கலைவளர்ச்சி முதலியவைகளைப் பற்றி இச்சபை ஆலோசனை கூறும். மற்றச் சபைகளின் வேலைகளைக் கவனிப்பதும், அவைகளுக்கு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பதும், பொதுவான எல்லா விஷயங்களையும் தீர்மானிப்பதும் இச்சபையின் வேலைகளாகும். இச்சபையில் வரும் தீர்மானங்கள் சபையிலுள்ள மூன்றில் இரு பங்கினர் வாக்களித்தால் மட்டுமே நிறைவேற்றப்படும்.

காப்புச்சபையில் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா, சீனு என்னும் ஐக்கிய நாடுகளின் பிரதிநிதிகள் நிலையான உறுப்பினர்களாவார்கள். இவர்களோடு பொதுச்சபையில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படும் மற்ற ஆறு நாடுகளின் பிரதிநிதிகளும் இச்சபையில் இடம் பெறுவார்கள். எனவே, இச்சபையில் பதினெருவர் உறுப்பினராவர். இச்சபையின் முக்கிய வேலை உலக நாடுகளுக்கிடையே ஏற்படும் சச்சரவுகளைத் தீர்த்து வைத்துப் போர் ஏற்படாமல் பாதுகாப்பதாகும். இச்சபையினர் சச்சரவுகளைச் சமாதான முறையில் தீர்க்க முயல்வர்; முடியாதாயின், வலுவில் போர்க்கு இறங்கும் நாட்டின்மீது போர் தொடுப்பர். அப்போது இச்சபையில் அங்கம் வகிக்கும் பிற நாடுகள் அதற்கு உதவுதல் வேண்டும். இம்மாதிரியான நடவடிக்கை எடுக்க வேண்டுமானல், நிரந்தர உறுப்பினர்கள் உட்பட ஏழு உறுப்பினர்களின் உடன்பாடு வேண்டும். இச்சபை எப்பொழுதும் வேலை செய்யும் ஒரு நிரந்தர-

மான சபையாகும். இதன்கீழ் முக்கிய வேலைகளைக் கவனிப்பதற்குப் பல சிறு குழுக்கள் இணைக்கப்பட்டுள்ளன.

இச்சபை தோன்றிய சில ஆண்டுகளுக்குள்ளேயே அரிய சேவைகள் பலவற்றைச் செய்துள்ளது: **இந்தோனேஷியாவில்** அந்நாட்டுக் குடிகளுக்கும் டச்சுக்காரர்களுக்கும் நடந்த போராட்டத்தைத் தடுத்து நிறுத்தியது; பாலஸ்தீனத்தில் இஸ்ரேல் நாட்டுக்கும் அரபு நாட்டுக்கும் நடந்த போரைத் தடுத்து அமைதியை உண்டு பண்ணிற்று; காஷ்மீரில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் நேர்ந்த போராட்டத்தைத் தடுத்து நேரிய முறையில் சாமாதனத்தை ஏற்படுத்த முயன்று வருகின்றது. இன்னும் இச்சபை செய்துள்ள அரிய செயல்கள் அளவிறந்தனவாகும். தனி மனிதர்களுக்கிடையே ஏற்படும் சச்சரவுகளைத் தீர்ப்பதே அரிதாக இருக்கும் போது, உலக நாடுகளுக்கிடையில் ஏற்படும் சண்டைகளைத் தடுத்து அமைதிக்கு முயன்று வரும் இச்சபையின் பெருந்தொண்டு போற்றுதற்குரியதாகும்.

இச்சபையின் கிளையாய் **உலகப் பொது நீதி மன்றம்** அமைந்துள்ளது. இது ஹேகு என்ற நகரில் இருக்கிறது. இதில் பதினைந்து நீதிபதிகள் அமர்ந்து நீதி பரிபாலனம் நடத்துகின்றார்கள். உலக நாடுகளுக்கிடையில் ஏற்படும் வழக்குகளை விசாரித்து நீதி வழங்குவது இதன் வேலையாகும். ஆனால், இந்நீதி மன்றம் கூறும் தீர்ப்புக்களை நிறைவேற்றி வைக்க வேண்டிய பொறுப்பு, பாதுகாப்புச் சபைக்கு உரியதாகும்.

அடுத்ததாகப் பொருளாதார சமுதாய சபையைப் பற்றித் தெரிந்துகொள்ளுதல் வேண்டும். இச்சபை பொருளாதாரம், சுகாதாரம், கல்வி, கலாசாரம் முதலிய பல துறைகளில் உழைத்து நிறைந்த செல்வமும் உயர்ந்த நீதியும் சீரும் சிறப்பும் மிக்க ஓர் இலட்சிய உலகைத் தோற்றுவிக்க முயன்று வருகின்றது என்று கூறலாம்.

தருமகர்த்தா சபை, தகுந்த முறையில் முன்னேற்றம் அடையாத நாடுகளை முன்னேற்றமடையச் செய்து, அவை தம்மைத்தாமே ஆண்டுகொள்ளும் நிலைக்கு வரும்

வரையில் அவற்றைப் பாதுகாக்கும் பொறுப்பைக் கொண்டுள்ளது. இம்முறையில் இச்சபையின் பாதுகாப்பில் இப்பொழுதும் சில நாடுகள் இருந்து வருகின்றன.

அடுத்ததாகத் தலைமைக் காரியாலயத்தைக் கவனிப்போம்: மேற்கூறிய எல்லாக் காரியங்களையும் நடத்தி வைக்க வேண்டுவது இக்காரியாலயத்தின் வேலையாகும். **நார்வே** நாட்டினரான '**டிரிக்வி லை**' (Trygve Lie) என்பவர், இக்காரியாலயத்தின் பொதுக்காரியதரிசியாராய் இருந்து, காரியங்களை நடத்தி வருகின்றார். இதில் பல தேசத்தினரும் அலுவலாளராய் இருந்து பணி புரிகின்றனர்.

ஐக்கிய நாட்டுச் சங்கத்துடன் இன்னும் பல சபைகள் இணைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் **உலகத் தொழிலாளர் சங்கம், உலக உணவு விவசாய சங்கம், கல்வி கலாசார விஞ்ஞான சங்கம், சர்வதேச பாங்கு, சர்வதேச சுகாதார சங்கம்** என்பன முக்கியமானவை.

ஐக்கிய நாட்டுச் சங்கத்தில் நமது தேசம் முக்கிய அங்கம் வகித்து வருவதோடு, நல்ல செல்வாக்கும் பெற்று விளங்குகிறது. இச்சங்கத்தால் உலகமக்கள் அடைந்து வரும் நன்மைக்கு அளவில்லை. ஆதலாலேதான் இச்சங்கத்தினமாகிய **அக்டோபர் மாதம் 24-ஆம் தேதி,** உலகினர் அனைவராலும் கொண்டாடப்படுகிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பண்டைத் தமிழன் உணர்ச்சி உலகிலிருந்து போர் என்பது இல்லாத நல்லுலகம் தோன்ற வேண்டும் என்றும், நாஞ்சிலைத் தவிரப் பிற படைக்கலங்களை அறியாத வாழ்க்கை நிலவ வேண்டும் என்றும் கண்ட கனவை இச்சங்கம் நனவாக்க முயல்கின்றது. இப்பேரவை என்றும் நின்று நிலவுவதாகுக! இதன் கொற்றம் சிறப்பதாகுக!

அருஞ்சொற்பொருள்:

அழுக்காறு - பொறாமை, அவா - பேராசை, மாண்பு - பெருமை, நாஞ்சில் - கலப்பை, படைக்கலம் - ஆயுதம், கொற்றம் - வெற்றி.

வினுக்கள் :

1. ஐக்கிய நாட்டுச் சங்கம் தோன்றிய வரலாறு யாது?
2. 'ஐக்கிய நாட்டுச் சாசனம்' என்பது யாது?
3. ஐ. நா. சங்கத்தின் முதற்பொதுக்கூட்டம் எங்கு எப்போது நடந்தது?
4. இச்சங்கத்தின் முக்கிய நோக்கம் யாது?
5. இச்சங்கத்தின் முக்கியப் பிரிவுகள் யாவை?
6. பொதுச் சபையின் வேலை யாது?
7. பாதுகாப்புச்சபையின் அமைப்பையும் வேலையையும் குறிப்பிடுக.
8. இச்சபை செய்துள்ள சேவையைக் குறிப்படுக.
9. பொருளாதார சமுதாய சபையைப்பற்றி அறிந்ததை எழுதுக.
10. ஐ. நா. சங்கத்துடன் இணைக்கப்பட்டுள்ள பிற சங்கங்கள்யாவை?

9. அமெரிக்கப் பிரயாணம்

[டாக்டர் ரா. க. சண்முகம்செட்டியார் அவர்கள், M.A., D.Litt.]

சில தினங்களுக்கு முன்பு என்னுடைய நண்பர் ஒருவர் என்னைச் சந்தித்த போது, "நீங்கள் அமெரிக்கா போயிருப்பதாகக் கேள்விப்பட்டேனே! இதற்குள் திரும்பி வந்துவிட்டீர்களா?" என்று கேட்டார். ஆம்! இரண்டு மாதங்களுக்குள் இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்குப் புறப்பட்டுப் போய், அங்கே ஒரு முக்கிய வேலையை முடித்துக்கொண்டு, ஊருக்குத் திரும்பிவிட்டேன். சாதாரணமாக இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்குப் போய்வருவதென்றால், போகவும் வரவும் 40 நாட்கள் கடற்பிரயாணம் செய்ய வேண்டும். இப்போதோவென்றால், இந்தியாவை விட்டால், மூன்று நாளில் அமெரிக்காவைச் சேரலாம்; கோயமுத்தூரிலிருந்து டில்லிக்கு இரயிலில் போவதற்கு எத்தனை நாட்களாகின்றனவோ, அத்தனை நாட்களே கராச்சியிலிருந்து விமானத்தில் அமெரிக்கா போவதற்கும் ஆகின்றன. விஞ்ஞானத்தின் மகிமை உலகத்தையே சிறிதாக்கிவிட்டது.

ஒரு நாள் காலை 8 மணிக்கு நான் கோயமுத்தூரில் என் வீட்டில் இருந்த போது, மேன்மை தங்கிய கவர்னர் அவர்களுடைய ஆபீசிலிருந்து டெலிபோனில் என்னைக் கூப்பிடுவதாகச் செய்தி வந்தது. என்னவென்று விசாரித்ததில், அமெரிக்காவில் ஒரு மகாநாடு கூடப் போவதாகவும் அந்த மகாநாட்டிற்கு இந்திய கவர்ன்மென்டின் பிரதிநிதிகளில் ஒருவராக நானும் போக முடியுமா என்றும் கேட்டார்கள். நானும் 'சரி' என்று ஒப்புக்கொண்டேன். ஆகாயக்கப்பல் வழியாகப் பிரயாணத்திற்குத் தயாராய் இருக்க வேண்டும் என்றும் சொன்னார்கள். பிரயாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளை உடனே முடித்துவிட்டேன். அமெரிக்காவுக்கு ஆகாயக்கப்பல் மார்க்கமாகப் பிரயாணம் செய்வதற்குச் சாமான் தயாரிப்பது வெகு சுலபம். கோயமுத்தூரிலிருந்து சென்னைக்குப் போவதற்கு எவ்வளவு சாமான்களைக் கட்டவேண்டுமோ,

அவ்வளவில் பாதியுங்கூடத் தேவையில்லை. அமெரிக்கப் பிரயாணத்திற்குப் படுக்கையும், உணவுப் பாத்திரமும், வெள்ளிக் கூஜாவும் வேண்டா. ஆகாயக் கப்பலில் 65 ராத்தல் எடைக்கு மேல் எடுத்துக்கொண்டு போக முடியாது. உடுப்புக்கள் அடங்கிய ஒரு பெட்டியும் சில புத்தகங்கள் பேனா காகிதம் முதலியவைகள் அடங்கிய ஒரு சிறு பையும் இருந்தால் போதும்.

'படுக்கை அவசியமில்லையா?' என்று ரயில்வே ஸ்டேஷனில் நண்பர் ஒருவர் கேட்டார். மேல் நாட்டுப் பிரயாணங்களுக்கு இது அவசியமில்லை. கப்பல், இரயில், ஓட்டல், நண்பர்களுடைய வீடுகள் இவற்றில் எங்குப் போனாலும் படுக்கை வசதி அங்கு இருக்கும். உடுப்புக்களின் எண்ணிக்கையும் அதிகமாக வேண்டுவதில்லை. ஓர் ஊருக்குக் காலை நேரத்தில் போய்ச் சேர்ந்தவுடன், அழுக்கடைந்த ஆடைகளைச் சலவைக்குக் கொடுத்தால், வெகு நேர்த்தியான சலவையுடன் அன்று சாயங்காலம் ஆடைகள் திரும்பி வந்துவிடும். இந்த வசதியிருக்கும் போது, சில ஆடைகள் மட்டும் கைவசமிருந்தால் போதும்.

அமெரிக்காவுக்குப் போகும் விமானம் கராச்சியிலிருந்து புறப்படுகின்றது. சென்னையிலிருந்து கராச்சிக்குப்போக, விமான வழியாகவே ஏற்பாடு செய்திருந்தார்கள். ஒரு நாள் பகல் 2 மணிக்குச் சென்னையிலிருந்து புறப்பட்டேன். அன்று சாயந்திரம் 5 மணிக்கெல்லாம் ஐதராபாது போய்ச் சேர்ந்துவிட்டேன். அன்றிரவு ஐதராபாதில் தங்கிவிட்டு, மறு நாள் காலை $7\frac{1}{2}$ மணிக்குப் புறப்பட்டு, பகல் $12\frac{1}{2}$ மணிக்குப் பம்பாய் வந்துவிட்டேன். பம்பாயிலிருந்து பகல் 2 மணிக்குப் புறப்பட்டுச் சாயங்காலம் 5 மணிக்குக் கராச்சியும் சேர்ந்துவிட்டேன். மறு நாள் காலை அமெரிக்காவிற்குப் புறப்படும் விமானத்தில் நானும் என்னுடனிருந்த நண்பர்களும் ஏறினோம். அது 25 பிரயாணிகள் உட்காரும்படியான பெரிய விமானம். விமானத்தை ஓட்டும் மாலுமி இஞ்சினியர் முதலியவர் 6 பேர். இவரல்லாமல் ஏராளமான சாமான்களும் நிரம்பியிருந்தன. விமானம் இவ்வளவு பாரத்தையும்

எடுத்துக்கொண்டு அதிகாலையில் 7 மணிக்குக் கராச்சியை விட்டுக் கிளம்பிற்று.

ஆகாயத்திலே, தரை மட்டத்திலிருந்து 12,000 அடிகளுக்கு மேல் விமானம் கிளம்பிவிட்டது. கடலையும், மலைகளையும், பிரதேசங்களையும் தாண்டி மேக மண்டலத்திற்கு மேல் விமானம் மணி ஒன்றுக்கு 225 மைலுக்குமேல் வேகமாகப் போய்க்கொண்டிருந்தது. கராச்சியை விட்டதும் அடுத்த தங்கல், **அரேபியாவின்** கோடியிலுள்ள **ஏடன்** பட்டினத்தில்; கராச்சியிலிருந்து இந்தப் பட்டினம் 1,700 மைல் தூரம். கப்பலில் போக வேண்டுமென்ருல், 5 நாட்கள் ஆகும். காலையில் கராச்சியை விட்டுப் பகல் சாப்பாட்டிற்கு ஏடன் சேர்ந்துவிட்டேன்.

சாப்பாட்டை முடித்துக்கொண்டு ஏடனை விட்டுப் புறப்பட்டதும், அன்று இரவு சாப்பாடு **கார்டூன்** என்னும் பட்டணத்தில்; இது ஆப்பிரிக்காவின் மத்திய பாகத்திலுள்ள ஒரு முக்கியப் பட்டணம்.

கார்டூன் பட்டணத்தில் இரவுச் சாப்பாடு முடிந்தவுடன் அங்கு இராத்தங்கல் ஏற்படுமென்று நினைத்தோம். ஆனுல், இராத்தங்குவது என்னும் ஏற்பாடில்லை. இரவு 9 மணிக்கே கார்டூனிலிருந்து விமானம் கிளம்பிவிட்டது. ஆகாயத்தில் பறப்பதற்குப் பகலாய் இருந்தால் என்ன, இரவாயிருந்தால் என்ன? ஆகாயத்தில் விமானத்திலிருக்கிருேம். 12,000 அடிக்குக் கீழ் ஆப்பிரிக்காக் கண்டத்தின் அடர்ந்த காடுகள், விரிந்த வனந்தரங்கள், உயர்ந்த மலைகள்! எங்குப் பார்த்தாலும் பயங்கரமான இருள்! இரவு முழுவதும் விமானம் போய்க்கொண்டேயிருக்கின்றது. நாங்கள் உட்கார்ந்திருந்த நாற்காலியிலேயே சிறிது சாய்ந்து கண் அயர்ந்தோம். விமானம் இருளில் போய்க்கொண்டேயிருந்தது. சூரிய வெளிச்சம் தோன்றினவுடன் கீழே பார்த்தால், ஒரே வனந்தரம்! காலை 9 மணிக்கு ஆப்பிரிக்காவின் மேல் பாகத்திலுள்ள ‘ஆக்ரா’ என்னும் பட்டினத்தில் விமானம் இறங்கிற்று. கார்டூனிலிருந்து ஆக்ராவுக்கு 2,300 மைல் தூரம். இவ்வளவு தூரத்தையும் ஒரே இரவில் கடந்தாகிவிட்டது.

ஆக்ராவைவிட்டால், அதற்கு மேற்புறம் அட்லாண்டிக்குக்கடலைத் தாண்டவேண்டும். ஒருகரையில் ஆப்பிரிக்காக் கண்டம், மறுகரையில் தென்னமெரிக்காக் கண்டம், இவை இரண்டுக்கும் நடுவில் 2,800 மைல் ஒரே கடல் மயம்; இந்தக் கடலின் மத்தியில் '**அசென்ஷன்**' என்னும் ஒரு சிறிய தீவு உண்டு. ஆக்ராவிலிருந்து அசென்ஷன் தீவுக்கு 1,300 மைல். பகலில் ஆக்ராவை விட்டவுடன் கடலைத் தாண்டி இந்தத் தீவுக்கு அன்று சாயங்காலமே வந்துவிட்டோம். அன்றிரவு இந்தத் தீவில் பட்டாளங்கள் இருக்கும் சிறிய குடிசைகளில் நாங்களும் தங்கினோம். மறு நாள் காலை அசென்ஷன் தீவிலிருந்து புறப்பட்டுத் தென்னமெரிக்காவில் உள்ள **நெட்டால்** என்னும் பட்டினத்தைச் சேர்ந்தோம். தென்னமெரிக்காவிலிருந்து வடவமெரிக்காவுக்கு ஒரே நாளில் பிரயாணம் முடிந்துவிட்டது.

சனிக்கிழமைக் காலை 7 மணிக்குக் கராச்சியிலிருந்து புறப்பட்டோம். செவ்வாய்க்கிழமைக்காலை 10 மணிக்கு அமெரிக்காவிலுள்ள '**மியாமி**' என்னும் பட்டினத்தை அடைந்தோம்.

மூன்று நாளில் ஆசியாக் கண்டம், ஆப்பிரிக்காக் கண்டம், அமெரிக்காக் கண்டம் ஆகிய மூன்று கண்டங்களையும், இரண்டு பெரிய கடல்களையும் கடந்து பிரயாணத்தை முடித்துவிட்டோம்.

ஆகாயக் கப்பலின் மகிமையால் உலக சரித்திரமே மாறுபாடடையும்; மனித வாழ்க்கையும் மனப்பான்மையும் புரட்சியடையும். இந்தியாவிலிருந்து ஆப்பிரிக்காவுக்கு ஒரே நாளில் போவதென்றால், இந்தியர்களும் ஆப்பிரிக்கர்களும் அண்டை வீட்டார் போல ஆகிவிட்டார்கள்; உலக மக்கள் எல்லாரும் ஒரு நாட்டின் மக்களைப் போன்ற நிலைமைக்கு வந்துவிட்டார்கள். மக்கள் எல்லாரும் ஒரே கடவுளின் புதல்வர்கள் என்னும் தத்துவம் விஞ்ஞானத்தின் மகிமையால் வாழ்க்கையில் உண்மையாகிவிட்டது. இனி ஓய்வின்றி உலகமெங்கும் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு ஆகாயக் கப்பல் பறந்து-

கொண்டேயிருக்கும். உலகத்தின் ஒரு பட்டணத்திலிருந்து மற்ற எந்தப் பட்டணத்திற்குப் போக வேண்டுமென்றாலும் 3 நாளைக்குள் பிரயாணத்தை முடித்துவிடலாம்.

அமெரிக்காவுக்கு நான் பிரயாணம் செய்ததன் நோக்கம், ஒரு மகாநாட்டின் விஷயம். ஒரு நாணயச் செலாவணி விஷயமாக யோசித்து முடிவு செய்வதற்கு 44 நாட்டுப் பிரதிநிதிகள் அடங்கிய மகாநாடு '**பிரிட்டன் உட்ஸ்**' என்னுமிடத்தில் ஜுலை மாதம் முதல் தேதி கூடிற்று. உலகத்திற்குப் பொதுவான சில பொருளாதார விஷயங்களைப் பற்றி யோசித்து முடிவு செய்யும் நோக்கத்துடன் இந்த மகாநாடு ஜனாதிபதி **ரூஸ்வெல்டி**னால் கூட்டப்பட்டது. உலகத்தின் சண்டைக்குக் காரணம் வறுமை. சண்டைக்குப்பின் உண்மையான சமாதானம் உலகத்தில் ஏற்பட வேண்டுமென்றால், உலக மக்களின் வறுமையைப் போக்க வழிகளைத் தேட வேண்டுமென்று எல்லாருக்கும் உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. வர்த்தகம், விவசாயம், கைத்தொழில் இவைதாம் பொருளாதாரத்திற்கு அடிப்படையானவை. ஒரு நாட்டில் உற்பத்தியாகும் பொருள்கள் தங்கு தடையின்றி மற்ற நாடுகளுக்குப் போகும் வசதிகள் இருந்தால்தான் எல்லா நாடுகளும் செழிப்படைய முடியும்.

சமீப காலத்தில் இவ்விதமான வர்த்தகத்திற்கு எவ்வளவோ இடையூறுகள் ஏற்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு நாட்டாரும் தங்கள் தங்கள் நாட்டின் அபிவிருத்தியைக் கருதி அயல் நாட்டுச் சரக்குகள் வரக்கூடாமல் இருப்பபதற்குச் சுங்கங்களையும், வரிகளையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

இதல்லாமல், ஒரு நாட்டிற்கும் மற்றொரு நாட்டிற்கும் உள்ள நாணய மாறுதலாலும் வியாபாரத்திற்குத் தடைகள் ஏற்பட்டு வருகின்றன. ஒவ்வொரு நாட்டிலும் வெவ்வேறு நாணயம் உண்டு. இந்தியாவில் ரூபாய்; அமெரிக்காவில் **டாலர்**; இங்கிலாந்தில் **ஸ்டர்லிங்கு**; ஜெர்மனியில் **மார்க்கு**; இத்தாலியில் **லிரா**. இவ்வித-

மாக ஒவ்வொரு நாட்டிலும் நாணய வேறுபாடுகள் உண்டு. ஒரு நாணயத்திற்கும் மற்ற நாணயங்களுக்கும் நிகரான விகிதம் இருந்தால்தான் வியாபாரம் தடையில்லாமல் நடக்கும். ஒரு பவுன் என்ருல் அது 4 டாலருக்குச் சமானம். இந்த விகிதம் நிகராக நிலையாக இல்லாமல், அடிக்கடி மாறிக்கொண்டிருந்தால், அமெரிக்காவுக்கும் இங்கிலாந்துக்கும் வர்த்தகம் நடத்துவது கடினம்; வர்த்தகர்களுக்கு நட்டமும் ஏற்படும். நாணய விகிதங்களை மாருமல் நிகராக்கவும், கைத்தொழில் அபிவிருத்திக்கு மூலதன உதவி எளிதில் கிடைக்கும் மார்க்கத்தை உண்டாக்கவும் வேண்டிய வழிகள்தாம் இந்த மகாநாட்டில் நிர்ணயிக்கப்பட்டன.

அருஞ்சொற்பொருள் :

மார்க்கம் - வழி, வனந்தரங்கள் - காட்டுப் பிரதேசங்கள், தத்துவம் - உண்மை, சுங்கம் - வியாபாரப் பொருள்கட்கு விதிக்கும் வரி, நிகரான - சமமான, நிர்ணயித்தல் - முடிவு செய்தல்.

விளுக்கள் :

1. 'விஞ்ஞானத்தின் மகிமை உலகத்தையே சிறிதாக்கிவிட்டது.' இதனை விளக்குக.

2. ஆகாயவிமானப் பிரயாணத்திற்கு வேண்டிய பொருள்கள் எவை ?

3. 'மேல் நாட்டுப் பிரயாணத்திற்குப் படுக்கை அவசியமில்லை.'—ஏன் ?

4. ஆகாய விமானம் உலக ஒற்றுமைக்கு எங்ஙனம் உதவுகிறது ?

5. கட்டுரை ஆசிரியர் அமெரிக்கப் பிரயாணத்தை மேற்கொள்ளக் காரணம் என்ன ?

6. கட்டுரை ஆசிரியர் கலந்துகொண்ட மகாநாட்டில் முடிவு செய்யப்பட்டவை யாவை ?

7. வர்த்தகத்திற்கு நேரும் தடைகள் என ஆசிரியர் எவற்றைக் குறிப்பிடுகின்ருர் ?

8. சென்னையிலிருந்து அமெரிக்காவிற்கு ஆகாய விமானம் மூலம் பிரயாணம் செய்வது குறித்துச் சுருக்கி எழுதுக.

10. அன்னைக்கு

[டாக்டர் மு, வரதராசனார் அவர்கள், M. O, L., Ph. D.]

அன்புள்ள அம்மா,

உன் கடிதம் வந்ததும் எனக்கு ஒரு வகை ஆறுதல் ஏற்பட்டது. அத்தையைப் பற்றியும் தமக்கையைப் பற்றியும் எழுதியிருந்த செய்திகளால் ஆறுதல் ஏற்படவில்லை. தந்தையைப்பற்றியும் நண்பரைப் பற்றியும் எழுதியிருந்த எழுத்துக்களாலும் ஆறுதல் ஏற்படவில்லை. ஆனால், நீயும் உன் பொன்னான கையால், 'தமிழர்களுக்கும் எதிர்காலம் உண்டு,' என்று எழுதிய மணி மொழிகளே எனக்கு ஆறுதல் அளித்தன.

'தமிழர்களுக்கும் எதிர்காலம் உண்டு,' என்று எழுதி ஆறுதல் அளித்த நீ, அதற்குக் காட்டிய காரணந்தான் எதிர் பாராததாய் உள்ளது. 'எல்லாரும் பங்கு கேட்கின்றனர். ஆந்திரர்களுக்கு ஆந்திரமாகாணம் கேட்பது ஒரு சமயக் கொள்கை போல ஆய்விட்டது. வடநாட்டில் மற்றவர்களும் மாகாணப்பற்றும் மாகாணக் கடமையும் மேற்கொண்டு பங்கு உரிமை கொண்டாடுகின்றார்கள். ஆகையால், மொழி வகையால் பிரித்து தமிழனையும் வாழ வைக்கும் நாள் வரப் போகின்றது. அப்போது தமிழன் புதுப்பாடம் கற்றுக்கொள்ளப் போகின்றான்,' என்று எழுதியிருக்கின்றாய். எனக்கு இது ஒன்றே புதுமையாய்த் தோன்றிற்று. அப்படியானால், தமிழன் தானே விரும்பி ஏற்றுத் தன் குடும்பக் கடமையைச் செய்யப்போவதில்லையா? பிறர் கட்டாயத்தால் ஏற்பட்ட போதுதான் 'வேறு வழி இல்லையே!' என்று தன்னைத்தான் காத்துக்கொள்ளத் துணிவானோ? நன்றாய் இருக்கின்றதே தமிழன் போக்கு!

எப்படியாவது போகட்டும். கால வெள்ளத்தில் நீந்திச் சென்றால் போதும். தமிழன் எப்படியாவது காலத்தை உணர்ந்து, மாறுதல்களை உணர்ந்து, வாழ்ந்தால் போதும். ....எறும்பும் காக்கையும் எந்த இடத்திற்கும், காலத்திற்கும், சூழலுக்கும் ஏற்றபடி உண்டு

வளர்ந்து வாழவில்லையா? வாழ்க்கைப் போராட்டத்தில் யானையும் அன்னமும் தோற்றுப் போக, எறும்பும் காக்கையும் வெற்றி பெறவில்லையா?

நான் நாட்டை நினைந்து வருந்தினேன். நீ வீட்டை உதாரணமாக எடுத்துக் காட்டியிருக்கின்றாய். என் பாட்டனார் குடும்பத்தைப் பங்கிட்டுப் பிரிக்கக் கூடாது என்று நெடுங்காலம் தள்ளிவந்த கதையை நினைவு படுத்தினாய். உண்மைதான் அம்மா! பாட்டனார் காலத்தில் எந்தப் பெரியவர்களுக்கும், 'அண்ணன் தம்பி என்றால் பங்கு கேட்கக் கூடாது; பிரியக் கூடாது; வாசற்படி இரண்டு ஆகக்கூடாது; அடுப்பங்கரை இரண்டுபடக் கூடாது,' என்றெல்லாம் எண்ணம் தோன்றும். பாட்டனார்மேல் குறை சொல்லிப் பயன் என்ன? அது அந்தக் காலத்துப் போக்கு. ஆனால், அவ்வாறு பாட்டனார் காலந்தள்ளிய போது, தந்தையாரும் சிற்றப்பன்மாரும் ஏன் வாய்மூடி அடங்கிக் கிடந்தார்கள்? இப்போது வீரம் பேசும் பங்காளிகள் அப்போது பங்கு வேண்டா என்று அமைதியாயிருந்தார்களா? இறுதியில் பாட்டனாரின் எண்ணம் பலிக்கவில்லை அல்லவா? அவர் வயிற்றில் பிறந்தவர்கள் அடிபட்டு, உதைபட்டு, அல்லற்பட்டுத் தெருவில் நின்ற போது, அதே பாட்டனார் கண்ணீர் விட்டுக்கொண்டே, பங்கு போட்டுத் தரவில்லையா?

ஆனால், பாட்டனார் செயலால் நம் குடும்பத்திற்கும் பங்காளி குடும்பங்களுக்கும் மனக் கசப்பு மாறவில்லை. அது போலச் சில அரசியல் பாட்டன்மாரின் கொள்கைகளால் இந்தியாவின் உட்பிரிவான நாடுகளுக்குள் கசப்பு நீடிக்குமே என்பதை நினைக்கும் போது வருத்தமாகவே இருக்கின்றது.

அம்மா, உன் கடிதத்தில், "பாட்டனாரின் உயர்ந்த நோக்கத்தைக் காப்பாற்ற முயன்றதால், குடும்பம் கலகலக்க நேர்ந்தது," என்று எழுதியிருக்கின்றாய். அதில் 'உயர்ந்த நோக்கம்' என்று நீ குறித்தது உண்மையான கருத்தா, அல்லது எள்ளும் 'குறிப்பா? தெரியவில்லை. என்னைக் கேட்டால், என்னால் சொல்லமுடியாது. ஆனால்,

உண்மையாகவே அது உயர்ந்த நோக்கம் என்று கொண்டாலும், பாகம் பங்கிடாமல் அண்ணன் தம்பிகள் நரைத்து மூத்துக் கிழவர்கள் ஆவது உயர்ந்த நோக்கம் என்றே கொண்டாலும், மனிதர்கள் அப்படி வாழக் கூடாது என்றே எண்ணுகின்றேன்.

உயர்ந்த நோக்கம், உயர்ந்த நோக்கம் என்று சொல்லி வாழ்க்கையைக் கெடுத்துக்கொள்வோர் பலர் இருக்கின்றனர். அவர்களில் பாட்டனுரும் ஒருவர். இன்றுள்ள அரசியல் பாட்டன்மார் அவரைப்போல இருப்பது நன்மையா?

நோக்கமும் கொள்கையும் மக்கள் வாழ்க்கைக்காக—மக்களுக்காக—ஏற்பட்டவைகளே. மதமும் மொழியும் அப்படி அப்படியே மக்களின் நன்மைக்காக ஏற்பட்டவைகளே. ஆனுல், இன்று இந்தியா முழுதும் நான் காணும் காட்சி மதத்திற்காக, மொழிக்காக, நோக்கத்துக்காக, கொள்கைக்காக என்று இப்படிப்பட்ட காரணங்களுக்காக, மக்கள் சாகின்ருர்கள்; வதைகின்ருர்கள்; அஞ்சுகின்ருர்கள்; அலைகின்ருர்கள்; ஒருவரை ஒருவர் பகைக்கின்ருர்கள்.

பட்டுப் பூச்சி தானே நூல் உண்டாக்கி, தன்னையே சுற்றிக்கொண்டு, தானே ஏற்படுத்திய அந்த வலைக்குள் தானே கிடந்து வருந்துகின்றது அல்லவா? மனிதனும் அப்படியே தன் மூளை கொண்டு தானே ஏற்படுத்திக்கொள்கின்ற கொள்கை வலைக்குள் தானே அகப்பட்டு அழிகின்ருன். இன்று உலகத்தில் மக்கள் படும் தொல்லைக்குக் காரணம் என்ன? ....மனிதன் மூளையில் தோன்றிய சில தவருன எண்ணங்களுக்கு மனிதன் அடிமையாகி அழிந்து போகின்ருன். வாழ்வுக்காகக் கண்டான் கொள்கைகளை. நாளடைவில் கொள்கைகளுக்காக வாழ்வைப் பலி கொடுக்கிருன். அரசியல் கொள்கை வலுக்கின்றது; மதம் ஆகின்றது; எதிர்க்கட்சிகளை வளர்க்கின்றது; எதிர் பாராத போர்களை உண்டாக்குகின்றது. ஒன்றும் அறியாத பாமர மக்கள் பட முடியாத துன்பங்களைப்பட்டு வருந்துகின்ருர்கள். உயர்ந்த நோக்-

கந்தான்; ஆனால், ஓயாத் தொல்லையாய் மூள்கின்றது. காரணம் இல்லாமல் ஏழை மக்கள் துன்பங்களுக்கு ஆளாகின்றார்கள்; இதைக் கண்ட உலகத் தலைவர்கள் நெஞ்சம் கலங்குகின்றார்கள்; மெல்ல மெல்ல உண்மையை உணர்த்தி உதவ முயல்கின்றார்கள்; கொள்கையைவிட, உயர்ந்த நோக்கத்தைவிட, பொது மக்களின் உயிர் வாழ்க்கை விலையுயர்ந்தது என்பதைத் தெளியச் செய்கின்றார்கள்.

மனிதன் குறை உடையவன் மட்டும் அல்லன்; குறை காண்பவனும் அவனே. பிறர் குறையைக் காண்பவன் அரை மனிதன். தன் குறையை உணர்பவன் முழு மனிதன். அரசியலிலும் முழு மனிதர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் சிக்குண்ட வலையை அறுத்து வெளி வருகின்றார்கள்.

இப்படியே மனிதன் பல துறைகளிலும் தான் ஏற்படுத்திச் சிக்குண்ட வலையைத் தானே தகர்த்து அழித்து முன்னேறி வந்திருக்கின்றான்; இன்று அரசியல் துறையில் பல வலைகளைப் பின்னி அமைத்துக்கொண்டு அல்லற்படுகின்றான். கட்சிகளை அமைத்துவிட்டு அந்தக் கட்சிகளுக்காகத் தாங்கள் வாழ வேண்டும் என்று மக்கள் தவறாக எண்ணுகின்றார்கள். பல வகைக் கட்சிகளால் நாட்டில் தொல்லை பெருகக் கண்டு கண்டு, "கட்சிகள் நம் ஒற்றுமையான வாழ்வைக் கெடுக்குமானால், நம்மைப் பாழ்படுத்துமானால், அந்தக் கட்சிகள் வேண்டுமா? கட்சிகளுக்காக மக்கள் பலியாகக் கூடாது. மக்களுக்காகக் கட்சிகள் பலியாகட்டும்," என்றுஉணரும் நாள் வாராதா?

அம்மா, நல்ல உதாரணம் எடுத்து எழுதினாய்! பாட்டனார் கதை எனக்கு மட்டுமல்ல; உலகத்துக்கே நல்ல பாடம் என்று உணர்கின்றேன். உன் எளிய எழுத்து அன்பை மட்டும் அல்லாமல், அறிவையும் வளர்க்கும் என்பதைக் கண்டுகொண்டேன்.

அன்புள்ள மகன்,
எழில்.

அருஞ்சொற்பொருள் :

ஆறுதல் - அமைதி, தமக்கை - அக்காள், சூழல் - சுற்றுப்புறம், அல்லல் - துன்பம், எள்ளும் - இகழும், தொல்லை - தொந்தரவு, பாமரர் - அறிவீனர்.

வினாக்கள் :

1. எழில் தமக்கு ஆறுதல் ஏற்பட்டமைக்குக் கூறும் காரணம் யாது ?

2. அன்னையார், தமிழர்களுக்கு எதிர்காலம் உண்டு என்பதற்குக் காட்டிய காரணம் யாது ? அது பொருந்துவது எங்ஙனம் ?

3. நாட்டுக்கு வீட்டை உதாரணமாகக் காட்டுவது எங்ஙனம் பொருந்தும் ?

4. பாட்டனரின் உயர்ந்த நோக்கமாக அன்னையார் கூறியதை எழில் எவ்வாறு மறுக்கின்றார் ?

5. 'மனிதன் வாழ வகுத்த கொள்கைகளால் வாழ்வைப் பாழாக்குகின்றான்.'—விளக்குக.

6. அரை மனிதன், முழு மனிதன்—இவர் யாவர் ?

7. நாட்டில் தோன்றும் கட்சிகளால் விளையும் கேட்டினை விளக்குக.

8. அன்னையாரின் கடிதத்தால் ஏற்படும் நன்மைகளாக எழில் குறிப்பிடுவன யாவை ?

11. அமரன்

(துன்பியல் நாடகம்)

[திரு. தி. அ. சொக்கலிங்கம் அவர்கள், B. A. (Hons.)]

நாடக பாத்திரங்கள்

ராஜேந்திர சோழன்	—	சோழ அரசன்
திரௌபதி	—	சோழன் மகள்
மயன்	—	ஆஸ்தானச் சிற்பி
இரகுநாதன்	—	மயனுக்கு மகன்
பிஸ்மாக்கு, இஸ்ரேல்	—	யவன நாட்டுச் சிற்பிகளின் தலைவர்கள்

காட்சி–1

[நகரை அடுத்த சோலை வெளியில் ஒரு சிற்பக் குடிசை; கந்தர்வ-லோகம் என்று காவியத்தில் படித்திருக்கின்றோமல்லவா? அதைப்-போன்று, கவினுற விளங்குவது கலைக்கோவிலான அக்குடிசை. அந்தி மயங்கும் நேரம்; செவ்வரி படர்ந்த வானில் திரள்திரளான மேகக் கூட்டங்கள் சஞ்சரிக்கின்றன. மேலைத்திசையில் மலைத்தொடர்கள் வானுற ஓங்கி நிற்கின்றன. தென்னங்கீற்றின் பொன்னூசலில் சிட்டுக்குருவிகள் ஆடி மகிழ்கின்றன. இக்காட்சிகள் அனைத்தும் அக்குடிசைக்குப் பின்னணியாய் அமைந்திருக்கின்றன. குடிசையினுள் செல்வோம். அது குடிசையா? அன்று அன்று. தேவமாளிகை அது. எனினும், ஆஸ்தானச் சிற்பி மயன், அதைக் குடிசை என்றுதான் வழங்குவான். உள்ளே மேற்கு நோக்கி ஒரு சாளரம் உளது. அதன் அருகில் ஒரு கட்டிலில் அமர்ந்திருக்கிறான் மயன். அவன் தோற்றம்: நரைத்துச் சுருண்ட கேசம், அனுபவ முத்திரை பதிந்த முகம், நெற்றியில் சிந்தனைக் கோடுகள். அவன் ஆவல் கலந்த நோக்குடன் வான வெளியை நோக்கிக்கொண்-டிருக்கிறான்; யாரோ வரும் காலடி ஓசை கேட்டுத் திரும்புகிறான்.]

மயன் : யாரது? இரகுவா?

இரகுநாதன் : ஆமப்பா, நான்தான்.

மயன் : ஏன் இத்தனை நேரம்? அந்தி மயங்குமுன் வீடு வந்துவிடுவாயே! உன்னை ஒரு நிமிஷம் பார்க்கா-விட்டாலும் என் உள்ளம் வேதனை அடைகின்றதடா!

இரகு : அப்பா, பக்கத்துச் சோலையின் அழகு என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது ! அம்மலையைப் போல என் சிந்தனையும் வானுறவோங்கி நின்றது ! எத்தனையோ எண்ண அலைகள் என் உள்ளத்தில் தோன்றிக்கொண்டிருந்தன ! அப்பா, அதி அற்புதமான சிற்பம் ஒன்றை உருவாக்கும் எண்ணந்தான் அவ்வலைகள். அந்தச் சிற்பத்தை எப்படி அமைப்பது என்பதைப் பற்றியே என் ஜீவனும் சிந்தையும் இவ்வளவு நேரம் வேலை செய்துகொண்டிருந்தன ! அதனாலேதான் இன்று இவ்வளவு தாமதம் ஏற்பட்டது.

மயன் : இரகு, உன்னைப் புதல்வனாய் அடைந்தது என் பாக்கியமே ! (பெருமிதத்துடன்) புலிக்குப் பிறந்தது பூனையாகுமா ! ஒரு சிற்பியின் உன்னத இலட்சணம் அத்தனையும் உன்னிடம் அமைந்து கிடக்கின்றன ! நீ பல்லாண்டு இசையுடன் வாழ வேண்டும் ! இதுதான் என் ஆசை.

இரகு : அப்பா, உங்கள் ஆசியும் இறைவன் கருணையும் இருந்தால், என் புகழ் அலைகடலுக்கு அப்பாலும் சென்று பரவும் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயம் இல்லை. ஆனால்,......அப்பா,......

மயன் : என்ன ? 'ஆனால்' என்றாயே ! உனக்கு ஏதேனும் குறை வைத்திருக்கின்றேனா ?

இரகு : அப்பா, அரண்மனைக்கு அழைத்துச்செல்வதாகக் கூறி என்னை இத்தனை காலம் ஏமாற்றிவிட்டீர்களே ! அரசருக்கு அறிமுகம் செய்து வைக்க மாட்டீர்களா ? இது வரையும் அரசரைத் தரிசிக்க வாய்ப்பு அளிக்கவில்லையே என்பதுதான் எனது ஒரே மனக்குறை.

மயன் : இரகு, எல்லாம் உன் நன்மையைக் கருதித்தானடா ! உன்னைச் சிற்பக்கலையில் வல்லவனாகச் செய்த பின்பு அரசருக்கு அறிமுகம் செய்து வைக்க வேண்டும் என்பதுதான் என் எண்ணம். அதற்குரிய காலமும் வர வேண்டாவா ? நாளைக்கு உன் எண்ணமும் என் எண்ணமும் நிறைவேறும் என்று நம்புகிறேன்.

இரகு : அப்பா, நாளைக்கு என்ன விசேடம் ?

மயன் : மகனே, நாளைக்கு மன்னரின் 'தர்பார்' நடக்கப் போகிறது. மன்னர் சிற்பக்கலைப் போட்டி ஒன்று நடத்தப் போகின்றார்; அதற்கென்று பல தேசத்துச் சிற்பி-களையும் அழைத்திருக்கின்றார். எல்லாரும் தர்பார் மண்ட-பத்தில் வந்து கூடுவர். அப்போது உன்னை அழைத்துச் சென்று அரசருக்கு அறிமுகம் செய்து வைக்கிறேன். அப்பொழுது நீ பிற நாட்டுச் சிற்பிகளையும் கண்டு மகிழலாம் அல்லவா ?

இரகு : அப்பா, இது உண்மைதானா ?

மயன் : உண்மைதானடா ! நாளைக்கு அரண்மனை செல்லச் சித்தமாயிரு.

இரகு : நல்லது அப்பா !

காட்சி—2

[தர்பார் மண்டபத்தில் பல தேசச் சிற்பிகள் தங்களுக்கு உரிய ஆசனங்களில் அமர்ந்திருக்கின்றார்கள். மயனும், இரகுவும் அரச ஆசனத்தின் அருகிலுள்ள ஆசனங்களில் அமர்ந்திருக்கின்றனர். எல்லார் கண்களும் இரகுவின்மேல் பாய்கின்றன. மன்னன் வருகின்றான்.]

காவலாளர் : பராக்கு ! பராக்கு !

[நிசத்தம். அரசன் ஆசனத்தில் அமர்கின்றான்.]

மயன் : அரசரே, வணக்கம் ! என் மகன் இரகுவை உங்களுக்கு அறிமுகம் செய்து வைக்கலாமென்று அழைத்து வந்திருக்கிறேன். (இரகுவின் பக்கம் திரும்பி) இரகு, மன்னருக்கு வணக்கம் கூறு.

இரகு : வணக்கம் அரசரே !

மன்னன் : நீ பல்லாண்டு மங்காப் புகழுடன் வாழ்க! சிற்பக்கலை உன் மடியில் தவழ்ந்து வானுறு மதியம்போல வளர்க ! இதோ இந்த முத்து மாலையைப் பெற்றுக்கொள் ! உன் மேதைக்கு அளிக்கும் என் கன்னிப் பரிசு இது.

இரகு : உங்களுக்கு என் நன்றி உரியதாகுக ! உங்கள் அன்பும் ஆதரவும் நீடு வாழ்க !

மன் : சிற்ப மேதைகளே, இந்த நன்னாளில் உங்கள் அனைவரையும் வரவேற்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்-றேன் ! என் ஆஸ்தானச் சிற்பியாராகிய மயனாருடன்

கலந்து ஒரு சிற்பப் போட்டி நடத்தத் தீர்மானித்துள்ளேன். நமது நகரின் மேலைப்புறச் சோலையைச் சிற்பிகளின் தேவ நகரமாக்க வேண்டும். உங்கள் சிந்தனைச் செல்வத்தையெல்லாம் சிற்பமாக வடியுங்கள். என் உடல் பொருள் ஆவி அனைத்தையும் சிற்பக் கலைக்கே உரிமையாக்குகிறேன். அகில உலகும் உங்கள் சிற்ப வன்மைக்குத் தலை குனிதல் வேண்டும். சோழ சாம்ராஜ்யத்தின் புகழ் உங்கள் பேசும் சிற்பத்தின் மூலம் உச்ச நிலை அடைதல் வேண்டும். இதுதான் என் அவா. உங்களுள் ஒவ்வொருவரும் சமைக்கும் சிற்பங்களுள் சிறந்த ஒன்றிற்கு ஒப்புயர்வற்ற பரிசு ஒன்று அளிக்கப் போகிறேன். ஆம்! உண்மையாக ஒப்புயர்வற்ற பரிசுதான் அது! தன்னேரில்லாத் தனிப் பரிசு—எந்த சாம்ராஜ்ய மன்னனும் இதுவரை அளிக்காத பரிசு—என் ஒரே மகள் **திரௌபதி**.

சபையிலுள்ள அனைவரும்: என்ன! இளவரசியா!

மன்: ஆம்! அவளேதான்! ஐயம் வேண்டா! உங்கள் சிற்பக் கலைக்கு என் மகளைக் காணிக்கையாக வைக்கிறேன். இன்றே உங்கள் வேலையை ஆரம்பிக்கலாம். (மயனிடம் திரும்பி) சிற்பியீர், உம் குமாரனும் இதில் பங்கெடுத்துக்கொள்ளுதல் வேண்டும்.

மயன்: நல்லது அரசரே! உங்கள் ஆஞ்ஞை.

மன்: சரி! சபையை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

எல்லாரும்: மன்னர் வாழ்க! ஓங்குக சிற்பக் கலை!

காட்சி–3

[மயன் குடிசை. மயனும் இரகுவும்.]

மயன்: இரகு, அரண்மனை நிகழ்ச்சிகளைப் பற்றி உன் எண்ணம் என்ன?

இரகு: என் எண்ணமா? மன்னருக்குச் சிற்பக் கலையின்மேலிருக்கின்ற மோகம் நம்மைத் திகைக்கவைக்கின்றது.

மயன் : மன்னர் பேச்சைக் கேட்ட யவனத்துச் சிற்பிகள் அச்சடித்த பதுமைகளாய் அல்லவா இருந்தார்கள் !

இரகு : வேறு பேசுவதற்கு என்ன இருக்கின்றது ? பட்டத்து இளவரசியை அல்லவா அரசர் இத்திட்டத்திற்குப் பரிசாக வைத்திருக்கிருர் ?

மயன் : இரகு, நீயும் போட்டியில் பங்கெடுக்கப் போகின்ருயல்லவா ?

இரகு : ஆம் அப்பா ! சந்தேகமில்லாமல் ! உங்கள் ஆசியும் மன்னரின் கருணையும் இருக்குமாளுல், என் ஒவ்வொரு சிற்றுளியும் வெற்றியின் விளைவை உருவாக்கிக்கொண்டே இருக்கும் ; நானும் உயர்ந்த சிற்பம் ஒன்றைச் சமைத்து முடிப்பேன். ஆசீர்வதியுங்கள் அப்பா !

மயன் : நீ ஆக்க இருக்கும் இச்சிற்பத்தின் மூலம் நமது புகழும், நமது சாம்ராஜ்யத்தின் புகழும் பொங்கிப் பொலிக ! அரசர் அளித்த முத்து மாலேயே உன் மேதைக்குரிய கன்னிப் பரிசு.

இரகு : (மெல்ல நகைத்து) எல்லாம் உங்கள் ஆசீர்வாதந்தானப்பா !

மயன் : சரி ! இன்றே உன் வேலேயை ஆரம்பித்துவிடு.

காட்சி–4

காலம் :	இரவு
இடம் :	சிற்பிகளின் கூடாரம்
நடிகர் :	பிஸ்மாக்கும், இஸ்ரேலும்

பிஸ்மாக்கு : என்ன இஸ்ரேல், நாம் நினைத்ததைவிட ஒப்புயர்வற்ற சிற்பமாயன்ருே அவன் நிருமாணித்துவிட்டான் ! நமது சிற்பக் கலேக்கு ஈடு இணே இல்லே என்று நினேத்தோமே ! ஆனுல், அவன் சிற்பம் அதி அற்புதமாகவன்ருே அமைந்திருக்கிறது !

இஸ்ரேல் : நீயும் அதைப் பார்த்தாயா !

பிஸ்மாக்கு : என்ன ! நானுமா ! இளவரசியார்கூட ஆண் வேடம் பூண்டு சென்று அச்சிற்பத்தைக் கண்டு அதிசயித்தாராமே !

இஸ் : அப்படியா ! அந்தச் சிறுவன் இருந்தல்லவா நமது சிற்பத்திற்குக் குழி தோண்டுகிருன் ! இன்று இர-வோடு இரவே அவனே............!

பிஸ் : நானும் அதைப் பற்றித்தான் தீவிரமாக யோசித்துக்கொண்டிருக்கிறேன் ! ஆனல், அவனே எப்-படி ஒழிப்பது ?

இஸ் : பிஸ்மாக்கு, நீ ஒன்றுக்கும் கவலேப்படாதே ! நான் பார்த்துக்கொள்கிறேன் !

காட்சி–5

[எங்கும் கும்பிருட்டு. இரகுவின் குடிசையை நோக்கி ஓர் உருவம் வந்துகொண்டிருக்கின்றது. அதன் கையில் ஒரு கொடுவாளிருக்கிறது. அவ்வுருவம் குடிசையை நெருங்கியதும் சிற்றுளியின் ஓசை கேட்கின்றது. அந்த உருவம் மனத்தைத் திடம் செய்துகொண்டு ஓர் இடத்தில் மறைந்து நின்று, இரகுவைக் கவனிக்கின்றது. ஒற்றைச் சிற்றுளியின் ஓசையைத் தவிர வேறு ஓசை இல்லே.]

இரகு : (தனக்குள்) அப்பாடா ! ஓரளவு இச்சிரஞ்-சீவிச் சிற்பத்தை முடித்துவிட்டேன் ! இனி இந்தப் பாரிலே எனக்கொருவர் நிகரோ ! ஆகா ! எல்லாம் அவன் கருணே ! மன்னர் அளிக்கும் பரிசு......!

ஒரு குரல் : இதுவும் அவன் கருணேதான் ! முதலில் நான் ஒரு பரிசு அளிக்கிறேன். அதை ஏற்றுக்கொள். (ஒரு பெரிய பேய்ச் சிரிப்பு) மன்னனு உனக்குப் பரிசு அளிக்கப் போகிருன் ? (ஏளனச் சிரிப்பு)

இரகு : இது என்ன விபரீதக் குரல் ! யாரது ! ஒன்றும் புரியவில்லேயே! இந்தநேரத்தில்......(வாள் அவன் மார்பைத் துளேக்கின்றது) அப்பா ! இதென்ன கொடுமை ! சே ! வலி தாங்க முடியவில்லேயே ! (மரணக் குரல்) ஐயோ ! யார் செய்த வேலேயோ, என் உயிருக்கு நமனுய் வந்துவிட்டதே ! என் உயிருக்காக நான் அழவில்லே ! நான் இறப்பதற்குள் என் உயிரின் பிரதிபிம்பமாக இந்தச் சிற்பத்தை வடித்து முடித்தேனல்லவா ! அதுவே

போதும்...! இந்தச் சிலையைப் போன்றதுதான் என் வாழ்வு. இதன் முகத்தில் தோன்றும் மகிழ்ச்சியைப் போல, என் முகமும் அமரத் தன்மை பெற்ற சிலையை ஆக்கியதால் மகிழ்ச்சி அடைகின்றது! உலகம் உள்ள வரையில் என் சிலை அழியாது! என் சிலை அமரத் தன்மை பெற்றுவிட்டது! நான் அமரன்! உம்! அப்பா! என்ன வேதனை! வாழ்...க... சிற்...பக்...கலை!

[இக்குரலைக் கேட்டு மயன் ஓடி வருகிறான்.]

மயன்: என்ன கோரக் காட்சியடா இது! மகனே, என்னவெல்லாமோ நினைத்திருந்தேனே! கடைசியில் சூழ்ச்சிக்குப் பலியாகிவிட்டாயே!

(விக்கலும் விம்மலும் இரவின் அமைதியைக் குலைக்கின்றன)

இரகு: அப்பா, நான் சாகவில்லை! நான் அ...ம...ரன்.

மயன்: நீ அமரன்தானடா! ஆனால், இனி என் வாழ்வு...!

(விக்கல், விம்மல்)

வாழ்க சிற்பக்கலை!

அருஞ்சொற்பொருள்:

கந்தருவர் - தேவசாதியில் ஒரு வகையார், வானுற - ஆகாயத்தைத் தொடும்படி, சாளரம் - பலகணி, கேசம் - தலை முடி, பொலிக - விளங்குக.

வினாக்கள்:

1. மயனின் குடிசைக்குப் பின்னணியாக அமைந்திருந்தன யாவை?
2. இரகு இயற்கை அழகில் ஈடுபடுபவன் என்பதைத் தெளிவு படுத்துக.
3. 'புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?' சந்தர்ப்பம் கூறுக.
4. இரகு தன் மனக் குறையாகத் தந்தையிடம் கூறியது என்ன?
5. மன்னன் இரகுவை எவ்வாறு ஆசீர்வதித்தான்?
6. அரசன் சிற்பக்கலையில் ஆர்வம் படைத்தவன் என்பதற்குச் சான்று கூறுக.
7. 'இரகு அமரனே,' என்பதை விளக்குக.
8. 'துன்பியல் நாடகம்' என்பது என்ன? இந்நாடகம், துன்பியல் நாடகமாவது எங்ஙனம்?

146485

RTR
825

SELVAN SENTAMIL CHELVAM

IV FORM—GENERAL

COMPILED BY

E. PANDARA NAMBIAR

EDITED BY

VIDWAN M. V. VENUGOPAULA PILLAI

JEGASELVAN & CO.,

NAGERCOIL

Copyright] [*Price Re.* 1